www.tamilarangam.net

# எரிமலை

ஆனி 1993

P'RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE, FRANCE







P'RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE, FRANCE

பிரேமதாசாவின் மரணம் பற்றிய செய்திகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

உற்பத்திப் போரில் தமிழீழ மக்கள்

www.tamilarangam.net

## ஓவியம்

ஓவியர் ஞானகுரு



வேழம் விழுந்திட வேலை எறிந்தவன்
வீரன் பழந்தமிழன்! – தமிழ்
ஈழம் நிமிர்ந்திட 'தாங்கி' தகர்த்தவன்
எங்கள் இளந்தமிழன்!

# எரிமலை

கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

பன்னிரெண்டாம் ஆண்டு

ஆனி 1993

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு



எரிமலை
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
C/O T.C.C - France.
341, Rue des Pyrenees,
75020 Paris.
Tel: 43 58 11 42


www.tamilarangam.net

## நைந்துபோன சிறிலங்கா தேசம்

சிறிலங்காவில், மிகக் குறுகிய காலத்தில், இரண்டு ஆளுமை வாய்ந்த சிங்களத் தலைவர்கள் கொலைசெய்யப்பட்டுள்ளனர். இக் கொலைகளுக்கான காரணிகளைப் பொலிஸார் ஆராய்ந்து வரும் அதே வேளையில், அரசாங்கமும், எதிர்கட்சிகளும் ஒருவரையொருவர் குற்றம் சாட்டியும் வருகின்றன. இவர்களின் மறைவினால் சிங்களதேசம் பலவீனப்பட்டுப் போயுள்ளது என்பது மட்டும் உண்மை. திறமையற்றவர் எனக் கருதப்படும் டி.பி.விஜயதுங்க எதிர்கட்சிகளின் சம்மதத்துடன் ஜனாதிபதியாக பொறுப் பேற்றுள்ளார். அரசாங்கத்தைப் பலவீனமுறச் செய்து ஏற்படும் குழப்ப சூழ்நிலையில், அரசாங்கத்தைக் கைப்பற்றுவது எதிர்க்கட்சிகளின் நோக்கமாக இருக்கலாம். ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியில், ஒருவரையொருவர் காலைவாரிவிட்டு பதவிகளைப் பற்றிக்கொள்ளும் சந்தர்ப்பங்களை எதிர் பார்த்துப் பலர் காத்திருக்கலாம். இதற்கிடையில், பிரேமதாசாவின் இறுதிச்சடங்கின் போதே, அவர் மனைவி ஹேமா பிரேமதாசா, தனது கணவரின் இடத்தை நிரப்பத் தன்னை விட்டால் வேறு ஆள் யாருமில்லை என்ற தோரணையில் பேசியுள்ளார். இவை குறித்து கருத்துவெளியிட்ட ஒரு அரசியல் அவதானி, சிறிலங்காவின் அரசியல், கோமாளித்தனமாக மாறிக்கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டார். ஜனாதிபதி ஆட்சிமுறையில் சில மாற்றங்களைக் கொண்டுவரப் போவதான புதிய ஜனாதிபதியின் கூற்று எவ்வளவு தூரம் இச் சீரழிவுச் சரிவைச் சரிசெய்யும் என்று கூறுவதற்கில்லை. அரச அதிகாரத்தைக் கைப்பற்ற இராணுவம் அரசியல் நிலைமைகளை உற்றுப்பார்த்த வண்ணம் உள்ளது.

சிறிலங்காவின் புதிய ஜனாதிபதி சாது என்று பார்த்தால் அதனைப் பொய்ப்பிப்பது போல் வீறாப்புப் பேசியுள்ளார். இனப்பிரச்சினையே இல்லையென்று தெரிவித்தார். தமிழ் மக்களைப் பாதுகாக்கவே இராணுவம் வடக்கு கிழக்குப் பகுதிகளில் நிறுத்தப்பட்டுள்ளதாகக் கூறினார். இந்த வீறாப்பைப் பெரும் புத்திசாலித்தனமாகவோ, வீரமாகவோ எவரும் கருதவில்லை. பிரேமதாசாவின் சாதுரியமான ஆளுமை இவரிடம் இல்லை என்பதை நிரூபிப்பது போலவே இருந்தது. ஆயினும், அரசியல் ஆலோசகர்களின் அறிவுரைகள் இவரை விழிப்புறச் செய்ய, முன்னைய ஜனாதிபதியின் அதே பாணியில், "சமாதானம், பேச்சுவார்த்தை" என்று 'பிரித்' ஓதத் தொடங்கியுள்ளார். அதேவேளை, முன்போலவே, பேச்சுவார்த்தைக்கான முன்நிபந்தனைகளையும் முன்வைக்கத் தயங்கவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிடவேண்டும், பிரபாகரன் நேரடியாகவே பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள வேண்டும் போன்ற பழைய பல்லவிகள் மீண்டும் எழுகின்றன. சமாதான உச்சாடனங்களுடன் இராணுவத் தீர்வு காணும் விருப்பின் தொடர்ச்சியையே வெளிப்படுத்துகின்றது. விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை மூலம் சமாதானத் தீர்வுகாணும் தமது விருப்பை மீண்டும் வலியுறுத்தியுள்ளனர். எவ்வித முன்நிபந்தனையின்றி பேச்சுவார்த்தை நடைபெறவேண்டும் எனக்கூறியுள்ளனர். அதேவேளை, சிறிலங்காஅரசாங்கம், உண்மையான சமாதானம் காணவிரும்பினால், அதற்கான தகுந்த சூழ்நிலையை உருவாக்கப் பொதுமக்கள் மீதான யுத்தத்தை நிறுத்தவேண்டும் எனக் கேட்டுள்ளனர். மக்களைக் காணாமல் செய்தல், குண்டுவீச்சுக்கள், உணவுத்தடை ஆகியவற்றை நீக்கவேண்டும் என வலியுறுத்தியுள்ளனர். சர்வதேச உலகம் பிரச்சினை தீரவேண்டும் என விரும்புகிறது. ஜனநாயக அம்சங்களை அதிகரிப்பதன் மூலம் தனது இராணுவத் தீர்வு முயற்சிக்கு வெளிநாட்டு உதவிகளை மேலும் பெற அரசாங்கம் முயலலாம். பலவீனமான அரசாங்கத்தின் இம்முயற்சி சிறிலங்காவை வெளிநாட்டு சக்திகளின் ஆதிக்கத்துள் கொண்டுவந்துவிடும். இதற்கு ஒரே மாற்றுவழி தமிழீழத்துடன் சமாதானத்தை நிலைநாட்டலேயாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பிரேமதாசாவை சூழ்ந்த அவரது தீவினைகள்

சிறிலங்கா ஜனாதிபதியாக இருந்த ஆர். பிரேமதாசா பலராலும் வெறுக்கப்பட்டவராக இருந்துள்ளார். அவரை நேசித்தவர்களை விட அவரை வெறுத்தவர்கள் அதிகம் எனலாம். எனவேதான் அவர் கோரமாக இறந்தபோது அவரின் இறப்பைப் பட்டாசு வெடிகள் தீர்த்துக் கொண்டாடியுள்ளனர். "பல எதிரிகளைக் கொண்ட மனிதர்." இவரென லண்டன் **B.B.C** கொழும்பு நிருபர் வர்ணித்தது இதன் பொருட்டுத்தான். கொழும்பில் ஒரு ரக்ஸி ஓட்டி "அவர் இறந்தது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன்." எனத் தெரிவித்தது பலரது அபிப்பிராயத்தின் ஒட்டுமொத்த வெளிப்பாடாகவே புலப்பட்டது. அன்றைய தினம் கிறிஸ்மஸ் நாள்போல் குதூகலமாகஃ காணப்பட்டதாக வெளிநாட்டு நிருபர் வர்ணித்துள்ளார். அவரின் இறப்பினால் மக்கள் நிம்மதி அடைந்துள்ளதாக சிங்கள எதிர்க்கட்சித் தலைவர் கூறியுள்ளார். "நான்கு வருடக் கொடூர ஆட்சியின் அறுவடை." என ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக் கட்சியின் தற்போதைய தலைவரான காமினி திசநாயக்கா தெரிவித்தார்.

கொழும்பு மாநகரசபை உதவி மேயராகவும், தொழிற்சங்க வாதியாகவும் செயற்பட்டுவந்த பிரேமதாசா அரசியலுள் நுழைந்த சிறிது காலத்துள், 1977ம் ஆண்டில், ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனாவால் பிரதமராக்கப்பட்டார். ஐ.தே.கட்சியினுள் பல்வேறு பதவிகளை வகித்த பிரேமதாசா, 1988ல், ஜே.ஆர். ஜெயவர்த்தனா பதவியிலிருந்து புறம் தள்ளப்பட்ட போது அதன் வாரிசாக பல்வேறு எதிர்ப்புகளிடையே நியமிக்கப்பட்டார். அவர் பதவியைப் பொறுப்பெடுத்தபோது, இரண்டு முக்கிய அரச கடமைகளை ஆற்றக்கூடிய தகுதிபடைத்தவராய் இருந்தார். ஒன்று இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் பலவந்தமாய் உள்ளே வந்த இந்திய இராணுவத்தை வெளியேற்றுவது. இரண்டாவது, இந்திய இராணுவ இருப்பைக் காரணமாக வைத்து வளர்ந்துவந்த மக்கள் விடுதலை முன்னணியின் கிளர்ச்சியை அடக்குவது. இவற்றைவிட தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தை முறியடித்தல் என்ற பாரிய பொறுப்பும் சிங்கள தேசத்தால் அவரிடம் கொடுக்கப்பட்டது. இந்திய இராணுவத்திற்கெதிரான விடுதலைப் புலிகளின் போராட்டம், பிரேமதாசாவுடன் கண்ட ராஜதந்திர ரீதியான இணக்கப்பாட்டினால் முழுமை பெற்றது; இந்திய இராணுவத்தை எம்மண்ணிலிருந்து வெளியேற்றியது. கிளர்ச்சிக்கான உடனடிக்காரணம் நீக்கப்பட்ட நிலையில், பிரேமதாசா கையாண்ட மிகக் கொடூரமான அரசபயங்கரவாதம், சிங்கள மக்கள் விடுதலை முன்னணியை நிர்மூலம் செய்வதற்கு வழிவகுத்தது.


கைது செய்யப்பட்ட அதன் தலைவர் றோகண விஜயவீர கொலை செய்யப்பட்டதுடன், மக்கள் விடுதலை முன்னணியின் இரண்டாவது கிளர்ச்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. இக்கிளர்ச்சியை அடக்குவதற்கு பிரேமதாசா மேற்கொண்ட மனிதப் படுகொலைகள் பிரேமதாசாவை இன்னொரு இடிஅமீனாக நவீன வர

**இந்திய இராணுவத்தை வெளியேற்றுவதற்கான ராஜதந்திர நடவடிக்கை**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

லாற்றில் படம்பிடித்துக் காட்டியது. இரண்டு வருடங்களில் 60000 பேரைக் கொன்றொழித்த "பெருமையுடன்" உலகில், மனித உரிமை மீறல்களைப் புரியும் நாடுகளில், சித்திரவதை, ஆட்களைக் காணாமல் செய்யும் நாடுகளில் முதலாவது இடத்தை இலங்கைக்குப் பெற்றுக் கொடுத்த சிறப்பையும், அவர் சூடிக் கொண்டார். சட்ட, நிர்வாக, நீதி அதிகாரங்களை முழுமையாக தன்னுள் வைத்துச் செயல் ஒரு சர்வாதிகாரியாக விளங்கினார். அரசின் அமைச்சரவை பெயரளவில் இருக்க, ஒருசில ஆலோசகர்களின் உதவியுடன் அவரின் பயங்கர ஆட்சி நடந்து வந்தது. இவ்வாட்சிக்கு ஜனாதிபதி பாணியிலான அரசியல் யாப்பும் துணை புரிந்தது. கொடிய விசேட சட்டங்களின் மூலம் எதிர்ப்புகள் அடைக்கப்பட்டன என்பதோடு சட்டரீதியிற்ற முறையில் பல விடயங்கள் தீர்க்கப்பட்டன. விசேஷ கொலைக்குழுக்கள், இரகசிய இராணுவங்கள், பிரத்தியேக உளவுப்படையினர் ஆகியவை மூலம் கணக்குகள் முடிக்கப்பட்டன. பத்திரிகை



பிரேமதாசாவுடன் அத்துலத்முதலி

பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டனர். அரசியல்வாதிகள் மிரட்டப்பட்டனர். இத்தகு கொலைவெறி ஆட்சிக்கு முஆளும் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருந்து கிளர்ந் சாணக்கிய செயற்பாட்டினால் முறியடிக்கப்பட்டது. 19 அத்துலத்முதலி போன்றோர் கொண்டுவந்த ஜனாதிபதி நீக்கும தீர்மானம், சபாநாயகர் முகமதுவை குத்துக்கரணம் போட வைத்த தன் மூலம் தோல்வியைத் தழுவுமாறு செய்யப்பட்டது.

இது ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி என்ற புதிய கட்சிக்கு வழிவகுத்தது.

இவரது ஆட்சியின் போது கொல்லப்பட்ட இளைஞர்களின், யுவதிகளின் தாய்மார்கள் 10000 பேர் ஓர் முன்னணியாக இணைந்து செயற்பட ஆரம்பித்தனர். இத்தகைய எதிர்ப்பினுள்ளும், ஏழைகளுக்கு வீடு கட்டிக் கொடுத்தல், சகல வசதிகளையும் கொண்ட புதிய கிராமங்களை அமைத்தல், வசதியற்றோருக்கு கடன் வசதி செய்து கொடுத்தல் போன்ற சாதாரண மக்களுக்கான திட்டங்களின் மூலம், ஒருபகுதி மக்களின் ஆதரவைத் தக்கவைத்துக் கொண்டதோடு, வெகுஜனங்களின் ஜனாதிபதி என்ற பெயரையும் பெற்றுக்கொண்டார். மேல்த்தட்டு வர்க்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஜனாதிபதி அல்லாமல், சாதாரண மக்களின் நண்பனாக அவர் தன்னைக் காட்டிக் கொள்ள முயன்ற போதிலும், இதன்மூலம் நகர்ப்புறத் தொழிலாளர்களினதும், கிராமப்புற விவசாயிகளினதும் ஆதரவைப் பெற முயற்சித்த போதிலும் சண்டித்தனமான குட்டி முதலாளித்தனமே, அவரது வர்க்கச் சார்பு என்று கூறப்படுகின்றது.

அவரது கட்சிக்குள் பல எதிரிகள் இருந்தனர். அவரால் புறக்கணிக்கப்பட்டவர்கள் அவரை அகற்றத் தருணம் பார்த்திருந்தனர். வர்க்க வேறுபாடுகள், சமூக ஏற்றத்தாழ்வுகள் பல்வேறு முரண்பாடுகளைத் தோற்றுவித்திருந்தன. எதிர்க்கட்சியினருக்கெதிரான அவரது சர்வாதிகார ஆட்சியும், அவரது கொடூர அடக்குமுறை

## அத்துலத் முதலியின் மரணத்திற்கு காரணம் யார்?

அத்துலத் முதலியின் மரணத்திற்குக் காரணமாக இருந்தவன் என நம்பப்பட்ட இளைஞன் மறுநாள் முகலன் வீதியில் இறந்து கிடக்கக் காணப்பட்டவனே என பொலிசார் குற்றம் சாட்டினர். அந்த இளைஞன் பெயர் சுப்பையா பாலகிருஷ்ணன் எனவும் கூறினர். ஆனால் நீதவான் விசாரனையின்போது அத்துலத் முதலியின் சார்பில் தோன்றிய தயாபெரோ என்ற சட்டத்தரணி அந்த இளைஞனின் பெயர் கந்தையா ரகுநாதன் எனவும், இவர் கனடா போவதற்கு குடும்பத்துடன் கொழும்பு வந்தவரென்றும், சம்பவதினத்திற்கு மூன்று நாட்களுக்கு முன் கொட்டாஞ்சேனையில் வைத்து கிருலப்பொனை பொலிசாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தவர் எனவும் தெரிவுத்துள்ளார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யும், பொதுமக்கள், இளைஞர்கள், எதிர்க்கட்சியினர் ஆகியோருக்கிடையே அவரை அகற்றுவதற்கான எதிர்ப்புச் சக்திகளை தோற்றுவித்திருந்தன. பிரேமதாசாவின் கொலைக்கு ஒருவாரத்திற்கு முன்னர் நடந்த அத்துலத்முதலியின் கொலை, பிரேமதாசாவின் மீதே சுமத்தப்பட்டது. பிரேமதாசாவின் கொலைப்படையே இதனைச் செய்திருக்க வேண்டும் என நேரடியாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்தே தாக்கப்பட்டு வருவதாகவும், மாகாணசபைத் தேர்தல் கூட்டங்களும் பிரேமதாசாவின் குண்டர் படையினரின் கைவரிசைக்கு உள்ளானதாகவும் சுட்டிக்காட்டிய காமினி திசநாயக்கா, அத்துலத்முதலியின் கொலையை பிரேமதாசாவே முன்னின்று செய்ததாக வாதிட்டார். அத்துலத்முதலி கொலையுண்ட இடத்துக்கு சிறிது தொலைவில் இறந்து கிடந்த தமிழ் இளைஞன் அத்துலத்முதலியைச் சுட்டவன் இல்லை என்பதையும் பல ஆதாரங்களுடன் நிரூபித்தார். அத்துலத்முதலியுடன் நின்றோர் பலர், இருவரும் ஒருவர் இல்லை என்பதைச் சத்தியக் கடுதாசிகள் மூலம் சாட்சியப்படுத்தினர். இருவரும் வெவ்வேறு உடைகளை அணிந்திருந்ததாகத் தெரிவித்தனர். இறந்து கிடந்தவர் கையில் கிடந்த கைத்துவக்கினால் அத்துலத்முதலி சுடப்படவில்லை என, அத்துலத்முதலியின் உடலினுள் கிடந்த ரவைகளை ஆராய்ந்த, அரச ஆராய்ச்சித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். இறந்து கிடந்தவர் சுப்பையா பாலகிருஷ்ணன் என்றும், அவர் விடுதலைப் புலி அமைப்பைச் சேர்ந்தவர் என்றும் பொலிசாரும், அரச செய்தி நிறுவனங்களும் தெரிவித்தமைக்கு மாறாக, இறந்து கிடந்தவர் கந்தையா ரகுநாதன் என்று தெரிவித்தனர். மேலும் கொழும்புக்கு வரும் தமிழர்களை அடையாளம் காண்பிக்கவும், எதிர்க்கட்சியினர் மீது தாக்குதல் நடத்தவும், பிரேமதாசாவினால் பயன்படுத்தப்பட்டு வந்த EPDP குழுவினரை கொழும்பிலிருந்து அப்புறப்படுத்தி, இராணுவக் கட்டுப்பாட்டில் வைக்குமாறும் எதிர்க்கட்சியினர் கோரிக்கை விடுத்தனர். அத்துலத்முதலியின் கொலை விடயத்தில், அரசாங்கம் விடுதலைப் புலிகளைக் குற்றஞ்சாட்டியது. எதிர்க்கட்சியினர் பிரேமதாசாவை ஆணித்தரமாகக் குற்றஞ்சாட்டினர். ஜனாதிபதிப் பதவிக்கான போட்டியில் முக்கிய வேட்பாளரான அத்துலத்தமுதலியை பிரேமதாசா கொலைசெய்துவிட்டதாகத் தெரிவித்தனர். எனவே பிரேமதாசாவின் கொலை அத்துலத்முதலியின் ஆதரவாளர்களாலோ, விசுவாசமான இராணுவத்தினராலோ வஞ்சம் தீர்க்குமுகமாக செய்யப்பட்டதெனவும் ஊகம் தெரிவித்தனர். மேலும் இன்னொரு சாரார் விடுதலைப் புலிகளே செய்தனர் எனவும் வாதாடினர். ஸ்னைப்பர் துப்பாக்கியால் தூர இருந்து சுடப்பட்டதாகவும் அவர்கள் வாதாடினர். சமூக, அரசியல் சூழ்நிலைகளை நன்கு ஆராய்ந்து பிரேமதாசாவிற்கு அரசியல் சங்கடத்தை ஏற்படுத்தும் முகமாக, விடுதலைப் புலிகளினால் மிக நுணுக்கமாகத் திட்டமிட்டுச் செய்ததாக நிரூபிக்க முயன்று வருகின்றனர். விடுதலைப் புலிகள் இக்கொலையை செய்திருந்தால், கனடாவுக்குச் செல்ல இருந்த கந்தையா ரகுநாதனை சுட்டு வீதியில் பொலிசார் வீசியெறிய வேண்டிய காரணம் என்ன? கனடா செல்லவென குடும்பத்துடன் கொழும்பு வந்த கந்தையா ரகுநாதனை கிருலப்பொனைப் பொலிசார் சம்பவத்துக்கு 3 நாட்களுக்கு முன்னர் கைது செய்ததாகவும், தடுத்து வைத்திருந்ததாகவும், அத்துலத்தமுதலியின் குடும்ப வழக்கறிஞர் தயா பெரேரா நீதவான் விசாரணையின் போது கூறக் காரணம் என்ன? அத்துலத்

## "அப்பே மாத்தையாட்ட ஜயவேவா"

**சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவை கொலை செய்ததாகக் கூறப்படும் இளைஞன், பிரேமதாசாவின் நெருங்கிய உதவியாளன் மொகிதீனுடன் அந்நியோன்னிய நண்பனாய் இருந்தார் எனவும், பிரேமதாசாவின் சுஜ்சாரித்த இல்லத்திற்கு அடிக்கடி போய்வந்தாரென்றும், ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ விபரங்களின் போது ஹெலிகொப்டரில் பயணம் செய்துள்ளாரென்றும் கொழும்பிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.**

**அன்றைய தினம் சைக்கிளில் வந்த இளைஞனைக் கண்ட மொகிதீன் "நீ என்ன இங்கு செய்கிறாய்" என்று கேட்டுள்ளார். மேலும் அவனையும் மீறி முன்னோக்கி வந்த படி "அப்பே மாத்தையாட்ட ஜயவே" என்று கூறிக்கொண்டு பிரேமதாசாவை நெருங்கிய பொழுதே குண்டு வெடித்ததாகக் கூறப்படுகிறது. இதன்மூலம் அவ்விளைஞன் பிரேமதாசாவிற்கு மிக நெருக்கமான ஒருவனாக இருந்துள்ளான் என பொலிசார் கண்டுபிடித்துள்ளனர்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

முதலியின் கொலைக் குற்றச் சாட்டு தமது அரசாங்கத்தின் மீது விழுவதைத் தடுப்பதற்காக பொலிசார் செய்த அவசரக் கொலை என்றும் இன்னொரு சாரார் தெரிவிக்கின்றனர்.

பிரேமதாசாவின் கொலை நன்கு திட்டமிட்டுச் செய்யப்பட்டதாகத் தெரிகின்றது. உடம்பிலே வெடிகுண்டை வைத்துத் தற்கொலை பாணியில் நடத்தப்பட்டதாகவும் மிக நுட்பமான தொழில் நுட்பம் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும், எனவே தமிழீழ விடுதலைப் புலிகளே இதனைச் செய்தனர் எனவும் பொலிசார் குற்றஞ் சாட்டுகின்றனர். இக்குற்றச் சாட்டை ஆதாரப்படுத்துவது போல் பல உள்நாட்டு, வெளிநாட்டுப் பத்திரிகைகள் செய்திகளையும், கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளன. நீண்டகாலமாக தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்டுவந்த தாக்குதல்களின் எதிரொலியே இதுவெனத் தெரிவித்துள்ளன. இன ஒடுக்குமுறையின் விளைவு இதுவென நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை ஆசிரியர் தலையங்கம் தீட்டியுள்ளது. தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைக்கான பதிலடி என்று வோல் ஸ்ரீட் ஜேர்னல் என்ற பத்திரிகை தெரிவிக்கின்றது. ஒரு மக்கள் மீது தாக்குதல் நடாத்துவதன் மூலம் இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது. அதன் எதிர் விளைவு இதுதான் என எகனமிஸ்ட் என்ற ஆங்கிலப்பத்திரிகையின் கட்டுரை கூறுகின்றது. பிரேமதாசா தமிழ் மக்களுக்கு எப்போதும் நண்பனாக நடந்ததில்லை. 1983ம் ஆண்டுக் கலவரத்தின் போது, தமிழ் வீடுகளின் பட்டியலைக் கையில் வைத்தவாறு, குண்டர் படையுடன் கொலைவெறித் தாண்டவம் ஆடியுள்ளார். வடக்கு கிழக்குத் தற்காலிக இணைப்பையே எதிர்த்து, அதனை மாற்ற அயராது முயன்றுள்ளார். பாராளுமன்றத் தெரிவுக்குழு அரசியல் தீர்வைக் கொண்டுவரும் என்ற மாயக் கேடயத்தை வைத்துக்கொண்டு, விடுதலைப் போராட்டத்தை இராணுவ ரீதியாக அழிப்பதே அவரது நோக்கமாக இருந்தது. JVPஐ முற்றாக அழித்த கனவில் அவர் லயித்திருக்கவேண்டும். மலக்குண்டுகளையும் தமிழ் மக்கள் மறந்துவிடவில்லை. ஆயினும் பிரேமதாசாவின் கொலை உள்வீட்டுப் பிரச்சினை என்றே ஆதாரங்களுடன் முன்வைக்கப்படுகின்றது. ஆளும் கட்சியினுள் தனது அரசியல் அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ள விரும்பிய ஒருவரின் சதித்திட்டம் என எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார். இதனை நிரூபிப்பதுபோலவே கொலை நடத்தப்பட்டுள்ளது. கொலையைப் புரிந்த இளைஞன் பிரேமதாசாவின் மிக நெருங்கிய விசுவாசமான ஆதரவாளன் என்பது தெரிகின்றது. கடந்த இரண்டு வருடங்களாக பிரேமதாசாவின் சுஜாரித்த வீட்டுக்கு அடிக்கடி போய்வந்தவர் மாத்திரம் அன்றி அங்கு தங்கியும் இருந்துள்ளதாக அறிய வருகின்றது. மேலும், பிரேமதாசாவின் அந்தரங்க உதவியாளர் மொகிதீனின் அந்நியோன்னிய நண்பன் என்பதும் உறுதிப்பட்டுள்ளது. பிரேமதாசா ஹெலிகொப்டர்களில் உத்தியோகபூர்வ பயணங்களை மேற்கொள்ளும் போது அவருடன் இந்த இளைஞன் அடிக்கடி சென்றதாக காமினி திசாநாயக்க தெரிவித்துள்ளார். ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் பிரேமதாசாவின் அடியாளாக இருந்துள்ளார் என்பது புலப்படுகின்றது. பிரேமதாசாவின் வீட்டுக்கு அருகே கடையில் பங்குதாரராகப் பணிபுரிய அவ்விளைஞனுக்கு பெருந்தொகைப் பணம் பிரேமதாசாவால் கொடுக்கப்பட்டிருந்ததாகவும் தகவல்கள் வெளிவருகின்றன. எனவேதான் அவ்விளைஞன், பிரேமதாசா தலைமைதாங்கி வந்த மேதின ஊர்வலம் ஆமர் வீதிக்கு வருமுன்னர் அப்பகுதியில் சைக்கிளில் நடமாடித் திரிய முடிந்ததென்றும், பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த 25000 படையினரின் கண்களில் மண்ணைத் தூவ முடிந்ததென்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மெசஞ்ஜர் வீதியூடாக வந்த இளைஞனை பிரேமதாசா கையசைத்து அழைத்ததாகவும், ஆனால் அவ்விளைஞன் சைக்கிளுடன் பிரேமதாசாவிற்கு ஐந்தடி தூரத்திற்கு வந்தபோதே, மொகிதீன் “நீ இங்கே என்ன செய்கிறாய்?” என்று கூறி அவ்விளைஞனை அப்புறப்படுத்த முயன்றதாகவும் பொலிஸ் சாட்சியம் கூறுகிறது. பிரேமதாசாவிற்குப் புரியவந்த நேரத்தில் காலம் கடந்துவிட்டது. குண்டுவெடித்து பிரேமதாசா சிதறுண்டுபோனார்.

பிரேமதாசாவின் மரணம் குறித்து கருத்து வெளியிட்ட விடுதலைப்புலிப் பேச்சாளர், “தானே உருவாக்கிய சூழ்நிலைக்கு அவர் பலியாகிவிட்டார்.” எனத் தெரிவித்துள்ளார். அத்துலத் முதலி, பிரேமதாசா ஆகிய இருவர்களின் கொலையையும் செய்யவில்லையென விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் ஆணித்தரமாக மறுத்துள்ளது.

- மதி -

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நூல் அறிமுகம்


புலிகள் இயக்கத்தின் பெண் போராளிகள் (WOMEN FIGHTERS OF LIBERATION TIGERS) என்ற பெயரில் ஆங்கில மொழியில் ஒரு புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது.

புலிகள் இயக்கத்தின் மகளிர் படையினது வரலாற்றுப் பிறப்பையும், அதன் படிநிலை வளர்ச்சிகளையும், அது கொண்டிருக்கும் ஒப்புவமையற்ற தனித்துவமான போர் வரலாற்றையும் இந்நூல் தெளிவாகச் சித்தரிக்கின்றது.



திருமதி அடேல் பாலசிங்கம்

புலிகள் இயக்கத்தால் உருவாக்கப்பட்ட பெண்கள் படையணியின் பிறப்பிற்கும், அதன் உன்னத வளர்ச்சிக்கும், சாதனைகளுக்கும் பின்னால் இருக்கும் 'பிரபாகரன்' என்ற பெருமனிதனின் வரலாற்றுப் பங்கையும் இந்நூல் எடுத்துக் கூறுகின்றது.




தமிழீழ விடுதலைப் போராட்டத்தைத் தலைமை தாங்கி வழி நடாத்தும் புலிகள் இயக்கத்துடன் அணிதிரண்டுள்ள தமிழீழப் பெண்கள், இந்தத் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு மிகப் பெரிய பங்களிப்பை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்ற வ்ரலாற்று உண்மையை, இந்நூல் வலியுறுத்திக் கூறுகின்றது.

அத்துடன், ஆயுதப் போராட்டத்தின் பிறப்பிற்கு முன்பு நடைபெற்ற அகிம்சை வழிப் போராட்டங்களிலும் தமிழீழப் பெண்கள் தீவிர பங்களிப்புக்களைச் செய்து, தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு உரம் சேர்த்திருக்கின்றார்கள் என்ற உண்மையையும் எடுத்துக்கூறி, ஒட்டுமொத்தத்தில் தமிழினத்தின் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு தமிழீழப் பெண்கள் வழங்கிவரும் உன்னத பங்கை, இந்நூல் உலகிற்கு நிறுவிக் காட்டியுள்ளது.

இத்தகையதொரு பின்புலத்திலிருந்து எழுதப்பட்ட இந்நூல், பெண்போராளிகளது போர் வரலாற்றையே பிரதானமாகச் சுட்டிக்காட்டுகின்றது.

போர்க்களங்களில் பெண்புலிகள் காட்டிவரும் போர்த்திறன்களையும், உலகே வியக்கக் கூடிய அளவுக்கு எங்கனம் புலிகள் இயக்கத்தின் பெண்கள் படையணி ஒரு இராணுவ வளர்ச்சியைப் பெற்றது என்பதையும், இந்நூல் ஆழமாக எடுத்துக் விளக்குகின்றது.

1986ஆம் ஆண்டு, மன்னார் அடம்பனில் பெண் புலிகள் பங்கு கொண்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முதலாவது தாக்குதலுடன் ஆரம்பித்து, போரில் புதிய பரிமாணத்தை வெளிக்காட்டிய பலாலிச் சண்டை வரை, மகளிர் படையணியின் போர் வரலாறு இந்நூலில் விளக்கிக் கூறப்பட்டுள்ளது.

இந்த 6 வருடப் போர் வரலாற்றில் பெண் புலிகளது பங்கும் இதில் அவர்கள் பெற்றுவரும் வெற்றிகளும், பெண்கள் படையணியின் இராணுவ வளர்ச்சியும் ஒரு வரலாற்றுத் தொடர்பில் இந்நூலில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கானகத்தில் பெண் விடுதலைப் புலிகளுடன் திருமதி அடேல்.

காடுகளில் நடைபெறும் கரந்தடிப் போர்முறையிலிருந்து நேரடிச் சண்டைவரை, பெண்போராளிகள் எப்படிச் சண்டையிடுகின்றார்கள் என்ற தகவல்களை, போர் அனுபவம் வாய்ந்த பெண் போராளிகளைச் செவ்வி கண்டு நூலாசிரியை வெளிப் படுத்தியுள்ளார்.

பழமைவாத சமூகத்தின் அடக்குமுறைக்குள் வாழும் தமிழ்ப் பெண்கள், எப்படி ஆயுதம் தூக்கி பலம் வாய்ந்த இந்திய சிறிலங்காப் படைக ளுக்கு எதிராகப் போர் புரிந்து வெற்றிகளைப் பெற்றுவரு கின்றார்கள் என்பது, மேற்குல கத்தைப் பொறுத்தவரை ஒரு ஆச்சரியமாகவே இருந்து வரு கின்றது.

பெண் போராளிகளிடமி ருந்து பெற்ற செவ்விகள், முக்கியமான தகவல்கள் மற்றும் ஆவணங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டிருக் கும் இப்புத்தகம், மேற்குலகத் தின் ஆச்சரியத்தைப் பெரும ளவு தீர்த்துவைக்கும்.

அவுஸ்திரேலியாவைப் பிறப் பிடமாகவும், தமிழீழத்தைத் தனது தாயகமாகவும் வரித்துக் கொண்ட இந்நூலின் ஆசிரியை யான அடேல் ஆன் (திருமதி அன்ரன் பாலசிங்கம்) நீண்டகா லமாக தமிழீழ விடுதலைப்புலி களுடன் தன்னை இணைத்து இயங்கி வருகின்றார்.

1984ம் ஆண்டு இவர் 'பெண்களும் புரட்சியும்' என்ற தொரு நூலையும் எழுதியிருந் தார். அந்த நூலும் புலிகள் இயக்கத்தின் வெளியீடாகவே (ஆங்கிலத்திலும் தமிழிலும்) வெளியிடப்பட்டிருந்தது. அத்து டன் பெண்விடுதலை தொடர் பாகப் பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

'புலிகள் இயக்கத்தின் பெண் போராளிகள்' என்ற இந்நூல், 116 பக்கங்களைக் கொண்டது (படங்கள் நீங்கலாக).

முன்னுரை, முடிவுரை நீங்க லாக எட்டு அத்தியாயங்களில் பெண்போராளிகளது போர்வ ரலாறு எழுதப்பட்டுள்ளது.


ஒவ்வொரு அத்தியாயத்தி லும் கருப்பொருளுக்கேற்றாற் போல் நிழற்படங்களும் சேர்க்கப்பட்டு, புத்தகம் ஆக்கப் பட்டுள்ளது.

பெண் புலிகளின் போர் வாழ்க்கையை வெளிப்படுத்தும் 28 நிழற்படங்கள், இதில் இணைக்கப்பட்டுள்ளன.

ஆங்கில மொழி மூலமான இந்த பெண் புலிகளின் போர் வரலாற்று நூல், வெளிஉலக மக்களுக்கு ஒரு சிறந்த நூலாக அமையுமென்பது திண்ணம். ■


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**கே.வி.ராமசாமி**

# தமிழ்நாட்டில் வீதி நாடக இயக்கம்



தெரு நாடகம் என்று அறியப்படும் இந்த மூன்றாம் வகை நாடகத்தை தமிழ்நாட்டுக்குச் சமீபத்தில், அதாவது எழுபதுகளின் இறுதியில் அறிமுகப்படுத்தியது வீதி என்ற அமைப்புத்தான். சமீபத்தில் என்று நான் கூறுவதின் நோக்கம் இதற்கு முன்னால் சுதந்திரப் போராட்ட காலத்தில் இந்த நாடக வடிவம் போராட்ட ஆயுதமாக தமிழ்நாட்டில் எங்கேயாவது ப்யன்படுத்தப்பட்டதா என்பது பற்றி நமக்குத் தெளிவாகத் தெரியாது. மேலும், கூத்து, ஜாத்ரா போன்ற நமது புராதன கிராமிய நாடக வடிவங்கள், ப்ரோசீனியம் மேடையின் தட்டை வடிவமைப்புக்குள் அடங்குவது அல்ல என்பதுவும், வீதி நாடகம் பற்றிய சமஸ்கிருத பழைய நூல் ஒன்று இருப்பதாகவும் நான் ஒரு நாட்டிய மணியின் மூலம் கேள்விப்பட்டிருக்கிறேன். நான் இங்கு வலியுறுத்த விரும்புவது இந்த வகை நாடகம், முற்றிலும் புதிய கண்டுபிடிப்போ நமக்கு அந்நியமானதோ அல்ல. நமது மரபில் இருப்பதுதான்.

ஒரு மாலைப் போதில் மெரீனா கடற்கரையில் இலக்கியத் தொடர்புடைய சில இடதுசாரி சிந்தனையாளர்கள் கூடிப் பேசியதில் பிறந்ததுதான் வீதி. இதில் பங்குகொண்ட பெரும்பான்மையோர் மத்திய மாநில ஸ்தாபனங்களில் அல்லது வங்கியில் பணிபுரிந்த மத்தியதர வர்க்க அறிவு ஜீவிகளே. தொடக்கத்தில் இது ஒரு புதிய நாடக வடிவாக்கம் என்ற கலை பூர்வமான பிரக்ஞையை விட, தங்கள் "எதிர்ப்புக் குரல்" வெளிப்பாட்டுக்குச் சுலபமான வலுவான ஒரு ஊடகமாகத்தான் இவர்களால் இது கருதப்பட்டது.

நான் பல இடங்களில் பல முறை கூறியிருப்பது போல, பார்வையாளர்களோடு பௌதீக இடைவெளியை முற்றாக இல்லாமல் செய்ய முயல்வது, மேடையை மறுப்பது, ஒளி ஒப்பனைகள் இல்லாமல் இருப்பது என்ற இந்த நாடக வடிவம், வடிவ அமைப்பிலேயே உள்ளார்ந்த ஒரு சமூகப் பார்வையை, ஒரு மதிப்பீட்டை தன்னகத்தில் கொண்டிருக்கிறது. 'வீதி'யும் தன் அமைப்புவடிவில் இதே மதிப்பீடுகளை, பார்வையைக் கொண்டிருந்தது. இதில் தலைவர், செயலாளர், அங்கத்தினர்கள் என்று கிடையாது. அனைவரும் கூடி ஒரு வட்டவடிவில் அமர்ந்து விவாதித்து "வீதி" யின் செயல்பாடுகளை முடிவுசெய்வர். இதில் இதுவரை போடப்பட்ட எந்த நாடகத்தையும், நான்தான் இதன் நாடகாசிரியர் என்றோ, நான் இயக்கினேன் என்றோ பெருமை பாராட்டமுடியாது.

இதில் நாடகம் போடப்பட்ட முறை ரொம்பவும் வினோதமானது. நாடகம் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்ட நாளில் மதியம், நாங்கள் பல்கலைக்கழக வளாகத்தில் கூடுவோம். எங்களில் யாருக்கும் அன்று மாலை என்ன நாடகம் போடப்போகி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

றோம் என்று தெரியாது. சந்தித்த நாங்கள் பல்வேறு சமூக, அரசியல் பிரச்சினைகள் பற்றி விவாதிப்போம். பார்க்கும் யாருக்கும், அவர்கள் இன்று மாலை ஒரு நாடகம் போடக் கூடியிருக்கின்றார்கள் என்று தோன்றாது. விவாதத்தின் இடையில் யாராவது அன்று மாலை போடவேண்டிய நாடகத்தின் கருத்தையும், உருவத்தையும் Suggest செய்வார்கள். பின் விவாதத்தில் எல்லோருடைய பங்களிப்புடனும், அந்த நாடகம் செழுமைப்படுத்தப்படும். பின் யார் யார் என்ன பாத்திரத்தை ஏற்பது என்று தீர்மானிக்கப்படும். யார் என்ன பேச வேண்டும் என்ற அடிப்படை மட்டும் சொல்லப்படும். பின் அவர்களே தங்கள் வசனங்களை Style யை உருவாக்கிக் கொள்வார்கள். பாத்திரத்தின் வாயில் ஆசிரியனின் வசனத்தை திணிக்கும் வழக்கம் வீதியில் கிடையாது. பின் இரண்டு அல்லது மூன்று ஒத்திகை பார்த்தபின் நாங்கள் எதிரே உள்ள கடற்கரை நோக்கி நடக்கத் தொடங்குவோம்.

www.tamilarangam.net

இப்படி மேடையேற்றப்பட்ட அல்லது நிகழ்த்தப்பட்ட நாடகங்கள்தான் 'பசி', 'வேலை', 'நவீன புத்தன்' 'சடுகுடு', 'சுயம்வரம்', 'அக்னிப் பிரவேசம்' இன்னும் சில நாடகங்கள். பிரக்ட்டின் மொழிபெயர்ப்பு நாடகம் **'Exception and the rule'** மட்டும் எழுத்து வடிவம் பெற்றது.

அனுபவத்தால் இவர்கள், இந்த நாடக வடிவத்தின் சக்தி, இவர்களால் சென்றடையக்கூடிய மக்கள் தொகையின் எல்லை, தங்களது போதிய பயிற்சி இன்மை இவைகளை உணர்ந்தனர்.

தாங்கள் பயிற்சி பெறவும், ஒருங்கிணைந்த பல்வேறு சிறு சிறு குழுக்கள் மூலம் இந்த நாடக வடிவை தமிழ்நாட்டின் எல்லா ஊர்களுக்கும் கொண்டு செல்லவும் கருதி, நண்பர் கோ.ராஜாராமின் உதவியுடன், சென்னை சோழ மண்டலத்தில், பாதல் சர்க்காரின் பத்து நாள் நாடகப் பட்டறை நடத்தப்பட்டது. இதில் நண்பர்கள் வந்து பங்கு பெற்றனர். இலங்கையிலிருந்து கூட நண்பர் அன்ரனி ஜீவா பயிற்சி பெற்றார்.

ஆனால், மத்தியதர அரசு ஊழியர்களான இவர்கள் தங்கள் எல்லைகளை யதார்த்தத்தில் பார்க்க மறுத்தது, இவர்களது எல்லைகளைக் கணக்கில் கொள்ளாது தூரத்திலிருந்து இவர்களை இயக்க முயன்ற புறச் சக்திகளின் தலையீடு, ஐக்கிய வாழ்வு, கூட்டுச் செயல்பாடு முதலிய அடிப்படைக் கோட்பாடுகளை மறந்து, தன்முனைப்போடு செயல்படத் தொடங்கிய சிறிய ஈகோக்களின் மோதல், இன்னும் பல காரணங்களால் இந்த வீதி நாடக இயக்கம் ஒரு அகால முடிவை அடைந்தது.

ஆனால் வீதி துவக்கிய இந்த சோதனை முயற்சியும், தமிழ் நாட்டின் நாடகப் படைப்பாளிகளை ஒருங்கிணைத்து அது நடத்திய பாதல் சர்க்கார் நாடகப் பட்டறையின் அனுபவங்களும் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் இன்னும் எதிரொலித்துக் கொண்டிருக்கின்றன.

* * *

# சிலம்பம்
## தமிழர்களின் தற்காப்புக் கலை



**மலேசியாவிலுள்ள சிலம்பம் கல்விக்கழகம் 'சிலம்படி' என்ற தற்காப்புக் கலையை யப்பான் ஹீரோசிமாவில 1994ல் நடைபெறவிருக்கும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் ஒரு கண்காட்சி நிகழ்ச்சியாக நடத்துவதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது. மலேசிய எரிபொருள் தபாற் தொடர்புகள் அமைச்சர் திரு. சாமிவேல் அவர்களும் இம்முயற்சியில் இறங்கியுள்ளார்.**

**சிலம்பம் கல்விக்கழகம் தமிழரின் தற்காப்புக் கலையொன்றை சர்வதேச ரீதியில் அறிமுகப்படுத்தும் முயற்சியானது பாராட்டைப் பெற்றுள்ளது.**

**இக் கல்விக்கழகம் 65 நிலையங்களில் 2000 மாணவர்களுக்கு பயிற்சியை அளித்து வருகின்றது. 'கராட்டி' என்று யப்பானிய மொழியில் விளங்கும் கரமடி என்ற தமிழர் தற்காப்புக் கலையானது இன்று உலகளாவிய ரீதியில் சிறப்புற்று விளங்குவதையும், காஞ்சிபுர பௌத்த பிக்கு ஒருவரால் யப்பானுக்கு இக்கலை எடுத்துச் செல்லப்பட்ட உண்மையையும், இது தொடர்பாக விளக்குகையில் ஒரு ஆய்வாளர் எடுத்துக் கூறியுள்ளார். ■**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எங்கடை அண்ணை!

* ஜெயா *

அண்ணை அப்படித்தான்.
ஒருகணம் வாய்விட்டுச் சிரிக்கும்;
மறுகணம் நெருப்பாய்க் கனலும்.
பேசும்; நன்றாய்ப் பேசும்.
கேட்கும் செவிகள் திறன்கள் இழக்கச்
சதிரம் நடுங்கும்.
இதயக் கலங்கள் "விண்" என்று வலிக்கும்
வரைக்கும் பேசும்.

பின், கிண்டல் செய்யும்,
கொஞ்சிப் பேசும், கெஞ்சியும் பேசும்.
கீச்சங்காட்டும், விளையாடும்.
"தம்பிடி" என்று வயிற்றில் குத்தும்;
நோதல் கொண்டு நெளிந்து நின்றால்
கெக்கட்டமிட்டுச் சிரிக்கும்.
பின் நெருங்கி வந்து கட்டிப்பிடிக்கும்.
தலையைத் தடவும்.
என்புகள் நொருங்க இறுக அணைத்து
முத்தம் தரும்; அன்பைப் பொழியும்
அம்மாவின் ஆசை முத்தங்கள்
போன்றது சுகமாய் இருக்கும்; நிஜமாய் இருக்கும்.

* * *

"தொலைபேசி வாங்கியை" கையில் எடுக்கும்
நண்பன் முழிப்பான்.
கைகள் நடுங்க சைகை செய்வான்.
உதடுகள் அசையும் வார்த்தை வெளிவரா.....

"உனக்குத்தான்"
"இல்லை உனக்கு...."
"இல்லை.... அவனுக்கு"
"அமாம்! எனக்குத்தான்"
...........
"அண்ணே"
"டேய்"
இயங்க மறுக்கும் என்பும் தசையும், தசையிடை நாரும்
நாடிகள், நரம்புகள், உணரும் புலன்கள்
சட்டென்று உயிர்பெற்று சடுதியாய் பாயும்.
"சுகமாய் இருக்கிறியா?"
"ஓம் அண்ணை"
"கடைசியாய் வந்த வெளிச்சம் படிச்சியா?"
"ஓ..ம் அ..ண்..ணே", இதயம் உதறும் பொய்தான்.
குறுக்கும், மறுக்கும்
நீட்டியும் குறுக்கியும் கேள்விகள் கேட்கும்;
உண்மையை அறியும் குறியில் வெல்லும்.
ஏசும்; நன்றாய் ஏசும்.
செவிகள் வலிக்கும் வரைக்கும் ஏசும்.
பின்பு குளிர்ந்து "மகனே" என்கும்,
"மச்சான்" என்கும்.

செவிகள் இனிக்கும்
இதயம் கனிய கண்கள் பனிக்கும்.

கிட்டண்ணை அப்பிடித்தான்;
ஒருகணம் வாய்விட்டுச் சிரிக்கும்,
மறுகணம் நெருப்பாய்க் கனலும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தமிழீழ தேசம் எங்கணும் கடந்த மாவீரர் தினம் மக்களால் உணர்வுபூர்வமாக அனுட்டிக்கப்பட்டது. மாவீரர்களின் வாழ்க்கை நினைவுகளை மீட்டும் வண்ணமாக வீதியெங்கும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மாவீரர்களின் நினைவு சுமந்த கீதங்கள் எங்கும் ஒலித்தவண்ணமாக இருந்தது. மக்கள் அந்த மாவீரர்களை இதயங்களில் சுமந்து மாவீர்கள் நினைவுநாள்க் கடமைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். கிராமங்கள் தோறும் மாவீரர் நினைவுரை ஆற்றுகைகளும், கலை நிகழ்ச்சிகளும் நடந்தேறின. பாடசாலைகளிலும், வீடுகளிலும் ஏனைய முக்கிய ஸ்தலங்களிலும் தமிழீழத் தேசியக்கொடி பட்டொளி வீசிப்பறந்து கொண்டிருந்தது. காயம்பட்ட போராளிகளின் பயிற்சிக் கல்லூரியில் மாவீரர் தின நிகழ்ச்சியில் கலந்துகொண்ட திரு மகேந்திரராசா அவர்கள் சிறப்புரை ஆற்றினார். தமிழீழ மக்கள் எல்லோரும் இணைந்து, ஆக்கிரமிப்பு சக்திகளுக்கெதிராகப் போராட முன்வரவேண்டும் என்றும் மாவீரர்களின் கனவை நனவாக்க வேண்டும் எனவும் அறைகூவல் விடுத்திருந்தார். ஐந்து வாரங்களாக இவ்வெழுச்சி விழா தமிழீழ மக்களால் கொண்டாடப்பட்டது.

www.tamilarangam.net

# மாவீரர் தினம் 1992






www.tamilarangam.net

# பாடசாலைகளில்



# கடல்வளம் சார் கல்வி

**ஏ.எஸ். ஆனந்தன்**
*(பகுதிநேர விரிவுரையாளர்
மீன்பிடி, புவியியற்துறை
யாழ். பல்கலைக் கழகம்)*

மனிதன் பொருளாதார வளமுடையவனாகத் திகழ வேண்டுமாயின் தானே சுயமான ஒரு தொழிலைத் தேடிக் கொள்ள வேண்டியவனாகின்றான். இதற்குத் தொழில் பற்றிய அறிவு, திறன், மனப்பாங்கு ஆகியன அவசியமாகின்றன. இத்தகைய ஒரு நிலையை அனுபவரீதியாக வளர்க்கும் முகமாகவே தொழில் நுட்பக் கல்வி கலைத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு பொதுக் கலைத்திட்டத்தில் இணைபுபடுத்திக் கற்பிக்கப்படுகின்றது. இன்று தொழில் முன்னிலைப் பாடநெறிகளில் கடலக மீன்பிடி (Marine Fisheries) உள்நாட்டு மீன்பிடி (Inland Fisheries) ஆகிய இரு பாடங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. கலைத்திட்டத்தில் இப்பாடநெறிகள் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும் பாடசாலைகளில் இப்பாடத்தினைக் கற்பிப்பதற்கான எந்தவித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் இதுவரையில் எவராலும் முன்னெடுக்கப்படவில்லை. ஏனைய தொழில் முன்னிலைப் பாடத்திற்கென ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டபோதிலும் கடல்வளம் சார் கல்விக்கான ஆசிரியர் நியமனங்கள் இன்றுவரை வழங்கப்படாமை இத்துறை கல்வி ரீதியாக எவ்வளவு தூரம் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளது என்பதைக் காட்டுகின்றது. கடந்த வருடம் முன்வைக்கப்பட்ட ஆண்டு 9க்கான வாழ்க்கைத் திறன் கற்கையில் கூட கடல்வளம் புறக்கணிக்கப்பட்டது என்றும் இங்கு குறிப்பிடத் தக்கது. விவசாய பாட கற்கைகளில் அலங்கார மீன் வளர்ப்பும் கடற்தாவரமும் என்ற அலகு மட்டுமே சேர்க்கப்பட்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இத்தகைய ஒரு பின்னணியில் 1993ஆம் ஆண்டு தொடக்கம் தமிழீழப் பகுதியில் உள்ள பாடசாலைகள் தோறும் கடல்வளம் சார் கல்வியைப் புகுத்துவதற்கான முயற்சிகள் முனைப்புடன் செயற்பட்டு வருவதை அறியக்கூடியதாக உள்ளது. இத்தகைய சிறந்த முயற்சியில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்களின் ஆசியுடன் யாழ். பல்கலைக்கழக விலங்கியல் துறையினரும், தொண்டமானாறு வெளிக்கள நிலையமும், யாழ். கல்வித் திணைக்களமும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் ஒன்றிணைந்து இத்துறைசார் நிபுணர்கள், அறிஞர்கள், ஆசிரியர்களின் உதவியுடன் இதற்கென ஒரு கலைத் திட்டத்தினை பொதுக் கலைத்திட்டத்திற் கிசைவாகவும் எமது சூழலுக்குப் பொருத்தமானதாகவும் ஆக்கியுள்ளனர். அத்துடன் கருத்தரங்குகள், செயலமர்வுகள், பயிற்சி வகுப்புக்கள் மூலம் இப்பாட நெறியினைப் போதிப்பதற்கான ஆசிரியர்களுக்கும், விஞ்ஞான, சமூகக்கல்வி ஆசிரிய ஆலோசகர்களுக்கும் முன்னோடிப் பயிற்சியினை வழங்கி வந்துள்ளமையும் இங்கு சிறப்பான நடவடிக்கையாகவுள்ளன.

கடல்வளம் சார் கல்வியானது ஆண்டு 4, 5 வரையில் ஆரம்ப விஞ்ஞான பாடத்திலும், ஆண்டு 6-9 வரை சமூகக்கல்வி, விஞ்ஞான பாட பரப்பிலும் பொருத்தமான அலகுகளுடன் இணைத்துக் கற்பிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இத்துடன் 7-8 வரை வாழ்க்கைத்திறன் கற்கை நெறிக்கான பாடத்திட்டமும் வடிவமைக்கப்பட்டு இதற்கான கைநூல்களும் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் 1995ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரத்தில் பொதுப் பரீட்சைக்குத் தோற்றக்கூடியவாறு ஆண்டு 9, ஆண்டு 10, ஆண்டு 11 க்கான கடல்வளக்கல்வி பாடத்திட்டமும் வடிவமைக்கப்பட்டுள்ளன. 1993 இல் இக்கற்கை நெறியைப் போதிக்கும் போது எழுகின்ற நடைமுறைச் சிக்கல்கள் களையப்படுவதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

கடல்வளம் சார்கல்வி, நூல் சார்ந்ததும் செய்முறை சார்ந்தது மான கல்வியையும் உள்ளடக்கியது. உயிரியல் விஞ்ஞானம், கடற்பொறியியல், கப்பல் கட்டல், கப்பல் ஒட்டம், மாலுமி ஸாஸ்திரம், கடல் ஆய்வுகள், படகு கட்டல், வலைத் தொழிற்சாலை, ஆழ்கடல் மீன்பிடி, ஐஸ் உற்பத்தி, துறைமுக விருத்தி, சந்தைப்படுத்தல், போக்குவரத்துத் திருத்த வேலைகள், கடலரிப்பு, கனியவளம் தொடர்பான விஞ்ஞான, பொருளியல் சார்ந்த துறைகளைக் கொண்டிருப்பதினால் இத்துறை சார்ந்து பெருந்தொகையானவர்களுக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுத் தரமுடியும். இத்துடன் நேரடியாக மீன்பிடித் தொழிலிலும் மறைமுகமாக உற்பத்திக் கைத்தொழிலிலும் ஈடுபடவும் வாய்ப்பு ஏற்படும். யாழ். பல்கலைக் கழகத்தில் அமையவிருக்கும் கடற்றொழில் பீடம் கடல்வளம் சார்கல்விக்கு மேலும் மெருகூட்டுவதாக அமையும்.

எனவே கடல்வளம் சார்கல்வி எம் சமூகமட்டத்தில் உள்ள தவறான எண்ணக்கருவையும், மனப்பாங்கையும் மாற்றிக்கொண்டு, மலரப்போகும் தமிழீழத்தின் மிக முக்கியமான வளம், இது முழுமையாகப் பயன்படுத்தப் படவேண்டும் என்ற நல்ல மனப்பாங்கை வளர்ப்பதாக அமையவேண்டும். இதற்கு இத்துறை சார்ந்த அறிவையும், திறனையும் வளர்த்துக் கொள்ள ஆசிரியர் சமூகம் வழிகாட்டவேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சின்னப் பூக்களுடன் சில பொழுது




இரவு 7.30 மணி இருக்கும். முற்றத்தில் நல்ல நிலவு எறித்துக் கொண்டிருக்கிறது. நிலவுதான் எவ்வளவு அழகானது! ஆனால் நிலவால் பூமியில் விழும் நிழல்கள் ஒவ்வொன்றும் அச்சத்தை உண்டு பண்ணுகின்ற ஒரு நிலையை சந்தர்ப்பங்கள் மனிதருக்கு ஏற்படுத்தி விடுகின்றன.

முற்றத்தில் ஒரு சாக்கைப் போட்டு, அதன் மேல் ஓரங்கள் எல்லாம் கிழிந்து தொங்கும் ஓலைப்பாய் ஒன்றை விரித்து, ராசலிங்கம் படுத்திருக்கிறான். பக்கத்தில் மகள் மீரா தகப்பனின் கால்மாட்டில் இருந்தபடி சிணுங்கிச் சிணுங்கி, சிறிது நேரம் காலைப் பிடிப்பதும் பின் தந்தையை ஏதேனும் கேள்விகள் கேட்பதும், தந்தை நினைவூட்ட மறுபடியும் காலைப் பிடிப்பதுமாக இருக்கிறாள்.

அவளின் வயதிற்கு மீறிய கேள்விகள் ராசலிங்கத்திற்கு எரிச்சலை உண்டு பண்ணினாலும், கூடவே அவளின் தீவிரமான சிந்தனைகளால் வியப்பும் ஆனந்தமும் அடைகிறான்.

மீராவிற்கு இப்போதுதான் எட்டு வயது ஆரம்பித்துள்ளது. ஆனால் தற்போதைய அநேகமான பிள்ளைகளில் காணப்படும் வயதிற்கு மீறிய அதீத வளர்ச்சி இவளிடமும் உள்ளது. இவளைப் பார்த்தவர்கள் யாரும் பத்து வயதிற்குக் குறைவாக மதிப்பிட மாட்டார்கள். வறுமையில் வாடும் குடும்பமாக இருந்தாலும் சில இடங்களில் உள்ள குழந்தைகளில் செல்வச்செழிப்பு மிளிர்வது இயற்கையே.

அடித்து ஓய்ந்த இந்தியப்படையின் கோரப் புயலுக்கு அந்தச் சுற்றாடலில் தப்பியிருந்தது ராசலிங்கத்தின் குடிசையும் அருகில் இருந்த தறுமுவின் கொட்டிலும்தான். ஏனைய வீடுகள் அனைத்தும் எரிந்து சாம்பலாகிவிட்டன. இந்தியப் படையின் கணிப்பின்படி கட்டாயம் எரிக்கப்பட வேண்டியது ராலிங்கத்தின் வீடுதான். யார் செய்த புண்ணியமோ அந்த வீடு அந்த இடத்தில் இன்னமும் அப்படியே இருக்கிறது.

இராணுவ முகாமின் பாதுகாப்புக் கருதி, முகாமில் இருந்தபடியே சுற்றியுள்ள எல்லா இடங்களையும் கண்காணிப்பதற்காக, முகாமைச் சுற்றியுள்ள வீடுகளை எல்லாம் இந்தியப் படை எரித்திருந்தது. முகாமில் இருந்து நியாயமான தொலைவில் இருந்தபடியால்தான் இந்த வீடு தப்பியது என்று கூற வேண்டும்.

ராசலிங்கத்திற்கு நான்கு பிள்ளைகள்; இரண்டு பெண்களும் இரண்டு பையன்களும். மீராதான் கடைசி. மூத்த பையன் இந்தியப் படையின் கெடுபிடிகளுக்குப் பின்னர் இரவில் வீட்டில் படுப்பதில்லை. இவர்கள் வீட்டிற்குக் கிழக்குப் புறமாக அதிக தூரம் தள்ளி உள்ள பிரதேசம் காடு மண்டிக் கிடக்கிறது. அங்கேதான் ராசலிங்கத்தின் ஒன்றுவிட்ட தமையனின் வீடு உள்ளது. மூத்த மகன் இரவில் அங்கேதான் போய்ப்படுப்பது வழக்கம்.

"சும்மா விசர்க் கேள்வியள் கேக்காமல் பேசாமல் படுபாப்பம். மனிசர் பகல் முழுவதும் அடியன் அடிச்சுப்போட்டு அலுப்பிலை வந்து எப்பனுக்கு கிடப்பமெண்டா அதுக்கை உன்ரை பாடு பெரும்பாடு."

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"இஞ்சேரப்பா நீங்கள் என்னத்துக்கு உதிலை கிடக்கிறியள். அவள் சாப்பிடாட்டிக் கிடக்கட்டும். நீங்கள் எழும்பி வாருங்கோ பாப்பம்."

மகள், கணவனை ஆக்கினைப் படுத்துவதை அறிந்த மீராவின் தாய் கமலா அடுப்படியில் இருந்தபடி குரல் கொடுத்தாள்.

"இஞ்சே மீரா! போய்ச்சாப்பிடன். நேரமெல்லே எட்டு மணி ஆகுது." மகளின் பிடிவாதத்திற்கு ஈடுகொடுக்க முடியாத ராசலிங்கம் சற்று குரலைத் தாழ்த்திக் கெஞ்சலாகக் கோரினான்.

"ஊ ்கும்.... அகிலன் அண்ணா வரட்டுக்கும்."

அகிலன் அந்த கிராமத்திற்குப் பொறுப்பான விடுதலைப் புலிப் போராளி. சண்டை தொடங்கிய போது ஆதரவாளர் என்று கருதியவர்கள் எல்லாம் கையை விரித்து முகத்தைத் திருப்பி முணுமுணுக்க, ராசலிங்கம் போன்ற ஒரு சிலரின் குடும்பங்கள்தான் இவர்களுக்குப் புகலிடம் கொடுத்தன.

அந்த ஊரில் ராணுவத்தோடு தொடர்பு கொண்டிருந்தவர்களுக்கும் துரோகக் கும்பலைச் சேர்ந்தவர்களுக்கும் ஏனைய சமூக விரோதிகளுக்கும் இவன்தான் மரணதண்டனை அளித்து வந்தான். ராணுவத்திற்கெதிரான தாக்குதல்களில் மும்மரமாக ஈடுபட்டான்.

இராணுவம் அந்த ஊரில் உள்ளவர்களை விசாரணைக்காக பிடித்தபோதெல்லாம் இவன் பெயரைச் சொல்லித்தான் கேட்டுக் கேட்டு அடித்தது. அந்த ஊரில் எல்லோருக்குமே அகிலன் என்ற பெயர் தெரிந்திருந்தது.

வழமையாக எப்போதும் ராசலிங்கம் வீட்டில்தான் அகிலனின் இரவுச் சாப்பாடு இருக்கும். தான் சாப்பிட்டு விட்டு தன் சகாக்கள் இருவருக்கும் பார்சல் கொண்டு போவான். இராணுவம் வந்து போகும் பகுதியாக இருந்த போதும், இராணுவத்திற்குத் தெரியாமல் இரவில் இவனும் வந்து போனான்.

எப்படித்தான் இத்தகைய பாசப் பிணைப்பு ஏற்பட்டது என்று வீட்டாரே வியக்கும் அளவுக்குச், சிறுமி மீரா அகிலன் மீது உயிரையே வைத்திருந்தாள். இரவுகளில் வீட்டிற்கு வருவதும், இராணுவம் தேடுவதாக வீட்டாரும் ஊராரும் கூறுவதும், தாய் தந்தையரோடு வாழாமல் தனியனாய் திரிவதும், ஆபத்தை எதிர்நோக்கியபடியே கொள்கைக்காக எப்போதும் ஆசாபாசங்களின்றி வாழ்வதும், குறிப்பாக தனது மூத்த தமையனின் வயதை ஒத்தவனாக இருப்பதாலும் இத்தகைய ஒரு பிணைப்பு ஏற்பட்டிருக்கலாம்.

அகிலன் வராத இரவுகளில் இவளைச் சாப்பிட வைப்பதே தாய்க்குப் பெரும்பாடாகிவிடும். சில சமயங்களில் பிடிவாத

# சீதனப் பிரச்சினை பற்றி பகிரங்க விவாதம்

சீதன முறை இன்று ஒரு பாரிய சமூகப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இந்தப் பிரச்சினை எமது சமூகத்தின் ஒவ்வொரு குடும்பத்தையும் ஊடுருவி நிற்கிறது. சீதன முறையால் பெண்களே நேரடியான பாதிப்பிற்கு இலக்காகியுள்ளனர். பெண்களின் வாழ்க்கையைத் தீர்மானிக்கும் அளவிற்கு இப்பிரப்பிரச்சினை பூதகார வடிவத்தை எடுத்துள்ளது.

அன்றொரு காலம், திருமணத்தின் போது பெண்ணுக்கு பெற்றோர் தாய் வழிச் சொத்தாக மனமுவந்து அளிக்கும் உடமைகள் சீதனமென வழங்கப்பட்டது. ஆனால் இன்று மணமகளுக்கு மட்டுமன்றி, மணமகனிற்கும் அவனின் குடும்பத்தாருக்கும் பல்வேறு வடிவில் சொத்துக்களைப் பரிமாறும் முறையாக சீதனம் மிகவும் சிக்கலான விவகாரமாக உருவெடுத்துள்ளது. அத்துடன் சீதனம் இருந்தால் மட்டுமே திருமணம் என்ற நிர்ப்பந்த நிலையும் எழுந்துள்ளது. இந்த நிலைமை காரணமாக இன்று எண்ணில்லாத பெண்களின் வாழ்க்கை சீரழிந்து வருகின்றது.

இந்தச் சீதனக் கொடுமை காரணமாக, பெண்களைக் கொண்டுள்ள குடும்பத்தினர் சீதனத்திற்காக பெரும் பொருள் ஈட்டவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள் தள்ளப்பட்டு தாங்கொணாத் துன்பத்தை அனுபவித்து வருகின்றனர். அத்துடன் வசதியற்ற குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் திருமண உறவு மூலம் தாம்பத்திய வாழ்வைப் பெற்றுக் கொள்ள முடியாது பெருந் துன்பத்தையும் கஷ்டத்தையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

பெண்ணின் தனித்துவத்தையும் கௌரவத்தையும் இழிவுபடுத்தி, பெண்ணை ஒரு விலைப் பொருளாகவும், திருமண உறவை ஒரு வியாபாரமாகவும் மாற்றிவிட்ட இந்த சீதன முறையை இல்லாதொழிப்பது இன்றைய காலத்தின் தேவையாகிவிட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

மாக சாப்பிடாமலேயே படுத்து விடுவாள்.

நேரம் எட்டரை மணிக்கு மேலிருக்கும். தூரவுமில்லாமல் கிட்டவுமில்லாமல் ஒற்றையாக ஒரு நாய் மட்டும் குரைக்கிறது.

மீரா தந்தைக்குப் பக்கத்தி லேயே உறங்கிப் போனாள். ராசலிங்கத்திற்கு அவள் சாப்பி டாமல் தூங்குவதைப் பார்க்க என்னவோ போலிருந்தது. அகி லன் வராததும் ஒரே யோசனையைக் கொடுத்தது. 'ஒரு வேளை அகிலன் வராமல் விட்டுவிடுவானோ.... அப்படி யானால் சாப்பாடு...? சாப்பி டாமல் கூடாவா இருப்பார் கள்? இதெல்லாம் அவர்களுக் குப் புதிதா என்ன?'

அயல்வீட்டு நாய்கள் ஒன்றி ரண்டு குலைக்கின்றன. மீரா விழித்துக்கொண்டுவிட்டாள். "அப்பா, அகிலன் அண்ணா இன்னும் வரலையே....?" தலையை நிமிர்த்திக் கேட்டாள்.

ராசலிங்கத்திற்குப் பெரிய சங்கடமாகிவிட்டது.

இந்தச் சீதன முறையை ஒழித்துக் கட்டும் வழிமுறைகள் பற்றி எமது இயக்கம் ஆலோசித்து வருகிறது. இதுபற்றி நடவடிக்கையை மேற்கொள்வதற்கு முன்னர், இந்தச் சமூகப் பிரச்சினையின் சிக்கலான பரிமாணங்கள் பற்றியும், இதனை தடை செய்வது தொடர்பான சாதக, பாதக நிலைபற்றியும் பொதுமக்க ளிடமிருந்து ஆலோசனையையும், கருத்துக்களையும் பெற விரும்புவ தாக தமிழீழ விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு அறிவித்துள்ளது.

சீதனப் பிரச்சினை சம்பந்தமாக சகலரிடமிருந்தும் கருத்துக்கள் அபிப்பிராயங்களை எதிர்பார் க்கின்றோம். இவை ஈழநாதத்தில் பகிரங்க விவாதத்திற்காக பிரசுரிக் கப்படும் எனவும் அவ்வமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''அகிலன் அண்ணா இண்டைக்கு வரமாட்டார். நீ வா, எழும்பு சாப்பிட்டுப் படு."

ராசலிங்கம் சொல்லிக் கொண்டிருந்த போதே படலை திறபடும் சத்தம் கேட்டது.

மீரா துடித்தெழும்பி துள்ளிக் கொண்டோடினாள். வந்தது அகிலன்தான். கைகள் இரண்டையும் கழுத்தில் போட்டு தாவி ஏறிக்கொண் டாள்.

"பாருங்கோ பாருங்கோ பெட்டையின்டை கொண்டாட் டத்தை." என்று கூறியபடி மீராவின் தாய் கமலாவும் வெளியே வந்தாள்.

''அப்பா பாத்தீங்களே; நீங்கள் பொய்தானே சொன்ன னீங்கள். அகிலன் அண்ணா வரமாட்டார் எண்டு....?"

"மீரா...! உனக்கு எத்தனை தரம் சொன்னனான் இரவிலை சத்தம் போட்டுக் கத்திக் கதைக் காதை எண்டு. உனக்கு ஆக லுந்தான் செல்லம் மெத்திப் போச்சு. இறங்கு பாப்பம் கீழை."

இரவில் அகிலன் வந்து போவது அக்கம் பக்கத்திற்குத் தெரிந்து விடப்போகிறது என்ற பயத்தில், தாய் மகளை அதட் டினாள்.

அகிலன் மீராவை இறக்கி விட்டுத், திண்ணையில் உட்கார்ந்தான். அவள் மீண்டும் அவன் மடியில் ஏறி உட்கார்ந்து கொண்டாள்.

"ஏன் தம்பி ஏதும் பிரச்சி னையே? சரியாச் சுணங்கிப் போச்சு."

"சீச்... சீ... அப்படி ஒண்டு மில்லை. தூரத்துக்குப் போனாப்போலை வரநேரம் போட்டுது".

"நேரம் போட்டுது பிறகேன் பார்த்துக் கொண்டு நிக்கிறாய், தம்பிக்குச் சாப்பாட்டைக் குடன்".

முற்றத்திலே நின்றபடி கதை கேட்டுக் கொண்டு நின்ற மனைவி கமலாவுக்கு ராசலிங் கம் கூறினான். "ஓமோம் வந்திட்டன்." என்றபடி அவள் அடுப்படிக்குள் ஓடினாள்.

"அதுசரி மீரா ஏன் இன்னும் நித்திரை கொள்ளேலை...? நல்லா முளிச்சிருப்பாய் போலை கிடக்கு. கொண்டே சென்றீலை விடுவம்."

''ஓம் தம்பி அதுதான் நல்லது. ஆளைக் கூட்டிக் கொண்டு போய் நீங்களே வைச்சிருங்கோ. அகிலன் அண்ணை வராமல் சாப்பிட மாட்டன் எண்டு போட்டு உந்த முத்தத்திலையே என்னோடை இருந்திட்டாள்."

மீராவின் தாய் புட்டும் கத்த ரிக்காய் குழம்பும் முட்டைப் பொரியலும் ஒரு தட்டில் வைத்துக்கொண்டு வந்து அகில னிடம் கொடுத்தாள். "அகிலன் அண்ணா சாப்பிடட்டும் மீரா நீ வா சாப்பிட." மீராவின் தாய் மீராவைச் சாப்பிட அழைத் தாள். அவளோ முடியாது என்று தலையை ஆட்டிவிட்டு, அகிலனோடு சேர்ந்து சாப்பி டத் தொடங்கிவிட்டாள். சில சமயங்களில் அவள் அப்படித் தான் சாப்பிடுவது வழக்கம். அதனால் தாயும் எதுவும் பேசாமல் விட்டுவிட்டு மற்றவர் களுக்கு பார்சல் கட்டுவதற்கா கக் குசினிக்குள் போனாள்.

சாப்பிடும்போது கதை கொடுத்துக் குழப்பக்கூடாது என்று எண்ணியபடி ராசலிங் கமும் எழுந்து, சாப்பிடுவதற் காக அடுப்படிக்குள் நுழைந் தான்.

சிறிது நேரம் அந்த வீட்டில் நிலவிய அமைதியைக் குலைப் பது போல் திடீரென்று அயல் வீட்டு நாய்கள் எல்லாம் குரைக் கத் தொடங்கின. அகிலனுக்கு அருகில் படுத்திருந்தபடி அவன்

சாப்பிடுவதையும் குசினி வாசலையுமே மாறி மாறிப் பார்த்துக்கொண்டிருந்த ராசலிங்கத்தின் கறுவல் கிழட்டு நாயும் நின்று நின்று பார்த்து, விட்டுவிட்டுக் குரைத்தபடி படலைவரை ஓடியது. திடீரென்று எதையோ கண்டது போல் பயங்கரமாகக் குரைத்தது. ராசலிங்கமும் மனைவியும் ஒருங்கே எழுந்து முற்றத்திற்கு ஓடி வந்தனர். பரபரவென்று வேலிகள் எல்லாம் முறிபடும் சத்தமும் கேட்டது. நாய் எல்லாப் புறமும் ஓடி ஓடிக் குரைத்தது.

ராணுவம் வீட்டைச் சுற்றிவளைத்து விட்டது. தான் இனித் தப்பமுடியாது என்பது அகிலனுக்கு விளங்கிவிட்டது. அவனது இடுப்பில் பிஸ்டல் இருந்தது. சேட்டை வெளியே விட்டிருந்ததால் அது சாதாரணமாகப் பார்த்தபோது துளிகூடத் தெரியவில்லை. குப்பியும் ஒன்றுக்கு இரண்டு இருந்தது.

'தற்போதுள்ள நிலையில் இராணுவத்தை எதிர்த்துச் சுடுவது தகுந்ததல்ல. இருட்டிற்குள் அவர்கள் நிற்பது கூடத் தெரியவில்லை. எனது பாதுகாப்பிற்காக நான் சுட்டால், அவர்கள் இந்தக் குடும்பத்தையே கண்மண் இல்லாமல் சுட்டுத்தள்ளி விடுவார்கள்.'

எவ்வளவு பயங்கரமான சூழ்நிலைகளிலும் கூட முகம் கோணாது தன்னை ஆதரித்து உணவளித்த அந்தக் குடும்பம் தன் கண் முன்னாலேயே சிதைபடுவதை அவன் விரும்பவில்லை.

சிலவேளை அவர்கள் தன்னை இனங்காணாமலும் இருக்கக்கூடும் என்ற அற்ப நம்பிக்கையோடு, உணவைக் குழைத்து மீராவின் வாய்க்குள் வைத்தான். உணவை விழுங்காமலேயே மீரா எதையோ தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

www.tamilarangam.net

திடீரென்று கோடிப்புறத்தி லிருந்து முற்றத்திற்குப் பாய்ந்து வந்த இராணுவத்தினன் ஒருவன் அகிலனின் கையைப் பிடித்தபடி, "அகிலன் அகிலன்" என்று கத்தினான்.

அவன் பிடித்ததுதான் தாமதம் மீரா என்ன நினைத்துக் கொண்டாளோ துடித்துப் பதைத்து, அகிலனின் கழுத்தைக் கட்டிப்பிடித்துக் கொண்டு "ஐயோ என்டை அண்ணா.... என்டை அண்ணா... என்டை அண்ணாவை விடுங்கோ... என்டை அண்ணாவை ஒண்டுஞ் செய்யாதேங்கோ" என்று கத்தத் தொடங்கிவிட்டாள். இதனைச் சிறிதும் எதிர்பாராத அகிலன் மீராவையும் தூக்கியபடி முற்றத்தில் எழுந்து நின்றான்.

அகிலனின் இடுப்பில் பிஸ்டல் இருந்தது மீராவுக்குத் தெரியும். அதனால் தானோ என்னவோ தனது இரண்டு கால்களையும் அவனது இடுப்பைச் சுற்றிப் போட்டபடி இராணுவத்தினரை நெருங்கவிடாது பெரிய சத்தத்தில் கத்தினாள்.

இராணுவத்திற்குப் பெரிய சங்கடமாகிவிட்டது. மீராவின் தாயைப் பார்த்து "யார் இது?" என்றான். "எனது மூத்த பிள்ளை." என்றபடி அவளும் அழத்தொடங்கினாள்.

"டேய் உன்டை பேர் என்ன?" இராணுவத் தலைவன் அகிலனைப் பார்த்து உறுமினான். அகிலன் எதுவும் யோசிக்காமலேயே எடுத்த எடுப்பில் "வரதன்" என்று மீராவின் தமையனின் பெயரையே கூறினான்.

"ஐடன்டிக் காட் இருக்கா?"

"ஓம்"

"எங்கை? எடு!"

அகிலன் செய்வதறியாது ராசலிங்கத்தைப் பார்த்தான்.

மீரா கத்தினாள்: "அம்மா அண்ணான்டை ஐடன்டிக் காட்டைக் கொண்டா." குளிக்கும் சந்தர்ப்பங்களில் தமையன் ஐடென்டிக் காட் வைக்கும் இடத்தையும் தாய்க்குக் கூறினாள். அகிலனோ அடுத்த கணம் நிகழப் போகும் பயங்கரங்களை நினைத்தபடி, அசையாது நின்றான்.

மீராவின் தாய் கமலாவிற்கோ மகனின் ஐடென்டிக் காட் உள்ளே இருக்கும் என்பதில் துளிகூட நம்பிக்கையில்லை. ஆனாலும் இருக்க வேண்டும் என உலகிலுள்ள தெய்வங்கள் அனைத்தையும் பிரார்த்தபடி உள்ளே சென்றாள்.

ராசலிங்கத்தின் உள்ளம் மனைவி ஐடென்டிக் காட்டோடு வரவேண்டு

**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்ட வதிவிட வேளாண்மைப் போட்டியில் 3வது பரிசு பெற்ற தாளையடியைச் சேர்ந்த திருமதி வைத்தியநூர் சரஸ்வதி அவர்கள் அளித்த செவ்வி.**

நான் சிறு பிராயத்திலிருந்தே விவசாயியான எனது தந்தையாருக்கு தோட்டத்திற்குச் சென்று உதவி புரிந்து வந்தேன். 1988ம் ஆண்டிற்குப் பின்னர்தான் பயிர் செய்கையின் முக்கிய தேவைகளைப் பற்றி என்னால் அறிய முடிந்தது. எமது கிராமம் யாழ். மாவட்டத்தில் சகல விடயங்களிலும் பின் தங்கியது என்றே குறிப்பிடலாம். மணல் பாங்கான எமது நிலப்பரப்பில் மிகக் கஷ்டப்பட்டே பயிர் செய்கையை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மென்று வேண்டிக்கொண்டது. மீரா அகிலனின் தோளில் படுத்திருந்தபடி விக்கலெடுத்து பலமாக அழுதுகொண்டிருந்தாள். அகிலனும் அவள் இறங்கிவிடக்கூடாது என்ற அங்கலாய்ப்போடு அவளை இறுகப் பற்றிக்கொண்டிருந்தான்.

நின்றுகொண்டிருந்த இராணுவத்தினர் ஆளுக்கொரு பக்கமாகத் திண்ணையில் உட்கார்ந்தனர். நாய் குரைத்துக் கொண்டேயிருந்தது. ஒருவன் அகிலனையும் உட்காரும்படி சைகை செய்தான். அகிலன் அவனுக்குச் சற்றுத் தள்ளி திண்ணையில் ஓரமாக உட்கார்ந்தான். ராசலிங்கமும் அமர்ந்தான்.

யார் செய்த புண்ணியமோ அகிலனின் ஆயுள் செய்த அதிர்ஷ்டமோ, வரதனின் ஐடென்டிக் காட் அன்று வீட்டிலேயே இருந்தது. மீராவின் தாய் ஐடென்டிக் காட்டை இராணுவத்தினனிடம் கொடுத்தாள்.

ஐடென்டிக்காட்டை வாங்கியவன் அகிலனையும் படத்தையும் உற்று உற்றுப் பார்த்தான். மற்றையவர்களுக்கும் காட்டினான். தமக்குள் ஏதோ பேசிவிட்டு திடீரென்று "யார் இது?" என்று படத்தைக் காட்டி அகிலனிடம் கேட்டான்.

"நான் தான் சேர்." அகிலன் பதில் சொன்னான். அவனோ நம்பாமல் மீண்டும் புரட்டிப் புரட்டிப் பார்த்தான்.அகிலனின் இதயம் திக் திக் என்று அடித்துக்கொண்டது. படத்திலிருந்து மகன்தான் என்று அகிலைனைக் குறிப்பிட்டபடி, மீராவின் தாய் அழுதாள். ஐடெனன்டிக் காட்டிலுள்ள வரதனின் படத்திற்கும் தற்போதைய அகிலனின் உருவத்திற்கும் வேறுபாடு குறைவுதான். ஆனாலும் அடுத்தகணம் ஏது நிகழுமோ என இதயங்கள் அஞ்சித் தவித்தன.

ஐடென்டிக் காட்டை வைத்திருந்தவன் அதனை அகிலனிடம் கொடுத்தான்.

"உனக்கு அகிலனை தெரியுமா?" என்றான்.

"தெரியாது சேர்."

''என்னடா தெரியாது. அவன் ஒவ்வொரு நாளும் இரவிலை இஞ்சை வந்திட்டுப் போறவனாம். பொய் சொன்னியெண்டா உன்னைக் கொண்டே உரிச்சுப்போடுவம்."

"ஐயோ என்டை அண்ணாவைக் கொண்டு போகாதேங்கோ. என்டை அண்ணாவைக் கொண்டு போகாதேங்கோ. என்டை அண்ணாவை நான் விடமாட்டேன். நான் விடமாட்டேன். அம்மா அண்ணாவைக் கொண்டு போகவேண்டாம் எண்டு சொல்லு." மீரா முன்ன

---

1991/1992ற்கான தமிழீழ ஆய்வு நிறுவனம் நடாத்திய வதிவிட வேளாண்மைப் போட்டியானது எமக்கு பல பாடங்களைப் புகட்டியுள்ளதோடு, வதிவிடத்திலேயே பயிர் செய்கையும் கால் நடைகளும் வளர்ப்பதன் அவசியத்தையும் அதனால் அடையும் பயன்களையும் உணர வைத்துள்ளது.

இங்கு நான் முக்கியமாகக் குறிப்பிட விரும்புவது என்னவெனில், எமது கண்முன்னே பயிர் மற்றும் கால்நடைகள் வளர்வதையும், இதனால் வதிவிடம் அழகாகவும், சிறப்பாகவும், செல்வம் உடையதாகவும் இருப்பதானவோர் உணர்வை எமக்கு உண்டு பண்ணியது. அத்துடன் எமது சொந்தக் காலில் நாம் நிற்க முடியும் என்ற நிலைப்பாட்டிற்கு எம்மை தூண்டியுள்ளது.

வதிவிட வேளாண்மைப் போட்டியில் நாம் மேற்கொண்ட உற்பத்திகள் எமது தேவையை மட்டும் பூர்த்தி செய்யவில்லை. அயலவர்களுக்கும் அவற்றில் ஒரு பகுதியை இலவசமாகக் கொடுத்துள்ளோம். சில உற்பத்திப் பொருட்களை கொடுத்து பண்டமாற்றாக வேறு எம்மிடம் இல்லாத பொருட்களையும் பெற்றுள்ளோம். அத்துடன் நின்றுவிடாமல் ஒரு பகுதி உற்பத்திப் பொருளை விற்று ஒரு சிறு சேமிப்புக் கூடச் செய்ய முடிந்தது.

அத்துடன் பால், முட்டை என்பவற்றிற்கு தட்டுப்பாடு ஏற்படவில்லை. வதிவிட வேளைண்மைப் போட்டியின் பின்னர் எமக்கு ஏற்பட்ட ஆர்வம் காரணமாக தற்பொழுது எனது கணவர், பிள்ளைகள் அதில் ஈடுபட்டு 4 பரப்பு காணியில் பல்வின பயிர் செய்கின்றோம். அத்துடன் கால் நடைகளையும் வளர்க்கின்றோம். தேனீ கூட எமது தேவையை பூர்த்தியாக்குகின்றது. வதிவிட வேளாண்மைப் போட்டியின் போது உற்பத்தி செய்ப்பட்டு பதப்படுத்தப்பட்ட செத்தல் மிளகாய் வருடம் முழுவதும் எமக்கு தேவைக்கு போதுமானதாக உள்ளதெனக் கூறினார்.

எமது நிலத்தில் நீர் பாய்ச்சுவது என்பது ஓர் கடினமான செயல்தான். எனினும் நாம் அதற்காக சோர்ந்துவிடாமல் எமது முயற்சியைத் தொடருகின்றோம். என்றார் திருமதி வை.சரஸ்வதி அவர்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எண்டு சொல்லு." மீரா முன்னரைப் போல மீண்டும் கத்தி அழுதாள்.

"ஐயோ அந்தப் பொடியனைச் சத்தியமா எங்களுக்குத் தெரியாதையா. உங்கினை சனம் பறையக் கேள்விப்பட்டிருக்கிறம் தான். ஆனா நாங்களெண்டா ஒரு நாளும் கண்ணாலை காணேலை. எங்கள்ளை ஆத்திரப்பட்டாக்கும் ஆரோ சும்மா கதைகட்டி விட்டிருக்கினம்." ராசலிங்கத்தின் வார்த்தைகள் மன்றாட்டமாக வந்தன.


"சரி சரி பாப்பா அழாதை; நாங்கள் உன்டை அண்ணையை ஒண்டும் பண்ணமாட்டம்.... உங்கள்ளை யாராவது இனிமேல் அகிலனை எங்கையாவது கண்டா உடனை எங்களிட்டை வந்து சொல்லிப் போட வேணும்" என்றவன், ராசலிங்கத்தைப் பார்த்து "உன் பெயர் என்ன?" என்றான். ராசலிங்கம் தன் பெயரைச் சொல்லவே "ராசலிங்கம்" என்று தன் வாய்க்குள் முணுமுணுத்தபடி, 'முன்னமே கேள்விப்பட்டிருக்கிறேன்.' என்பதுபோல் தலையை ஆட்டினான்.

"இன்னொருமுறை உங்களைப்பத்தி புகார் வந்து தெண்டா குடும்பத்தோட கொளுத்திப் போடுவம்." என்று உறுமிய இராணுவத் தலைவன், சுற்றும் முற்றும் நின்றிருந்த ஏனையவர்களையும் அழைத்துக்கொண்டு அங்கிருந்து போனான்.

அயல்வீட்டு நாய்களின் குரைப்பு அடங்கிய போதுதான் அந்த வீட்டில் நின்றுபோயிருந்த இதயங்கள் மீண்டும் இயங்கத் தொடங்கின். **


## பிழை திருத்தம்

**சென்ற வைகாசி 1993 இதழில் காணப்பட்ட இச்சுவரொட்டி தமிழகத்தில் ஒட்டப்பட்டிருந்தது. தமிழக மக்களால் வெளியிடப்பட்ட பல சுவரொட்டிகளில் ஒன்று இது. இதேபோன்று கிட்டண்ணாவிற்கு அஞ்சலி செலுத்தும் சுவரொட்டிகளும் தமிழகத்தில் ஆங்காங்கே ஒட்டப்பட்டிருந்தது. இவை தமிழக மக்கள் மனதில் ஊமையாய் கிடந்து எரியும் நெருப்பின் சாட்சிகளே.**










தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# ஒத்துழைக்க மறுக்கவில்லை

**–ஞானகுரு–**

## வாத்தியார் வீட்டு விறாந்தை

"சண்டை சச்சரவு இல்லாமல் சமாதானமாக வாழுறதுதான் திறமான வாழ்க்கை எண்டு நீங்கள் அடிக்கடி சொல்லுறனீங்கள் தானே வாத்தியார்?"

"ஓம் சொல்லுறனான். அதிலை இண்டைக்குச் செல்லையாவுக்கு ஏன் சந்தேகம் வந்தது?"

"சந்தேகம் இல்லை. சிங்களவரும் தமிழரும் சமாதானமாக வாழாமல் சண்டை பிடிக்கிறது பிழை எண்டு என்ரை மனதுக்குப் படுகுது."

"நானும் அதைத்தான் வாத்தியார் சொல்லுறன். சிங்கள மக்களோடை ஒத்துழைச்சு எங்கடை உரிமையைப் பெறுகிறதுதான் புத்திசாலித்தனம். சண்டைக்குப் போனதாலை எவ்வளவு அழிவு? எத்தினை உயிர்கள் பலியாகிப் போச்சு? எத்தினை கோடி ருபா நட்டம் வந்திட்டுது?"

"சண்டை துவங்க முன்னம் தமிழருக்கு இழப்புகளும் அழிவுகளும் வரயில்லையோ கனகேந்திரம்? நீங்கள் நீண்ட காலம் கொழும்பிலை இருந்து உத்தியோகம் பாத்தனீங்கள். சண்டை துவங்க முன்னம் நடந்த இனக்கலவரங்களிலை தமிழர் கொல்லப்பட்டதும், தமிழற்றை சொத்துக்கள் அழிக்கப்பட்டதும் உங்களுக்குத் தெரியத்தானே வேணும்."

"அப்ப, வாத்தியாரும் சண்டைக்குத்தான் ஆதரவோ?"

"அப்பிடிச் சொல்லாதையும் கனகேந்திரம். நான் சமாதானத்துக்குத்தான் ஆதரவு. நான் மட்டுமில்லை; தமிழ் மக்கள் எல்லோரும் சமாதானத்துக்குத்தான் ஆதரவு. ஆனால் சண்டை தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டிருக்குது."

"உப்பிடித்தான் கனபேர் சொல்லுகினம். உது சும்மா ஏமாத்துக் கதை."

"ஏமாத்துக் கதையில்லை. எங்கடை முந்தின தலைவர்மார் சிங்கள மக்களாலை தெரிவு செய்யப்பட்ட அரசாங்கங்களோடை நல்லாக ஒத்துழைச்சவை. ஒப்பந்தங்கள் செய்தவை. பண்டாரநாயக்கா செல்வநாயகம் ஒப்பந்தம் கிழிச்செறியப்பட்டுது. டட்லிக்கும் செல்வநாயத்துக்கும் இடையிலை ஏற்பட்ட ஒப்பந்தம் இடைநடுவிலை கைவிடப்பட்டுது. ஜே.ஆருக்கும் அமிர்தலிங்கத்துக்கும் இடையிலை ஏற்பட்ட உடன்பாட்டின்ரை அடிப்படையிலைதான் மாவட்ட சபைத் தேர்தல் நடந்தது. அந்தத் தேர்தல் நேரத்திலை அமைச்சர்மாரே யாழ்ப்பாணத்துக்கு வந்து நூலகத்தை எரிக்கிறதுக்கும் அதைத் தொடர்ந்த அழிவுகளுக்கும் வழிவகுத்தினம்."

"உதெல்லாம் சரிதான் வாத்தியார். ஆனால், சுயநிர்ணய உரிமை, பாரம்பரிய தாயகம் போன்ற கோஷங்கள்தான் எல்லாத்துக்கும் காரணம். உந்தக் கோஷங்கள் மிகவும் பாதகமானவை எண்டு சிங்கள மக்கள் நினைக்கினம். உதுகளை அடிக்கடி சொல்லுறதாலை அவையின்ரை மனதிலை ஒரு அச்சம் வளருது. அதாலைதான் பிரச்சினையைப் பேசித்தீர்க்க ஏலாமலிருக்குது. உந்தக் கோஷங்களைக் கைவிட்டால் பேசித் தீர்க்கிறதுக்கு சுமூகமான நிலை வரும். எங்களுக்குப் பலகாரந்தான் தேவை. சிலுசிலுப்பு வேண்டாம்."

"இண்டைக்கு எங்கடை பிரதான பிரச்சினை தமிழற்றை தாயகம் பறிபோறதைத் தடுக்க வேணும் எண்டதுதான். நீர் சொல்லுற உந்தக் கோஷங்கள் முன்வைக்கப்பட்டதாலை தமிழற்றை தாயகம் பறிபோனதோ அல்லது தாயகம் பறிக்கப்பட்டதுதான் உந்தக் கோஷங்களுக்குக் காரணமோ எண்டதை யோசிச்சுப் பார்க்க வேணும். தாயகம் பறிபோறதைத் தடுக்கிறதுத்தான் உந்தக் கோஷங்கள் எழுந்தன. தமிழற்றை சுயநிர்ணய உரிமையையும், தமிழருக்கு ஒரு தாயகம் இருக்குது எண்டதையும் ஏற்றுக்கொள்ளுகிற அடிப்படையிலைதான் பேச்சுவார்த்தை நடத்த வேணும். அந்த அடிப்படையிலை ஒத்துழைக்கிறதுக்குத் தமிழ் மக்கள் ஒருக்காலும் மறுக்கயில்லை."

"இப்ப முக்கியமான பிரச்சினையைப் பேசித் தீர்த்துக் கொண்டு பிறகு தாயகம், சுயநிர்ணய உரிமை எண்டதுகளைப் பற்றி பேசலாம்தானே வாத்தியார்?"

"முக்கியமான பிரச்சினை எது எண்டதிலை சண்முகராசாவுக்குத் தடுமாற்றம் இருக்குது போலை. தமிழற்றை தாயகம் கொஞ்சம் கொஞ்சமாகப் போகுது. அது சிங்களப் பிரதேசமாக மாறிக்கொண்டு வருகுது. கல்லோயா முழுக்கப் போயிட்டுது. அம்பாறை முக்கால்வாசி போயிட்டுது. திருகோணமலை போய்க்கொண்டிருக்குது. வவுனியா போகத் தொடங்குகிறது. இந்த நிலையிலை எது முக்கியமான பிரச்சினை? நிலம் பறிபோறதைத் தடுக்கிறதுதான். அதாலைதான் சுயநிர்ணய உரிமை, தாயகம் எண்ட கோஷங்களைத் தமிழர் முன்வைக்கினம்."

"இப்ப நீங்கள் என்ன சொல்லுறியள்? சமாதானமோ அல்லது சண்டையோ?"

'அது அரசாங்கத்தைப் பொறுத்த விசயம். நான் முந்திச் சொன்னதைப் போல, பிரச்சினைக்கு அடிப்படையான விசயங்களிலை அரசாங்கம் உடன்பாட்டுக்கு வருமெண்டால் சமாதானமாக ஒத்துழைச்சுத் தீர்க்கத் தமிழர் தயார். அதை விட்டிட்டு, முந்தின காலங்களைப் போல, அடிப்படை விசயங்களிலை தொடாமல் பேய்க்காட்டுப் பேச்சுவார்த்தை நடத்துறதாலை எந்தவித பலனும் இல்லை எண்டதைத் தமிழ் மக்கள் பூரணமாக உணர்ந்திட்டினம்." ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# கடல் நடுவே

**தமிழீழத்தின் நிலத்தில் மட்டுமல்ல, நீரிலும் தமிழர் வாழ்வுக்கான போர் நடைபெறுகிறது. நீலக் கடற்பரப்பு சூரிய ஒளியினால் மட்டுமல்ல, எம்மவர்கள் சிந்திய இரத்தத்தாலும் சிவக்கிறது. தமிழர்களுக்காக சுதந்திர நாட்டைப் படைக்கும் இலட்சியக் கனவுடன் கடலோடும் 'கடற்புலிகளின்' வாழ்வில் ஒருநாள்...**

www.tamilarangam.net

1. தமிழீழத்தின் நாகர்கோவில் கடற்கரைப் பிரதேசம் 19.03.85. ஆறு இளம் விடுதலைப் புலிகள் படகில். ஒரு புறம் நீச்சற் பயிற்சிக்கான உபகரணங்கள். மறுபுறம் கடற்படையினர் வந்துவிட்டால் அவர்களை எதிர்கொள்வதற்காக தயார்நிலையிலுள்ள ஆயுதங்கள். தொலைகாட்டியினூடாக கடற்படையினரின் நடமாட்டத்தை அவதானித்த வண்ணம் புலிகளின் பயிற்சிக்கான பயணம் தொடர்கிறது.

2. கண்ணுக்கு கரை எட்டாத, ஆழ்கடல் பிரதேசம். கடற்படையின் நடமாட்டம் எதுவும் இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்ட பின் படகு நிறுத்தப்படுகிறது. விடுதலைப் புலிகள் குதூகலத்துடன் தமது பயிற்சியை ஆரம்பிக்கின்றனர்.


3. தூரத்தில் கரும்புள்ளியாகத் தெரிகிறது ஒரு சிறிலங்கா விமானப்படை விமானம். அதனைத் தொடர்ந்து மேலும் 2 ஹெலிக் கொப்டர்கள், ஒரு கடல் விமானம். அவைகள் படகை நோக்கி வேகமாக வந்துகொண்டிருக்கின்றன. பயிற்சியைக் கைவிட்டு உஷாராகின்றனர் விடுதலைப் புலிகள்.


4. ஹெலிகொப்டர்கள் படகை அண்மித்து விட்டன. சுமார் 150 அடி உயரத்தில் பறந்தவண்ணம் அவைகள் தாக்குதல்களை தொடர்கின்றன. எதிரிகளின் இயந்திரத் துப்பாக்கிகளிலிருந்து புறப்பட்ட ஒளிர்வுத் துப்பாக்கி ரவைகள் நெருப்புக் கனலைக் கக்கியவாறு படகை நோக்கி சீறிக் கொண்டிருக்கின்றன.

5. படகோட்டி துரிதமாக செயற்படுகிறார். படகின் இயக்கத்தை ஆரம்பித்து வேகத்தை அதிகப்படுத்திய அவர் துப்பாக்கிக் குண்டுகளிலிருந்து படகைக் காப்பாற்றும் நோக்குடன் அதனை லாவகமாக அங்கும், இங்கும் ஓட்டுகிறார். இதே வேளை குழுவின் தலைவரால் இயந்திரத்துப்பாக்கி (G.P.M.G) எதிரிகளுக்கு எதிராக இயக்கப்படுகிறது. புலிகளின் கைகளிலிருந்த ஏனைய இரு சுரிகுழல் துப்பாக்கிகளும் (G.3) கூடவே இயங்குகின்றன. மற்ற இருவரும் ரவைக்கூடுகளில் ரவைகளை நிரப்பிக் கொடுக்கிறார்கள்.

6. 'வாழ்க தமிழீழம்', 'தர்மம் வெல்க' போன்ற வீராவேசக் குரல்களுடன் ஆக்ரோசத் தாக்குதல் தொடர்கிறது. ஒரு புலியிடமிருந்த சுரிகுழல் துப்பாக்கி தானியங்கி நிலையில் இயக்கப்படுகிறது. இதனால் விரைவில் ரவைகள் தீர்ந்துவிடும் என்பதை அவதானித்த அக்குழுத் தலைவன் அவனைக் கடிந்துகொண்டு அத்துப்பாக்கியை வாங்கி தானே சுட ஆரம்பிக்கின்றான்.

7. விமானத்திலிருந்து குண்டுகள் வீசப்படுகின்றன. படகைச்சுற்றியுள்ள நீர்ப்பரப்பில் குண்டுகள் வீழ்ந்து வெடிக்கின்றன. குண்டு




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெடிப்பில் கடல்நீர் பனையளவு உயரத்திற்கு எழும்புகிறது. நீர்ப்பரப்பினில் கொழுந்துவிட்டெரியும் தீச்சுவாலைகள். ஆடும் அலையினில் தள்ளாடும் படகு, கவிழ்ந்துவிடுமோ என்ற அச்சமும் எழுகிறது.

8. தொடர்ச்சியான சூட்டின் காரணத்தால் இயந்திரதுப்பாக்கி திடீரென இயங்க மறுக்கிறது. இயந்திரத்துப்பாக்கி இயங்காததை எதிரிகள் கண்டுகொண்டால், உற்சாகம்பெற்றுத் தாக்குதல்களை தீவிரப்படுத்துவார்கள் என்பதை

# ஒரு களம்

உணர்ந்துகொண்ட விடுதலைப் புலி ஒருவர் அதன் குழலை மாற்றுவது போல பாவனை செய்தவண்ணம் அதனைச் சரிப்படுத்த முயலுகிறார். ஆனால்.... முயற்சியில் வெற்றியில்லை.

9. என்ன கொடுமை... படகின் இயந்திரங்களில் ஒன்றும் படையினரின் தாக்குதலால் செயலிழக்கிறது. படகின் வேகம் தடைப்படுகிறது. அங்கு மரணபயம் சூழ்கின்றது. இயந்திரத்தை திருத்துவதில் ஒருவர் ஈடுபடுகிறார். இதேவேளை கையில் இருக்கும் சயனைட் நச்சுக்குப்பிகளைக் கணக்கிடுகிறார் குழுத்தலைவர். இருப்பதோ ஆறு பேர். கையிலிருக்கும் விஷக்குப்பிகளோ மூன்று.

10. இதேவேளை செயற்பட்டுக் கொண்டிருந்த 2 சுரிகுழல் துப்பாக்கிகளுள் ஒன்று செயற்படாது போகின்றது. நிலைமை மிகவும் மோசமாகின்றது.

11. தற்கொலை செய்துகொள்ளும் முடிவுக்கு வருகிறார்கள் அந்த இளம் புலிகள். எனினும் மூன்று சயனைட் குப்பிகள் மட்டுமே இருப்பதால் யார் பாவிப்பது என்ற சச்சரவும் அங்கு எழுகின்றது. அவர்கள் ஒருவரேனும் உயிருடன் எதிரியிடம் பிடிபடுவதை விரும்பவில்லை.


12. "மூன்று குப்பிகளையும் பாதி பாதியாகப் பயன்படுத்துவோம்" என்று கூறிய அவர்களின் தலைவன் ஆறு துப்பாக்கி ரவைகளை தனியாக எடுத்துவைக்குமாறும் கட்டளையிடுகிறான். ஏதாவது விபரீதமாகிவிட்டால் தனது ஐந்து சகவீரர்களையும் சுட்டுக் கொன்று தானும் தற்கொலை செய்துகொள்வதே அந்தத் தலைவனின் இந்தக் கட்டளைக்கான நோக்கம். மரணத்தை அரவணைப்பதில் கூட அந்த வீரர்களின் நடவடிக்கையில் எவ்வளவு முன்னெச்சரிக்கை.

13. இயங்கமறுத்த சுரிகுழல் துப்பாக்கி வீரனொருவனால் சரிசெய்யப்படுகிறது. சுரிகுழல் துப்பாக்கியிலிருந்து புறப்பட்ட ஒரு குண்டு ஹெலிகொப்டர்களுள் ஒன்றைத் தாக்குகிறது. பேரிரைச்சலுடன், கரும்புகையைக் கக்கியவாறு, காற்றாடிகள் செயல்படாது, சிவப்புநிற விளக்குகள் எரிய அந்த ஹெலிகொப்டர் தடுமாறுகிறது.

14. சில நிமிடங்களில் தலைகுப்புற கரையோரக் கடலினுள் வீழ்கிறது. பொங்கியெழுந்த பேரலை அதை விழுங்குகிறது.

15. ஏனைய ஹெலிகொப்டர்களும், விமானமும் பின்வாங்குகின்றன. இறுதிவரை போராடிய புலிகள் தமக்குக் கிடைத்த வெற்றிக்காக, பெருமிதத்துடன் மகிழ்ச்சி ஆரவாரத்திலீடுபடுகின்றனர். பின்வாங்கும் விமானங்களைப் பார்த்துக் கையசைத்து கேலிசெய்த வண்ணம் தளம் திரும்புகின்றனர். ■ ■




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கடல் பரப்பில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் பற்றி காலம் காலமாகக் கூறுகின்றன அலைகள். கடலோடிய தமிழரின் பாரம்பரையில் வந்த தமிழீழக் கடற்புலிகளின் கடல் அனுபவம், போர்கள், வீரச்செயல்கள், தியாகங்கள், மரணங்கள்... புதிய வரலாற்றினைப் படைக்கின்றன. அவர்கள் காற்றின் வேகத்தையும், அலைகளின் கொந்தளிப்பையும், நீரின் சுழிப்பினையும் அறிந்து, சுக்கானைக் கையில் பிடித்து, வேகமாக, லாவகமாக படகைச் செலுத்தும் ஓட்டிகள். மீனவர்கள் 'வலை படுத்தி'ருக்கிறார்களா, கரும்புள்ளியாகத் தூரத்தே தெரிந்து பூதகரமாகச் சீறிப்பாய்ந்து வரும் சிங்கள ரோந்துப் படகு தென்படுகிறதா என கண்களைக் கூர்மையாக்கி, தளத்தில் கால்களை உறுதியாக ஊன்றி, அணியத்தின் முன் அசையாது நின்றவாறு விரிந்த பார்வையில் கடலை அளக்கும் காவலர்கள். பொங்கும் கடலை அமைதி அடையச் செய்ய 'அம்மா!' என்று அன்பான பாவத்துடனும், ஒருவித பயத்துடனும் அழைத்து, படகினுள் துள்ளிவிழும் மீன்களுடன் அளவளாவி, வட்டமிடும் பறவைகளுடன் சேர்ந்து பாடி, காற்றுடன் குலாவி, வான்வெளியில் தோன்றும் வண்ணச் சேர்க்கைகளைக் கண்டு குதூகலித்து, தெறிக்கும் உப்பு நீருள் முழுகி, புயலென்றாலும் பயமின்றிக் கடல்மேல் செல்லும் இயற்கையின் நண்பர்கள். மீன்களுக்கு இணையான நீச்சல்காரர்கள்.

கடல் நடுவே கண்ட களங்களில் அவர்கள் செய்த தீரச்செயல்களை கடலலைகளும், காற்றும் எப்போதும் மண்ணுக்கு உரைத்துக் கொண்டிருக்கின்றன. கடல் அன்னையின் வயிற்றுள் விடுதலைச் சூலுற்ற முத்துக்களாய் வீழ்ந்துவிட்ட கடற்புலிகள் ஆயிரமாய்ப் பிரசவித்து அணிவகுத்து நிற்கின்றனர்.

போராட்டக் கடலில் முத்துக் குளிப்பவர்கள் நாம். முத்தெடுக்கும் காலம் வெகுதூரத்திலில்லை.

- வளவன் -

www.tamilarangam.net





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கடற்புலிகள்

## பெண்கள் அணியினர்



கடற்புலிகள் தின விழாவில்
கடற்புலிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட
கண்காட்சி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வெல்லப்படுவதற்கான துயரங்கள்

"இந்த கடலை விட்டு வேறு என்ன பிழைப்பையடா தம்பிமாரே நாங்கள் நடத்திறது?...."
"அது உண்மைதான் எங்கடை கடலை நாங்கள் விட ஏலா!..."

"தொழில் செய்யப் போனவைக்குச் சுட்டு நாலு பேர் சரி." செபமாலைக் கிழவன் கண் சிவந்து தோன்ற... கண்டவர்களுக்கெல்லாம் செய்தி சொல்கின்றான்.

"ஆர் ஆர் அப்புச் செத்ததாம்?" என்று மரியம்மா பதட்டத்தோடு வினவுகிறாள்.

"பிலிப்பையாவின்ரை மோன் எட்வேட்டும்.. சந்தியாப்பிள்ளையும் மற்றது.. செயோனும் மருமோன் கமிலஸ்சுவும் தான்." பெருமூச் சொன்றை இழுத்து ஓய்கின்றான் கிழவன்.

"அந்தோனிக் கிழவா! ஏன் இப்படிச் சோதிக்கிறாய்? இவன் எட்வேட்டு கலியாணம் கட்டி ஒரு மாசமில்லை... அவள் பெட்டை மேரி எப்படி இதைத் தாங்கப் போகிறாளோ?.... திமிங்கிலமடிப்பார்கள்! எங்கடை கடலிலை நிண்டு எங்கடை ஆக்களைச் சுடுறாங்கள்...." மான உணர்வு மரியம்மாவை முக்கிப் பேசவைக்கிறது.

"சிங்களவர்களுக்கு நல்லாத்தான் வாய்க்குது எங்கடை கடல்! தலைக் கறுப்பைக் காணவிடுறாங்களில்லை...." என்று மனதுள் புகைந்து புறுபுறுத்தபடி... செபமாலை அப்பு வீராப்போடு நடக்கிறான்...

வானத்திலே வலம் வந்து உலங்கு வானூர்தி வேட்டுகளைத் தீர்க்க...

படகுகளின் சஞ்சாரமற்று கடல் செத்துப்போய்க் கிடக்கிறது. சுறுசுறுப்பாக மீன் வியாபாரம் நடக்கும் சந்தைக் கட்டிடமும்... கடல் முற்றமும் வெறிச்சோடித் தெரிகின்றது. மீனில்லாத கடற்கரையில் காகங்கள் கூட இப்போது இல்லை.

விரக்தி ததும்பும் சிமியனின் விழிகள் கலங்குகின்றன. திரண்டு முறுக்கேறிய தனது கருமை நிற மார்பை நிமிர்த்தி நடக்க முடியாத சோகத்தோடு அவன் தளர் நடை போட்டபடி போகின்றான்.

எட்வேட்டின் வீட்டுப் படலையில் ஏகப்பட்ட சனம் நிற்கிறது. பெண்களும் ஆண்களுமாய் அலறும் அழுகை ஒலி வெகுதூரம் வரை கேட்கின்றது.

ஒன்றுக்குள் ஒன்று உறவுமுறை உள்ளவர்கள்... ஒரே படகில் சென்றவர்கள்... வானுலங்கு பொழிந்த துப்பாக்கி ரவை மழையில் நனைந்து... இரத்தத்தில் தோய்ந்து.. இந்த உலகை விட்டுச்சென்ற செய்தி எல்லோர் மனங்களையும் ஆட்கொண்டு அலையவைத்தது! ஒரே வீதியில் நடக்கும் நான்கு சாவீட்டுக்கும் மாறி மாறி அவர்கள் சென்று கொண்டிருந்தார்கள்.

"இந்த கடலை விட்டு வேறு என்ன பிழைப்பையடா தம்பிமாரே நாங்கள் நடத்திறது?...."

"அது உண்மைதான் எங்கடை கடலை நாங்கள் விட ஏலா!..."

"இவங்களை அடிச்சுக் கலைக்க வேணும்." என்ற பலதரப்பட்ட பேச்சுக்கள் ஆக்ரோசத்தோடு அங்கு கூடிநிற்பவர்களால் முன்வைக்கப்படுகின்றன.

**ந. கிருஷ்ணசிங்கம்**


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**ஒருவாய் சோற்றை அள்ளிய கையோடு நிமிர்ந்த சிமியன் முன்பாக... பிலோமினாவின் வெறுங்கை நீளுகின்றது!**

**"குழைச்சுத் தாருங்க!" என்றவளின் விழிகளிலிருந்து நீர் முத்துக்கள் உருண்டு விழுகின்றன.**

"துவக்கைத் தூக்கிக் கொண்டு தொழில் செய்யிற காலம் வரவேணும்... பொய் இல்லை! அப்பிடியான நிலைமை ஒன்று இங்கை வரவேணும். அப்பதான் நிம்மதியாய் நிண்டு தொழில் செய்யலாம்!..."



இளைஞன் பவுஸ்டீன் குரல் அங்குள்ளவர்களை உணர்வோடு தாக்கியது. அவனின் வலிய கைமுஸ்டி உயர்ந்து பதிந்த வேகத்தை வியப்போடு நோக்கினார்கள்.

"வெறும் கையாநிண்டு.. கையைத் தூக்கிக் காட்டி.... கத்திக் குழறி ஏன் சாகவேணும்.... நாங்கள்? சரிக்குச் சரி சரிக்கட்டிப் போட்டுச் செத்தாலும் பறவாயில்லை!..." இது இளைஞனான இம்மானுவலின் குரல்...

"வெடிக்கு வெடி விழுந்தால் சிங்கள நேவி நிக்குமெண்டு சொல்லிறியே" பவுஸ்டீன் கேட்கிறான்.

"எங்கை இவையள் நிக்கிற?... கடலிலை புரட்சி ஒன்று வரத்தான் போகுது! நேவிக் கப்பலுகள் எங்கடை பெருங்கடலை விட்டு ஓடத்தான் போகுது! இருந்து பாருங்க இது நடக்கும்.!" என்று இம்மானுவல் கையிலடித்து வெஞ்சினம் கூறுகின்றான்.

இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த சிமியனின் சோகம் பாதி விலகிவிடுகின்றது..... அவனின் திரண்ட மார்பு மீண்டும் நிமிர்ந்து கொள்கின்றது. துருதுருப்போடு அந்த இளைஞர்களை அவன் பார்க்கிறான். அவனின் இதயத்தில் நம்பிக்கை ஒளிவிடத் தொடங்கியது. "பிரியமுள்ளவர்களே! அன்ரனி செபஸ்ரியான் என்ற இந்த இளைய மகனின் பிரிவு பரிதாபகரமானது!...." என்று குருவானவர் தனது பிரசங்கத்தைத் தொடங்கவும், அங்கு நிலவிய கூக்குரல்கள் அடங்கி அமைதி தோன்றியது.

நான்கு கடற்றொழிலாளர்களின் உடல்களும் ஒன்றன்பின் ஒன்றாகப் போவது மனங்களைப் பிழிந்தெடுத்தது. ஒவ்வொரு பிரேத வண்டிக்குப் பின்னும் தாயென்றும், தந்தையென்றும், மனைவியென்றும், குழந்தையென்றும், கூடப்பிறந்தோரென்றும் பின்தொடர்ந்து அழுதபடி செல்ல ஊர்வலம் சேமக்காலையைச் சென்றடைந்தது. வானத்திலே இரைந்து வந்து வட்டமிட்டுச் சென்ற 'சுப்பர் சொனிக்' குண்டுவீச்சு விமானத்தைக் கூட அவர்கள் பெரிதாக எண்ணி மிரளவில்லை.

நான்கு உடல்களையும் கிடங்குகளில் இறக்கிய.. கண்ணீரோடு மண்ணையும் அவர்கள் மேல் தூவுகின்றார்கள்.

"இந்தக் கிழட்டுக் கை எத்தினை இளசுகளுக்கு மண் போட்டிட்டுது" என்று ஆற்றாமையால் குழறிய செபமாலைக் கிழவன் ஒரு பிடி மண்ணை ஆவேசத்தோடு அள்ளி தன்னுடைய தலையிலும் போட்டுக் கொண்டான்!

சைக்கிள் டைனமோவைச் சுற்றி அதன் மூலம் பெறப்படும் மின்சாரத்தைக் கொண்டு வானொலி கேட்கும் விசுவலிங்கம் வீட்டில் பலர் கூடியிருக்க.... இலங்கை வானொலியின் செய்தி கேட்கின்றது.

"வடபகுதியில் குடாக்கடலில் புலிப் பயங்கரவாதிகளின் நடமாட்டம் முழுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. நேற்றைய தினம் ஆகாயப்படையினரால் புலிப் பயங்கரவாதிகளின் படகொன்று யாழ். நகரத்தையண்டிய கடலேரியில் வைத்து மூழ்கடிக்கப்பட்டது. அதில் பயணம் செய்த பயங்கரவாதிகள் அனைவரும் கொல்லப்பட்டார்கள்."

வானொலிச் செய்தியைக் கேட்ட மரியம்மா "இந்தக் கோதாரி போவாற்றை கதையைப் பாரன்.... இடிவிழுவாரை... அந்தோனிக் கிழவா நீதான் கேள்!" என்று மண்வாரித் திட்டிவிட்டுச் சென்றாள்.

பகல் முழுவதும் அன்ன ஆகாரமின்றி சோர்வடைந்து தோன்றிய சிமியன் தளர்நடையோடு வீடுநோக்கிப் போகின்றான். தீவுகளில் தங்கி நிற்கும் இராணுவம் அசுர வேகத்தில் எறிகணைகளை, கடற்கரையோரத்திலுள்ள குடியிருப்புக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

களை நோக்கி.... இடைவிடாது ஏவிக்கொண்டிருந்தது.

அச்சம் காரணமாக வீடுகளை விட்டு வெளியேறிவந்த மக்கள் அந்தோனியார் கோவிலிலும்.... பாடசாலையிலும் இராப்பொழுதைக் கழிக்கக் கூடுகின்றனர்!

ஒழுங்கைக்குள் இறங்கி நடந்து செல்லும் சிமியனை, சம்மட்டியார் தேவசகாயம் எதிர்ப்பட்டார்.

"சிமியனோ! இப்பத்தான் போறாயோ வீட்டை.... தெறிப்பார் செல்லடிக்கிறான்கள்! கவனமடாப்பா...." என்று கூறி விலகிப் போகிறார்.

சனம் விலத்தும் பெரிய வயிற்றோடு ஊசாடித் திரியும் சம்மட்டியாரின் கள்ளுவண்டி கூடக் கரைந்துவிட்டது!

குளித்த பின் உலர்ந்த நாலு முழத் துண்டை உடுத்தபடி வந்த சிமியனுக்கு மனைவி சோறு போடுகிறாள்... மண்ணெண்ணை குறைந்த குப்பி விளக்கு மங்கிமடியும் ஒளியுடன் தெரிகிறது.

www.tamilarangam.net

"பிள்ளையள் திண்டுட்டுதே பிலோமினோ?" என்ற சிமியன் கோப்பை முன் குந்தியிருக்கிறான்.

"ஓ!அதுகள் திண்டுட்டுது!" என்றவள் குப்பி விளக்கைக் குலுக்கி பெரிதாக எரியவைக்கிறாள். எறிகணைகள் வீழ்வது நின்றிருந்தது. பிள்ளைகள் பயம் தெளிந்து குந்திலே வந்து குந்துகின்றார்கள்.

"பிலோமினா! நீயும் உன்ரை சோத்தைப் போட்டு வாவன் இப்படி.'' என்றவன் வெள்ளைப் பச்சை அரிசிச் சோற்றையும், கத்தரிக்காய் குழம்பையும் பெருமுச்சோடு குழைக்கின்றான். இதே கோப்பையில் கடல் கறிகளோடு.... குத்தரிசிச் சோற்றை சுவைத்து உண்ட நினைவுகள் வந்து நெஞ்சைச் சுரண்டுகின்றன.

"பிலோமினா! உங்கை நீ என்ன செய்யிறா?... கொண்டாவன் உன்ரை சோத்தையும்.... கதைச்சுக் கொண்டு தின்னுவம்." என்றபடி ஒருவாய் சோற்றை அள்ளிய கையோடு நிமிர்ந்த சிமியன் முன்பாக... பிலோமினாவின் வெறுங்கை நீளுகின்றது!

"குழைச்சுத் தாருங்க!" என்றவளின் விழிகளிலிருந்து நீர் முத்துக்கள் உருண்டு விழுகின்றன.

# இஸ்ரேல்

## பிறந்த கதை

**இஸ்ரேல்**

அது யூதர்களின் தாயகம்!

தங்கள் தாயகத்தை விட்டு அடித்து துரத்தப்பட்ட மக்கள் 100க்கு மேற்பட்ட நாடுகளில் குடியேறியிருந்தார்கள். ஆனால் 2000 ஆண்டுகளாக, 'அடுத்த செடார் திருநாளை ஜெருசலேத்தில் கொண்டாடுவோம்' என்ற வசனத்தை அவர்களது வருடாந்த செடார் பண்டிகையின் போது பிரார்த்தனையின் இறுதியில் கூறி வந்தார்கள்.

கடந்த நூற்றாண்டில் குறிப்பாக ரஷ்யா, போலந்து போன்ற நாடுகளில் யூதப்படுகொலைகள் அதிகரித்து இடம்பெற்றன. அதையடுத்து தாய்நாடு திரும்பும் ஊத்வேகம் நாடுகடந்த யூதர்களிடையே ஏற்பட்டது. 2ம் உலகமகா யுத்தத்தின் போது, ஹிட்லரின் நாஸி ஜேர்மனியில் 60 இலட்சம் யூதர்கள் கொல்லப்பட்டனர். இதையடுத்து மீண்டும் "தாயகம் நோக்கிய பயணம்" யூதர்களின் தாரக மந்திரம் ஆகியது.

பலஸ்தீனத்துக்குள் நுழைய பிரித்தானியர் தடை விதிக்கின்றனர். ஆயிரக்கணக்கான மக்கள் சைப்பிரஸ் தீவில் மீண்டும் தடை முகாம்களில் அடைக்கப்படுகின்றனர்.

"ஒரு மனிதன் வாழ்நாளில் தான் வாழ்வதற்காகத் தன் மனம் வெறுக்கும் எவ்வளவோ காரியங்களைச் செய்கிறான். அவமானம், சித்திரவதை, மரணத்திற்குக் கூடப் பயப்படாமல் தாங்கள் கொண்ட கொள்கையில் உறுதியாக நிற்கும் உலகின் இந்தச் சிறிய தொகை மனிதர்கள்....."

ஆயிரம் இடர் வந்த போதும் "தாயகம் நோக்கிய பயணத்தை"த் தொடர்கின்றார்கள். தேனும் பாலும் வழிந்தோடும் தேசம் என்ற கற்பனையோடு தாயக மண்ணுக்குத் திரும்பும் அம்மக்களுக்கு தெரிவதெல்லாம் வெறுமையான பாலைவனங்களும், அணுக முடியாத சதுப்பு நிலங்களுமே.

இழப்பதற்கு எதுவுமில்லை. இருப்பதற்கு இனிய நாடு ஒன்று போதும் என்ற உணர்வோடு ஒரு கையில் துப்பாக்கி! மறு கையில் மண்வெட்டி! ஊணின்றி, உறக்கமின்றி, வியர்வையையும் இரத்தத்தையும் விலையாகக் கொடுத்து விலைமதிப்பில்லாத தங்கள் தாயகத்தை மீட்டெடுக்கின்றார்கள்.

* * *

ஆனால், இன்றைய இஸ்ரேல் ஓர் ஆக்கிரமிப்பின் சின்னமாக மாறியிருப்பது ஏற்புடையதொன்றல்ல.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழீழத் தேசியப் பண்பாட்டின் வேர்

## மு. திருநாவுக்கரசு

**சிந்துவெளியை தலைநகராகக் கொண்ட தொன்மை வாய்ந்த கலாசாரத்தின் வாரிசுகளாக எஞ்சிநிற்கும் ஈழத்தமிழர் உலகிற்கு உயிருள்ள தொன்மைக் கலாசாரத்தின் எடுத்துக் காட்டுக்களாய் விளங்கவேண்டியவர்கள் என்பதிற் சந்தேகமில்லை.**

தென்னாசியப் பிராந்தியத்தின் கலாச்சார வரலாற்றில் ஈழத் தமிழ்க் கலாசாரத்திற்கு ஒரு சிறப்பிடமுண்டு. தேசிய அடையாளத்தில் கலாசாரம் ஓர் இன்றியமையாத கூறாய் இருக்கிறது.

கலாசாரம் பற்றிய அமில் கார் கப்றாலின் மதிப்பீடு மிகவும் சரியானது. கலாசாரமானது மக்களின் வரலாற்றுக் கனியாகவும், அதே வேளை அது வரலாற்றை நிர்ணயிக்கும் ஒரு காரணியாகவும் இருக்கின்றது எனக் கப்றால் கூறுகிறார். அவரது முக்கிய கருத்துக்கள் சிலவற்றை நோக்குவோம்.

ஒரு மலரானது அதன் தாவரத்தில் இருந்து உருப்பெறுவது போல, கலாசாரமானது அதன் குறித்த வரலாற்றிலிருந்து பிறப்பெடுக்கின்றது.

கலாசாரமானது சமூக விளைநிலத்தில் வேர்விட்டு அது சமூகத்திலிருந்து பிறக்கும் சத்திலேயே வளர்கின்றது. சமூக நரம்பு மண்டலத்தின் கூட்டு மொத்த உயிரோட்டத்தை கலாசாரமே பிரதிபலிக்கின்றது.

இவ்வாறாக கலாசாரத்தின் வேரையும் விழுதையும் கப்றால் வடிவுற விளக்கினார். தேசிய விடுதலைப் போராட்டத்தில் கலாசாரத்தின் அத்தியாவசியத்தையும் அதன் செழுமையான பக்கங்களையும் தெளிவுற எடுத்துரைத்தார். ஆக்கிரமிப்பாளர்கள் ஒரு மக்கள் கூட்டத்தை வெற்றிகொள்வதற்கு கைவைக்கும் முக்கிய துறை கல்சாரமே என்பதை இவர் சுட்டிகாட்டினார். கிட்லர் தனது இனத்தை ஒன்றுபடுத்தி தனது ஆட்சியை ஸ்திரப்படுத்தவும், மற்றைய இனங்களை அழிக்கவும் கலாசாரத்தை ஒரு முக்கிய கருவியாகக் கையாண்டான் என்பதை எடுத்துக் கூறுகிறார்.

அதாவது ஆரியர் உயர்ந்த கலாசாரத்தை உடையவர்கள் என்றும் யூதர்களும், மாக்ஸிஸமும் உயர்ந்த ஆரியக் கலாசாரத்தைப் பாழாக்கும் நஞ்சுகள் என்றும் ஆதலினால் இவை இரண்டும் முதலில் அழிக்கப்படுவதன் மூலமே தூய ஆரியக் கலாசாரத்தைப் பாதுகாத்து வளர்க்கலாமென்றும் கூறி ஜேர்மனியர்களுக்கு போதையூட்டி அதன் மூலம் ஆட்சியதிகாரத்தை இலகுவாகவே கைப்பற்றிக் கொண்டான். மேலும் கறுப்பின மக்களையும் கலாசாரத்தின் எதிரிகள் என வர்ணித்த இவன் காலகதியில் அவர்களும் அழிக்கப்பட வேண்டியவர்கள் என்றான். எனவே கிட்லர் பிற இன அழிப்புக்கும் தனது வளர்ச்சிக்கும் கலாசாரத்தையே முன்னிறுத்தியிருந்ததைக் காணலாம்.

காலனித்துவ ஆதிக்கத்தின் பொருட்டு ஆசிய, ஆபிரிக்க, அமெரிக்க நாடுகளுக்குப் படையெடுத்த ஐரோப்பியர் கூறிய முக்கிய கருத்து என்னவெனில் காட்டுமிராண்டிகளாக வாழும் சுதேச மக்களைத் தாம் கலாசார மயப்படுத்தப் போவதாகக் கூறினார்கள். "நாகரிகமற்ற" ஆசிய, ஆபிரிக்க மக்களையும், மற்றும் அமெரிக்கக் கண்டங்களில் வாழ்ந்த செவ்விந்தியர், எஸ்கிமோ இனமக்களையும் "நாகரிகப்படுத்துவதே" தமது பணியெனக் கூறினார்கள்.

ஆனால் உண்மையில் இந்த ஐரோப்பியர்களால் கலாசாரத்தின் பெயரால் மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பும் அவர்களின் அநாகரிகப் பரப்பலும் வரலாற்றின் கறைபடிந்த அத்தியாயங்களாகும்.

எனவே அழிப்புக்கும் சரி, ஆக்கத்திற்கும் சரி கலாசாரம் ஓர் இன்றியமையாத ஆயுதமாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதே இங்கு தெளிவாகக் கண்டுகொள்ளக்கூடிய உண்மையாகும்.

ஆதலினால் மனிதன் தனது வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும், தன்னைச் செழுமைப்படுத்தவும், போராடவும் கவனம் செலுத்தவேண்டிய முக்கிய துறையாய் கலாசாரம் உள்ளது.

ஒரு குறித்த வரலாற்றுச் சூழலினதும், அதன் மொத்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


வரலாற்று வளர்ச்சியினதும் திரட்டப்பட்ட கனியே கலாசாரம் என்பது. தொன்றுதொட்டு வளர்ந்து வந்த கலாசாரமானது நவீன சூழலில் அது தேசியப் பரிமாணத்தை அடைந்து தேசியப் பரிமாணம் பெறவேண்டும். வெறும் பழமை மட்டுமல்ல அது தனது தொன்மையுடன் புதுமெருகு பெறவேண்டும்.

இவ்வாறாகத் தென்னாசியப் பிராந்தியத்தின் அதி தொன்மை வாய்ந்த கலாசாரமானது தமிழீழ மண்ணிற்தான் தனது தொன்மை வேருடனும் உயிருடனும் இருக்கின்றது.

தென்னாசியாவில் தொன்மை வாய்ந்த நாகரிகத்தைக்கொண்ட மக்கள் சிந்து வெளிப் பரப்பில் நகர நாகரிகம் அமைத்து வாழ்ந்து வந்தனர். சிந்துவெளிப் பரப்பில் அதன் நகர நாகரிகம் இருந்த போதிலும் அதன் கலாசாரச் சிறகுகள் தெற்கு நோக்கி இலங்கை வரை பரந்திருந்தன. சிந்துவெளி தென்னாசியப் பிராந்தியப் பண்பாட்டின் தலைநகராய் இருந்தது. ஏறக்குறைய இன்றைய தென்னாசியா முழுவதும் திராவிட மூலப் பண்பாடு பரவியிருந்தது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையினர் ஆனைக்கோட்டையில் மேற்கொண்ட ஓர் அகழ்வாய்வின் போது கண்டெடுத்த இற்றைக்கு ஈராயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்குக் குறையாத பழமை வாய்ந்த முத்திரையில் சிந்துவெளி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது சிந்துவெளி கலாச்சாரப் பரம்பலின் ஒரு விளிம்பாய்

# தமிழீழத் திருநாட்டில்



**நாக. பத்மநாதன்**

“நான் வந்துவிட்டேன்!”

இவ்விதம் கூறிய புதிய ‘புக்காரா’ விமானத்தைப் பார்த்து பழைய பொம்பர் சிரித்தது! ‘சியா மாசெட்டி’ என்ற பெயரில் அது தமிழீழ வானில் உயரப்பறந்து உலாவிய அனுபவசாலி!

என்றாலும், எவ்வளவோ எண்ணி வந்த புதிய புக்காராவுக்கு இந்தச் சிரிப்பு ஒரு சூடு போலப்பட்டது!

“ஏன் சிரிக்கிறாய்?”

“உன்னைப் பார்த்தல்ல, உடன்பிறப்பே! என் முன்னைய எண்ணத்தை, எதிர்பார்ப்பை, பட்டறிந்த உணர்வை மீண்டும் எண்ணிச் சிரித்தேன்” என்றது அந்த சியா மாசெட்டி.

புக்காராவுக்கு இப்போது சினக்க இயலவில்லை. ஒரு விரும்பாத ஆவலே மேலெழுந்தது! பழைய பொம்பர் தொடர்ந்தது.

“நாங்கள் விமானப்படை! எட்டாத இடமெல்லாம் எம் தாக்குதல்கள் எட்டும்! எங்கள் வீச்சிலே கட்டிடங்கள் இடிந்து தரைமட்டமாகும்! எதிர்த்தோர் சிதறிப் பலியாவர்! தமிழீழ் மக்கள் சரணடைவர்! இவ்விதந்தான் நான் எண்ணினேன்” என முடித்தது சியா மாசெட்டி.

“அப்படியானால்?”

“இன்று என் மனதிலே சோர்வுதான் உள்ளது. இறகுகள் களைத்துவிட்டன. இந்த அரசின் வெற்றி பிற்போட்டு பிற்போட்டு பின்வாங்கி நிற்கிறது!” என்றது பொம்பர்.

“அதற்குத்தான் நான் வந்துவிட்டேன்!” எனத் தலை நிமிர்த்திக் குரல் கொடுத்தது புக்காரா. அது எண்ணியபடி மறுநாள் விடிந்தது. பெரும் ஆர்ப்பாட்டத்துடன் வந்த சிலருள் இருவர் அந்த புக்காராவில் ஏறிக்கொண்டனர்.

அது பெரும் இரைச்சலோடு எழுந்து உயர்ந்தது.

பழைய பொம்மர் தனியாக நின்றது! பல நினைவுகள் உணர்வுகளின் நடுவே அது ஆழ்ந்து நின்றது. வீரம் வேறு! பொய், புழுகு, புரட்டுப் பிரசாரம் மூலம் வீரம் போலக் காட்டும் பொய்மை வேறு. இந்தப் பொய்களையே தாங்கியபடி தன்னைப் பார்வையிட வந்த தளபதிகள், பெரும் அரசியற் தலைவர்கள் என்போரின் பழைய நினைவுகள் தலை தூக்க முயன்றன.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலங்கைத் தீவு இருந்துள்ளது என்பதை உணரவைக்கின்றது. மற்றும் வாழ்முறை அம்சங்களும் இதன் கலாசார நீட்டத் தன்மையை நிரூபிக்கின்றன எனலாம்.

துரதிஷ்ட வசமாக தொடர்ச்சியான படையெடுப்புக்களினால் இக்கலாசார தொடர் சங்கிலி ஆங்காங்கே அறுக்கப்படலாயிற்று. வடமேற்கே இருந்து ஏற்படும் படையெடுப்பின் போதெல்லாம் இக்கலாச்சாரம் தெற்குநோக்கி ஒதுங்கலாயிற்று. இதனால் ஒப்பீட்டு ரீதியில் தெற்கு ஓர் அடைக்கலப் பிரதேசமாயிற்று. தெற்கே இலங்கை ஒரு தீவாக இருந்தமையால் இதன் பாதுகாப்புத் தன்மை மேலும் அதிகமானதாய் இருந்தது.

வடக்கே சிந்துவெளி நாகரிகத்தை அழித்த 'ஆரியர்' அங்கு தமது நாகரிகத்தை பெரிதும் ஸ்தாபித்த போதிலும் பின்பு இஸ்லாமியப் படையெடுப்பின் போது வட இந்தியர் தமது கலாசார அம்சங்களுக்கான அடைக்கலப் பிரதேசமாய் தெற்கையே பாவித்தனர். கலை, சமய அம்சங்கள் ஈறாகப் பல அம்சங்கள் தெற்கிலேயே பேணப்பட்டன. குறிப்பாக இற்றைக்கு ஈராயிரத்து முந்நூறு ஆண்டுகள் பழமை வாய்ந்ததும் கௌடில்யரால் எழுதப்பட்டதுமான அர்த்த சாஸ்திரம் என்னும் இராஜதந்திர நூலின் சமஸ்கிருதப் பிரதி 1906 ஆம் ஆண்டு தென்னிந்தியாவில் காஞ்சியிற் கண்டெடுக்கப்பட்டது. அர்த்தசாஸ்திரத்தின் பொழிப்புரைப் பிரதிகள் இரண்டு மலையாள மொழியில் கேரளாவில் கண்டெடுக்கப்பட்டன. தென்னிந்தியாவில் இம் மூலப்பிரதியும் பொழிப்புப் பிரதிகளும் கண்டெடுக்கப்படாது



எதனையும் கவனியாது வெயில் மேலெழுந்து கொண்டிருந்தது. தூரத்து இரைச்சலொன்று நெருங்கி வருவது கேட்டது. ஆம், பெரும் சத்தமிட்டபடி புக்காரா தரையிறங்கி மெதுவாக ஊர்ந்து, மீண்டும் தன் பழைய இடத்தை எடுத்துக் கொண்டது. வியர்வை கொட்டிற்று!

மீண்டும் புக்காரா சியா மாசெட்டி தனிமையில் நின்றன.

ஆனால் புக்காராவின் முகத்தில் களிப்போ, பெருமிதமோ காணப்படவில்லை. வெறுப்புக் கோபாவேசமே மேலிட்டது!

''வெறும் பொய்! பம்மாத்து!'' இவ்விதம் உரத்த குரலில் கதையைத் தானே தொடங்கிற்று.

"ஏன்?" இது சியா மாசெட்டியின் கேள்வி. பதில் கூற புக்காரா தயங்கவில்லை.

"இவர்கள் அங்கு நான் பிறந்த நாட்டில் வந்து கூறியது வேறு, அதன்படி இங்கு நான் போர்முனைக்குச் செல்லுவதாக எண்ணினேன். ஆனால் இங்கு செலுத்தப்பட்டது போர்முனைக்கு அல்ல; ஊர்மனைக்கு! குண்டுகள் வீசப்பட்டன. ஆனால் எங்கு தெரியுமா? மக்கள் வாழும் வீடுகளிலும், பிள்ளைகள் படித்துக் கொண்டிருந்த பாடசாலைகளிலும்! பசு ஒன்று உருண்டு துடித்து இறந்தது. மூதாட்டி ஒருத்தி துண்டமாய் மடிந்தாள். தெருவில் நின்ற பொதுமக்களில் சுமார் பத்துப்பேர் பலியானது தெரிந்தது. இதற்குள் புலிப் போராளிகளின் எதிர்க்கணைகள் எழுந்ததும் எனது ஓட்டி தடுமாறிவிட்டான். மற்றவன் பிழையான இடங்களிலெல்லாம் சரியாகப் பொழிந்தான்! அத்துடன் விரைந்து மேலெழுந்து இங்கு வந்துவிட்டனர்!"

"இன்னும் சிறிது நேரத்தில், பன்னிரண்டு பயங்கரவாதிகள் சாகடிக்கப்பட்டனர் என்ற செய்தி வரும்; கேள்!" எனச் சிரித்தது சியா மாசெட்டி. அது தொடர்ந்தும் கூறிற்று.

"காடுகளை அழிக்கவும், அங்குள்ள உயிர் இனங்களை மாய்க்கவும்கூட சிறிலங்கா அரசு எம்மையே பாவிக்கிறது."

"எங்கு?"

"தமிழீழ மண்ணில்; அது வேற்று நாடு, தனிநாடு என்பதால்."

வானத்தில் ஓசை பொழிந்தது. தமிழீழம் தனிநாடுதான் என வானத்தில் ஓசை பொழிந்தது.

எதிர்பாராத மழையொன்று கொட்டிற்று.

அதன் நடுவே பழைய பொம்மர் தன் நெஞ்சத்தின் ஆழத்தினூடாகக் கூறிற்று, "நான் ஒன்றையே விரும்புகிறேன்."

"அது என்ன?"

"இந்தப் பொய்யான அதர்ம அரசின் பொம்மராய் இருப்பதை விட, ஒரு புலிப் போராளியின் ரைஃபிளாய் இருப்பது மேல். அதனையே நான் மெய்யாக விரும்புகிறேன்."

வானம் சிலிர்த்து நின்றது!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இருந்திருந்தால் அர்த்தசாஸ்திரம் என்ற இப்பழம் பெரும்நூல் உலகத்திற்குக் கிடைத்திருக்காது. இந்த வகையில் பலவகையிலும் தெற்கே அடைக்கலப் பிரதேசமாய் திகழ்ந்துள்ளது.

பொதுவாகத் தெற்கும், தீவுத் தன்மையால் தென்னிந்தியாவை விட இலங்கையும் இலங்கைத் தீவிற்குள் பிரதேசத் தன்மையாலும் அமைவிடத்தாலும் தமிழீழ மண்ணும், அதிக பாதுகாப்புப் பிரதேசமாய் உள்ளது. எனவே தமிழீழ மண்ணே ஆதித் தென்னாசியக் கலாசாரத்தினது இறுதித் தங்குமிடமாய், அடைக்கலப் பிரதேசமாய் உள்ளதெனலாம்.

ஒப்பீட்டு ரீதியில் தென்னிந்தியாவில் ஏற்படும் கலாசாரக் கலப்பை விடவும் இலங்கையில் ஏற்படும் கலாசாரக் கலப்பும் சிதைவும் குறைவானதே ஆகும். அதிலும் தமிழ்மண் இன்னும் அதிகம் பாதுகாக்கப்படக்கூடிய தன்மை வாய்ந்ததாகும்.

இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட நிலையில் முழு இலங்கைத் தீவையும் எடுத்துக்கொண்டால் சிந்துவெளி நாகரிகத்தின் தொன்மையைக் கூறின் ஒரு தொடர் மக்கள் கூட்டமாய் இலங்கையில் வாழ்ந்த மக்கள் அனைவரும் காணப்பட்டனர். இன்றைய சிங்கள பௌத்த பண்பாடு இதிலிருந்தே பிற்காலத்தில் தோன்றியதாகும். இன்றும் சிங்கள பௌத்தர்களிடம் திராவிட மூலப் பண்பாட்டம்சங்கள் நிலவுவதைக் காணலாம். சிங்கள மக்கள் மத்தியிலுள்ள சிறு தெய்வவழிபாடும், 'கபுறால'மார் போன்ற அமைப்பு தொடர்ந்தும் இவற்றை நிரூபிப்பவையாய் உள்ளன. ஆனால் பௌத்த மதத்தின் வருகையின் பின்பு ஏற்பட்ட 'ஆரியமயமாக்கலும்' பிற்காலத்தில் ஏற்பட்ட அந்நிய ஆதிக்கமும் தொடர்புகளும் இதில் விரைவான மாற்றத்தை ஏற்படுத்துகின்றன.

www.tamilarangam.net

வடபகுதி ஓர் ஒதுக்குப்புறம் என்பதுடன் வரண்ட பிரதேசமாகவும் இருந்தமையால் அந்நியர்களின் அக்கறை இங்கு குறைவாகவே இருந்தது. ஆதலினால் அது தனது கலாசார மூலங்களை ஒப்பீட்டு ரீதியிற் தொடர்ந்து பேணி வளர்க்கக் கூடிய தன்மையதாய்க் காணப்படுகின்றது.

இந்த வகையில் சிந்துவெளிக் கலாசாரத்தின் மூல அலகின் ஒரு பரம்பல்கூறு தமிழீழ மண்ணில் எஞ்சியிருக்கின்றது என்று கூறலாம். எனவே ஒரு பெரும் செழுமையான கலாசாரப் பரப்பின் சொந்தக்காரராகிய தமிழ் மக்கள் ஈழ மண்ணில் சுருங்கியுள்ளோமாயினும் ஈழத் தமிழரே தொன்மையின் தொடர்வளர்ச்சியின் எஞ்சியிருக்கும் ஒரு பகுதியினர் ஆவர்.

எப்போதும் ஒரு மக்கள் கூட்டம் தனது கலாசார மூலத்தை அடையாளம் காண வேண்டுமென கப்றால் கூறுவது போல ஈழத்தமிழரின் கலாச்சார மூலம் சிந்துவெளிக் கலாசாரத்துடன் தொடர்புடையது.

சிந்துவெளிக் கலாசாரம் திராவிட மூலத்தைக் கொண்டதென்பதையும் அதன் உன்னதங்களைப் பற்றியும் ஜவகர்லால் நேரு புகழ்ந்தெழுதியுள்ளார். ஆரியர் வருகையின் பின்பே நிற அடிப்படையிலான வர்ணப் பாகுபாட்டால் பிற்காலத்திற் சாதிப்பாகுபாடு ஏற்பட்டதைப் பற்றியும் அவர் எழுதியுள்ளார்.

அண்மையிற் சிந்துவெளி மக்களோ அதன் நாகரிகப் பரப்பிற்குட்பட்ட அக்கால தென்னாசிய மக்களோ சாதிப் பாகுபாடற்ற உயர்ந்த பண்பாட்டுடன் வாழ்துள்ளனர். இந்தியாவை விடவும் இலங்கையில் சாதிப்பாகுபாடு மற்றும் தீண்டாமையின் உக்கிரம் ஒப்பீட்டுரீதியிற் குறைவு. ஆதலினால் சாதிப்பாகுபாடற்ற உன்னதமான ஒரு பண்பாடு எமது மூதாதையரிடம் இருந்துள்ளதையும் ஒப்பீட்டுரீதியில் நோக்கில் அதன் பாதுகாப்பு எமது மண்ணிலேயே அதிகம் உள்ளது என்பது தெரிகின்றது.

மொத்தத்தில் தமிழீழத் தேசியக் கலாசாரத்தின் ஆணிவேரைச் சிந்ததுவெளிக் கலாசாரப் பரம்பலில் இருந்து அடையாளம் காண்பதுடன் அதனை நவீன தேவைக்குமேற்ப மெருகிடவும் வேண்டியது அவசியமாகும். பொதுவில் தொன்மைக்கு ஒரு மெருகுண்டு. சிந்துவெளியை தலைநகராகக் கொண்ட தொன்மை வாய்ந்த கலாசாரத்தின் வாரிசுகளாக எஞ்சிநிற்கும் ஈழத்தமிழர் உலகிற்கு உயிருள்ள தொன்மைக் கலாசாரத்தின் எடுத்துக்காட்டுக்களாய் விளங்கவேண்டியவர்கள் என்பதிற் சந்தேகமில்லை.

நீண்ட பெரும் வரலாற்றனுபவத்துடன் அதன் அறுவடையாய் ஒரு கலாசாரத் தொல்கனியை உலகிற்கு வழங்கவேண்டிய பொறுப்பு இன்று ஈழ மண்ணுக்கு உண்டு. ■■

## சிரிப்பு ஒரு மருந்து

*** ஒரு விலங்குக் காட்சியகத்தில் இரு குரங்குகள் பரிணாம வளர்ச்சி பற்றிப் பேசிக்கொண்டிருந்தன.**

**ஒன்று கேட்டது:**

**''அப்படியென்றால் நான் இந்த நிலையக் காப்பாளனின் சகோதரன் என்கிறாயா?''**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கப்டன் மொறிஸ்

## பருத்தித்துறைப் பிரதேசப் பொறுப்பாளர்

**"போர்முனையில் குருதி வெள்ளத்தில் நிற்கிறேன்." என்றான். அவன்தான் மொறிஸ்.**

**1969** இல் பருத்தித்துறையில் 'பரதன்' ஆக அவதரித்த அவன், தனது பதினைந்தாவது வயதிலேயே தமிழீழ மண்ணிற்காய் தனது ஆசாபாசங்களைத் துறந்தான். அன்று முதல் 'மொறிஸ்' என்ற இயக்கப்பெயருடன் நடமாடத்தொடங்கினான். நான்கு ஆண்டுகள் இயக்கப்பணியில் ஈடுபட்டான். குறுகிய காலப்பகுதியில் அவன் ஆற்றிய சேவைகள் பல.

சிறிலங்கா இராணுவம் தொண்டமானாற்றில் குடிகொண்டிருந்த காலம் அது. விடுதலைப் புலிகள் பெருந்தாக்குதல் ஒன்றை இராணுவ முகாம் மீது மேற்கொண்டனர். மொறிஸ் அத்தாக்குதலை முன்னின்று நடாத்தி வெற்றியும் கண்டான். இராணுவ வீரரை வெளியேற விடாமல் "சென்றி" போட்டுத் தடுத்து வெளிவந்தோரை விரட்டி அடித்த பெருமை இவனுக்குண்டு.

பூநகரி இராணுவ முகாமைத் தாக்கி வெற்றியும் கண்டு காயமும் பட்டான்.

1987 ஆம் ஆண்டு ஜூலை 29ந் திகதி இந்தியப்படை இலங்கை மண்ணில் காலை வைத்தது. அமைதிக்காக வந்த இந்தியப்படை புலிகளைத் தேடிக்கண்டு பிடித்துக் கொல்லும் பணியில் ஈடுபட்டது. வடமராட்சியில் தனக்கென ஒரு இடம் பிடித்துக் கொண்ட மொறிஸைத் தேடி இந்தியப் படை வெறி கொண்ட நாய் போல் அலையத் தொடங்கியது.

மொறிஸோ இந்திய ஆமியின் கண்ணெதிரில் அகப்பட்டும், துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்து மாயமாய் மறைந்தான். அவன் சாதாரண துப்பாக்கி வேட்டுகளுக்கு அகப்படுபவன் அல்ல.

ஆறு தடவைகள் இந்தியப் படைகளினால் சுற்றிவளைக்கப்பட்ட போதும் கலங்காது நின்று போராடி வெற்றியும் கண்டான். அவனது நேரடி மோதலுக்கு ஈடுகொடுக்க முடியாது பலத்த இழப்புகளோடு தப்பியோடிய இந்தியப்படையினர் பதவி இறக்கப்பட்டனர். "மொறிஸ்" என்ற நாமம் கேட்டாலே நடுங்கினர் உலகின் நாலாவது பெரும் இராணுவத்தின் சிப்பாய்கள். அவன் நாமம் சொன்னவர்களை அடித்தனர், உதைத்தனர், துன்புறுத்தினர்.

அவன் பெற்றோரை, உடன் பிறப்புக்களை, மைத்துனரை இராணுவ முகாம் வரை கொண்டுசென்று வதைத்தனர். தமிழீழத்தில் அவன் வைத்த நம்பிக்கை நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே போயிற்று.

தேடுதல் வேட்டைக்கு நடுவிலும் அவன் பணிகள் தொடர்ந்தன. இயக்க வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருந்தான். அவன் செய்துவிட்ட பணிகள் கொஞ்சநஞ்சமல்ல. எண்ணிலடங்காது. சாதாரண

படைவீரனாகச் சேர்ந்த அவன் கப்டன் பதவி வரை உயர்வு பெற்று, மிக மிக ஆபத்தான சூழ்நிலையில் மக்கள் மத்தியில் நடமாடி, இயக்க வளர்ச்சிக்காற்றிய சேவைகள் மதிப்பிடற்கரியதாகும்.

வெற்றிகள் பலவற்றை ஈட்டி, அளப்பரிய சாதனைகள் பலபுரிந்து, மக்கள் மனதில் அழியாத இடம்பெற்றுவிட்டான் கப்டன் மொறிஸ். நாட்டு மக்களின் அன்புக்கும் ஆதரவுக்கும் பாத்திரமானான். தன் சகாக்களை அன்புடன் நேசிப்பதில் அவனுக்கு நிகர் அவனேயானான்.

இயக்கத்திலும், இயக்க உறுப்பினர் மீதும் அவன் கொண்டிருந்த மட்டற்ற அன்பையும் விசுவாசத்தையும், கடைசி நேரம் வரைக்கும் அவன் செய்த செயல்கள் தெளிவாகக் காட்டுகின்றன.

குழந்தைகளும் அவனை அறிந்து புரிந்துகொண்டு அன்பைச் செலுத்தும் வகையில் நாட்டுமக்களுடன் உறவாடினான்.

M.O (mines operater) என மக்களால் செல்லமாக அழைக்கப்பட்டான்.

பெரியவர், சிறியவர், ஏழை, பணக்காரன், உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற பாகுபாடுகளைக் கருதாது எல்லோரோடும் அன்பாகப் பழகினான். மக்களும் அவனை நேசித்தனர், அவனும் மக்களை நேசித்தான்.

ஒரு நாள்..

1989 ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி..

அதிகாலை..

இரவு நீண்ட நேரத்தின் பின் நித்திரைக்குச் சென்ற மொறிஸ்... காலை எழுந்து கடன்களை முடித்து, குளித்துத்


www.tamilarangam.net

**கப்டன் மொறிஸ்.**

***1991 முல்லைத்தீவு மாவட்ட மாவீரர் நாள் விழாவில்...***

**கூட வந்த தோழர்களிற்கு**
**ஓட வழி செய்துவிட்டு**
**தனித்திரண்டு புலிகளுடன்**
**களத்தினிலே போராடி**
**பாரதத்துப் பேய்களது**
**பாவரத்தம் களம் சிதற**
**கோரமுடன் படை சரித்து**
**வீரமுடன் மண் சாய்ந்த**
**தீரமகன் மொறிஸ் எங்கள்**
**தேசத்து மாவீரன்...**

*...விழாக்கவியில் இருந்து...*

தன் கடமைக்குத் தயாராகினான். சாப்பாட்டுக்கு வேறு இடத்திற்குச் செல்லவேண்டும். அதற்கு முன்னர், இயக்க சம்பந்தமான பரிசோதனை ஒன்றில் ஈடுபடுகின்றனர் மொறிஸும் அவனுடைய ஏழு சக தோழர்களும்.

சூழ்ச்சியின் விளைவு..

500க்கும் மேற்பட்ட இந்தியப் படையினர் Map உடன் அவன் இருந்த பகுதியைச் சுற்றிவளைக்கின்றனர். அவன் மீது நேசமும் பாசமும் கொண்ட பருத்தித்துறை வாழ் மக்கள் அவனுக்கு இந்தத் தகவலை தெரிவிக்க ஓடிவந்தனர். அவன் விடயத்தில் பலமுறை தோல்வியைத் தழுவிக்கொண்ட இந்தியப்படையினர் ஓடிவந்த மக்களை மேற்கொண்டு நகரவிடாது, அவ்விடங்களிலேயே அதாவது தெருவீதியிலேயே இருத்திவிட்டனர்.

சுற்றியுள்ள காணிகள், வீடுகள், வீதிகள் எல்லாம் இந்தியப்படையின் சுற்றிவளைப்பு. எந்தப் பக்கம் பார்த்தாலும் இந்தியப் படைவீரர்கள். நடுவில் தனது பணியில் கப்டன் மொறிஸ், அவனது சகாக்களுடன்.

சூழ்சியின் விளைவால் தான் சுற்றிவளைக்கப் பட்டிருப்பதையும், தன்நிலைமையையும் அறிந்த மொறிஸ் சிறிதும் கலங்கவில்லை. அஞ்சி ஓடவில்லை. தனது மெய்ப்பாது காவலலனையும், காவல் கடமைக்குப் பொறுப்பான போராளியையும் மட்டும் தன்னுடன் நிற்கச்சொல்லிவிட்டு இந்தியப்படையை நோக்கிச் சுட்டவாறே

"நான் ஒருகை பார்த்துவிட்டு வருகிறேன். நீங்க ஓடுங்கடா." என்று கத்தினான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அவன் கட்டளைப்படி, மிகுதி ஐவரும் அவன் சொன்ன பாதை வழியே சுட்டுக்கொண்டு ஓடினர்.

அதன் பின் மொறிஸ் 3 இந்தியப் படையினரைச் சுட்டு வீழ்த்தினான்.

காவல் போராளி (சிறீதரன்/வெள்ளை) சுட்டுவீழ்த்தப்பட்ட போதும் தொடர்ந்து போராடினான்.

இந்தியப்படையினர் சரமாரியாக சுட்ட சூடு அனைத்திற்கும் தப்பித் தப்பிப் பாய்ந்தபடி அவர்களைச் சுட்டவாறே அடுத்த காணிக்குள் பாய முற்பட்ட வேளையிலேயே பின்காணி முழுவதும் இந்தியப்படை நிற்பதை அவதானித்தான். இந்நிலையிலும் கூட அவன் கலங்கவில்லை. தொடர்ந்து அவர்களை நோக்கிச் சுட்டுக்கொண்டும், அவர்களின் சூட்டிலிருந்து தப்பிக்கொண்டும் இருந்தான்.

துப்பாக்கி ரவைகளினால் அவனை வீழ்த்தமுடியாதென்பதை உணர்ந்த இந்தியப்படையினர் அவன் நின்ற இடத்தைக் குறிபார்த்து பசூக்கா ஷெல்லும் அடித்து, கிறனைட்டையும் எறிந்தார்கள். ஷெல் துண்டுகள் அவன் மார்பையும் தலையையும் பதம் பார்க்க கரும்புகை மண்டலத்துக்குள். இரத்தவெள்ளத்தோடு சமாதியாகினான் மொறிஸ். பின் அவனின் மெய்ப்பாதுகாவலன் (ஜெகேசன்/லெப்.ரம்போ) இன் உடலையும் சல்லடையாக்கினர் இந்தியப் படையினர்.

மாவீரர்களான மொறிஸ், ரம்போ, வெள்ளை மூவரையும் இழந்து நாடே அழுதது.


மொறிஸை விண்ணுலகுக்கு அனுப்பிய இந்தியப் படையினருக்கு பதவி உயர்வாம்! விருந்தாம்! தங்கப்பதக்கமாம்.

மொறிஸின் தம்பி (வயது 22) இன்னும் தமிழீழத்திற்காய்ப் போராடிக்கொண்டிருக்கிறார்.

**திலீபன்**

# கண்ணீரில் மூழ்கும் ஓடங்கள்

தளபதி கிட்டுவின் தாய் தலைவர் வே.பிரபாகரனிடம் கதறி அழும் காட்சி



**தன் மகன் கிட்ட இருந்த போது**
**கிட்டு கிட்டு என்று வாய்விட்டு அழைத்தவள்..**
**அவன் எமன்கிட்ட சென்ற போது**
**வாய்விட்டு அழுகின்றாளோ...**

**மொட்டுதனை இழந்துவிட்ட முல்லைச் செடியாய்**
**மெட்டுதனை இழந்துவிட்ட மேடைக் கச்சேரியாய்**
**கிட்டு உன்னைத் தொலைத்து விட்டு**
**தான் அழுகின்றாளோ இந்தத் தாய்....**
**கிட்டுவின் உடலை**
**போரில்பட்ட காயத்தின் ரணம் தழுவியபோது**
**புறநானூற்றுப் புலி ஒன்றை**
**பெற்றெடுத்த வயிறென்று பூரித்துப் போனவள்...**
**தன் வீரமகனை மரணம் தழுவியபோது**
**அந்தத் தாயே குழந்தையாகி அழுகின்றாளோ...**
**அந்தப் புலிகளின் தலைவனை**
**தாயாக்கி ஆறுதல் தேடுகின்றாளோ...**
**அதனால்தான் ஆர்த்து எழும்புலி ஆரத் தழுவி**
**அவளுக்கு ஆராரோ பாடுகின்றதோ... அய்யகோ**
**தமிழர் நிலை இதுதானா என்று வாடுகின்றதோ...!**

*** டி.ஆர் ***

நன்றி
டி. ராஜேந்தரின் 'உஷா' *23.04.1993*




பாடசாலைக்குச் சென்று கல்வி கற்றுவிட்டு, தனது ஓய்வு நேரத்தில் வீட்டில் கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொண்டிருக்கும் சிறுவன்.

எரிபொருள் தடையையும், விறகுப் பிரச்சினையையும் எதிர் கொண்டு, விற குகளைச் சேகரித்து தலையில் சுமந்து செல்லும் எங்களின் சின்னச் சோதரர் களை படத்தில் காண்கிறீர்கள்.



www.tamilarangam.net




## அறிவுக் களஞ்சியத்திற்கு இனவெறியின் இட்ட நெருப்பு

தமிழர்களின் அறிவுக் களஞ்சியமாக யாழ். நூலகம் தென் ஆசியாவிலேயே முதன்மையாகத் திகழ்ந்தது. இனவெறி அரசினால் திட்டமிட்டு தீயிடப்பட்டது. தீ அந்த அறிவுக் களஞ்சியத்திலிருந்த அனைத்து நூல்களையும் அழித்தது. தமிழர்களை கல்வி அறிவற்றவர்களாக்கி இருள் சூழ்ந்த வாழ்வுக்குள் சிக்கவைக்க சிறிலங்கா இனவெறி அரசு திட்டமிட்டு செயற்பட்டது. மேலும் தொடர்ந்த ஷெல் அடிகளாலும், குண்டு வீச்சுக்களாலும் உருக்குலைந்து கிடக்கிறது. நெஞ்சைத் துயரால் பிழியும்வண்ணமாய் இருக்கும் இந்த அறிவுக் களஞ்சியத்தின் தோற்றத்தைக் காணும்போது, உங்களுக்கு ஏற்படும் உணர்வுப் பொறிகளை கவிதையாகப் பதிவாக்குங்கள். சிறந்த ஆக்கமாய் காணப்படுபவை எமது அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்.

- ஆசிரியர் குழு. -




## களத்தில் புலிகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# வன்னி வளநாட்டின் பண்பாட்டுக் கோலங்கள்

முள்ளியவளை நடா. ரங்கநாதன்



(சென்ற இதழ் தொடர்ச்சி)

மாறாக வன்னியின் பண்பாட்டு விழுமியங்கள் இன்றைய காலகட்டங்களில் பெருமளவுக்குச் சிதைவடைந்து வருவதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இதற்குப் பல்வேறு காரணிகள் நேரடியாகவும், மறைமுகமாகவும் செல்வாக்குச் செலுத்துவனவாக உள்ளன. இவற்றினை இயல்புக் காரணிகள், மனித நடவடிக்கைக் காரணிகள் என இரண்டு வகையாகப் பாகுபடுத்தலாம். முதலாவதான இயல்புக் காரணிகள் என்னும் வகையில், ஒரு குறிப்பிட்ட இனத்தினுடைய நாகரிகம், பண்பாடு, கலை என்பன பல்வேறு தலைமுறைகள் மாறும்போது மாற்றமடையலாம். இத்தகைய மாற்றமானது மாறுதலடைய நீண்டகால வேளையில் மெதுவான போக்கில் ஏற்படும் ஒரு நிகழ்வாகும். உதாரணமாக, திராவிடக் குடியிருப்புக்கள் வன்னிப் பகுதியில் நடைபெற்றபோது மொழியியல் ரீதியாகவும், பண்பாட்டு ரீதியாகவும் இந்த நிலை மத்திய காலங்களில் இருந்திருக்கவில்லை. பின்பாக மன்னராட்சிக் காலங்களில் தமிழ் மொழியும் சைவ சமயமும் வளர்வதற்காகப் பல நடவடிக்கைகள் மன்னர்களால் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் கால ஓட்டத்தில் ஏற்படும் இயல்பான மாறுதல்களால் பண்பாட்டிலும், நாகரிகத்திலும் சிதைவு ஏற்பட்டமை மறுக்கமுடியாத ஒன்றாகும்.

www.tamilarangam.net

இரண்டாவதான மனித நடவடிக்கைக் காரணிகளை நோக்கும் போது, இன்றைய வன்னியின் பண்பாட்டு விழுமியங்களின் சிதைவில் இக்காரணியே பெருமளவு பொறுப்பேற்பதாக உள்ளது. இப்பிரதேசத்தில் ஆதித் தமிழர்கள் வாழ்ந்து வந்த காலத்தில் கலையும், பண்பாடும் பெருமளவுக்குத் தூய்மையாகவும், செழிப்பானவையாகவும் காணப்பட்டன. இந்நிலை ஆங்கிலேயர் இந்நாட்டின் உட்பாகங்களை கைப்பற்றியதில் இருந்து வன்னியின் ஆட்சியமைப்பு, மொழி, சமயம், பண்பாட்டு நிலைகளில் மாறுதல் ஏற்படத் தொடங்கியது.

பின்னர் இந்நிலை இலங்கையின் ஆட்சியுரிமை சிங்களவர் கையில் மாறியவுடன் மாறத் தொடங்கியது எனலாம். திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் வன்னிப் பிராந்தியத்தில் துரிதப்படுத்தப்பட்டதால் இன, மொழி, சமய, பண்பாட்டு ரீதியான முரண்பாடுகள் ஏற்படத் தொடங்கின. முதலில் வவுனியா மாவட்டத்திலும், பின்னர் மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களிலும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் நிறுவப்படலாயின. 1891ம் ஆண்டில் எடுக்கப்பட்ட முதலாவது குடிசனக் கணிப்பின்படி 970 சிங்களக் குடும்பங்களே வவுனியா மாவட்டத்தில் காணப்பட்டன. இதிலும் மடுகந்தை என்னும் கிராமந்தான் முதன் முதலாக வன்னி மண்ணில் ஏற்படுத்தப்பட்ட சிங்களக் குடியேற்றமாகும். ஆனால் இன்று வவுனியா மாவட்டத்தில் தோணிக்கல் என்னும் கிராமம்வரை சிங்கள ஆக்கிரமிப்பு நடைபெற்றுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தில் கென்பாம், டொலர்பாம், கொக்கிளாய், நாயாறு,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்கள் நிறுவப்பெற்றுள்ளன.

மேற்காட்டிய சிங்களக் குடியேற்றங்கள் வன்னியில் நிறுவப்பட்ட வேளையில் தமிழ் இனத்தில் பல்வேறு தாக்கங்கள் ஏற்படத் தொடங்கியன. பூர்வீகமாக தமிழ் மக்கள் வாழ்ந்து வந்த நிலங்கள் பறிபோனமை, இவற்றில் இருந்த தமிழர் சொத்துக்கள் இழக்கப்பட்டமை, கோயில்கள், பாடசாலைகள் போன்ற நிறுவனங்கள் இடிக்கப்பட்டமை; மாற்றப்பட்டமை, தமிழ்மொழி பேசப்பட்ட பிரதேசங்களில் சிங்கள மொழி ஆதிக்கமுற்றமை போன்ற பல்வேறு தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன. சுருக்கமாகக் கூறின் அரசாங்கத்தால் திட்டமிட்டுப் பறிக்கப்பட்ட வன்னிப் பிரதேசங்கள் தமது பண்பாட்டு விழுமியங்களை மெல்ல மெல்ல இழக்கும் நிலைக்குள்ளாகத் தொடங்கின.

## அரச பயங்கரவாதம்

அரச பயங்கரவாத நடவடிக்கைகள் வன்னிப்பிரதேசத்தின் அன்றாட வாழ்க்கையை மட்டும் பாதிக்கவில்லை. நீண்டகாலமாக கட்டிக் காத்துவந்த கலை, பண்பாட்டு முறைகளில் பாரிய தாக்கத்தினையும் ஏற்படுத்தியுள்ளன. இராணுவக் கெடுபிடிகளால் வன்னியில் இடம்பெயர்ந்து வாழும் மக்கள் தொகை நாளாந்தம் அதிகரித்த வண்ணமே உள்ளது. வன்னியில் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள அகதிமுகாம்களில், அவலமான முறையில் வாழ்க்கை நடாத்தும் மக்கள் கூட்டம் (மன்னார் மாவட்டத்தில் மடு அகதி முகாம், முல்லைத்தீவில் புதுக்குடியிருப்பு, விஸ்வமடு போன்ற இடங்களில் அமைக்கப்பட்டுள்ள அகதி முகாம்கள்) பல்வேறு கலை, பண்பாட்டு நடைமுறைகளுக்கு அப்பால் வாழ்க்கை நடாத்திக் கொண்டிருக்கின்றது. இந்நிலை நீடிக்குமானால் தமிழ்ப் பண்பாடு ஒரு முரண்பாடான மாற்றத்துக்குள்ளாக்கப்பட்டு தன் தனித்துவத்தை இழந்து சீரழிந்து விடலாம்.

மேலும் அரச பயங்கரவாத நடவடிக்கையால் இந்தியாவுக்கு ஓடிப்போன தமிழ் மக்கள் மீண்டும் இங்கே திரும்பிக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் ஏறக்குறைய இரண்டு வருடங்கள் அங்குள்ள புனர்வாழ்வு நிலையங்களிலும், தனியார் வீடுகளிலும் வாழ்ந்து இப்போது அங்கிருந்து அனுப்பப்படும் பட்சத்தில் இங்கு வந்து தனியான அகதிமுகாம்களில் உள்ளனர். இவர்களின் நடத்தைகள், ஒழுங்குகள் இன்னொரு நிலையில் உள்ளது. இந்தியாவில் இருந்த போது அங்கு கொள்ளப்பட்டு வந்த பழக்க வழக்க, நாகரிக முறைகளில் ஈர்க்கப்பட்டு, ஆனால் அதனிலும் முழுமை பெறாது எமது மரபு முறைகளையும் கொள்ளாது புதிய முரண் தன்மையுடையோராகக் காணப்படுகின்றன.

அரச வன்செயல்களால் வன்னியிற் காணப்படும் பல வழிபாட்டுத் தலங்கள் முற்றாக அழிக்கப்பட்டோ, சேதமாக்கப்பட்டோ உள்ளன. உதாரணமாக முல்லைத்தீவு வீரகத்திப் பிள்ளையார் கோவில், கள்ளப்பாடு முருகன் கோவில், வற்றாப்பளை அம்மன் கோவில், முல்லைத்தீவு சென் மேரீஸ் தேவாலயம்,

## இனவெறி விளம்பரம்

**"முன்னே செல்லும் உங்கள் கால்கள் இரத்தம் தோய்ந்தால்தான் பின்னே வரும் உங்கள் கால்கள் சுதந்திரமாக நடமாட முடியும்".**

**இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பது தொடர்பாக அரசாங்கத்தினால் விளம்பரக் கொம்பனி ஒன்றின் மூலம் செய்யப்பட்ட விளம்பரங்களில் ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள 'தினமின', டெய்லிநியூஸ், தினகரன் ஆகிய பத்திரிகைகளின் அரைப்பக்கம் அளவில், பல வர்ணங்களில் இவ்விளம்பரம் அச்சாகியுள்ளது. இவ்விளம்பரத்தில் சற்று முன்பின்னாக இரு இராணுவச் சப்பாத்துக்கள் காணப்படுகின்றன. இச்சப்பாத்துக்களின் முன்கால் பகுதி இரத்தம் தோய்ந்தது போன்று சிவப்பு வர்ணத்தில் காணப்படுகின்றது. இவ்விளம்பரத்தைப் போன்று மேலும் பல விளம்பரங்களை பல நாட்கள் தொடர்ந்து அரசாங்கம் வெளியிட்டுள்ளது.**

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

திருக்கேதீஸ்வரம் சிவன் கோவில் போன்ற வரலாற்றுப் புகழ்பெற்ற கோவில்கள் இன்று அழிக்கப்பட்டுள்ளமை எமது கலை, பண்பாடு என்பவற்றைக் குழி தோண்டிப் புதைக்கும் செயற்பாட்டின் வடிவமாகவே காணப்படுகின்றது. இத்துடன் முல்லைத்தீவு நகரில் உள்ள அனைத்துப் பாடசாலைகளும் அழிக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லது இராணுவ முகாமாக மாற்றப்பட்டிருக்க வேண்டும். (முல்லைத்தீவு நகரம் இப்போது தடைசெய்ப்பட்ட வலயம் என்பது குறிப்பிடத்தக்கது) இந்நடவடிக்கை எமது இனத்தின் கல்வி கற்கும் சந்ததியை ஒரு இருண்ட சமுதாயமாக மாற்றும் நடவடிக்கையாகவே உள்ளது.

## பயிரிடல் நடவடிக்கைகள்

வன்னியின் பாரம்பரியங்களுள் பயிரிடல் முறைகளும் குறிப்பிடத்தக்கவை. "ஆடி விதை தேடி விதை" என்னும் முதுமொழிக்கேற்ப பருவ காலங்களுக்கு ஏற்பப் பயிரிடல் நடவடிக்கைகள் இங்கு மேற்கொள்ளப்பட்டு வந்தன. நிலம் பண்படுத்தலுக்காக மாடுகள் பயன்படுத்தப்பட்டு வந்தன. செயற்கை உரத்தை நம்பியிராமல் இயற்கை உரப் பாவனையும், அதற்கு ஏற்ற நெல்லினங்களையும் பயிரிட்டனர். அறுவடையின் போது 'பரத்தை வெட்டு' என்னும் முறையில் கிராம விவசாயிகள் பலர் ஒன்று கூடி நாட்டார் பாடல்களையும், கிராமியப் பாடல்களையும் பாடி, அருவி வெட்டி, மாடுகளால் சூடு மிதித்தனர். இந்தச் செழிப்பான பாரம்பரியம் மறைந்துவிட்டது. இப்போதெல்லாம் பருவ மழை பொய்த்துவிடுகின்றது. பண்படுத்தல், சூடுமிதித்தல் எல்லாம் செயற்கை உரப்பாவனை, இயந்திரங்கள் என மாற்றமடையப் பரத்தை வெட்டு முறை, நாட்டார் பாடல்கள், கிராமியப் பாடல்கள் எல்லாம் மருவிச் செல்கின்றன. நவீன முறையிலான பயிர்செய்கை முறை உற்பத்தி அதிகரிப்புக்கு வழிகோலியமை ஏற்கப்படவேண்டியதே. ஆனால் நம் பாரம்பியம் மறைந்து விட்டமை வேதனைக்குரியது.

வன்னியின் வரலாறும், அதன் பண்பாட்டுப் பாரம்பரியமும் மரபுக் கவிதைகள், நாட்டார் பாடல்கள், கிராமியப் பாடல்கள், சமூக நாவல்கள் போன்றன மூலம் வெளிக்கொணரப் பட்டன. இப்பங்களிப்பில் சொக்கன், புலவர் அரிய நாயகம், வன்னியூர் வேலன், முல்லைமணி வே. சுப்பிரமணியம் மூதூர்க் கவிஞர், அ. பாலமனோகரன், வையாபுரி ஐயர் முதலியோர் முக்கியமானவர்களாவர். இத்தகைய மரபுக் கவிதைகள், நாட்டார் பாடல்கள் என்பன அண்மைக் காலங்களில் தோன்றுவது மிகவும் அருகிவிட்டன. இந்தத் தலைமுறையினரின் பின்பாக இத்தகைய முயற்சிகளில் இன்றைய தலைமுறையினர் அதிகம் ஈடுபாடு கொள்வதாகத் தெரியவில்லை. இதில் முல்லைமணி அவர்கள் எழுதிய பண்டார வன்னியன் என்னும் வரலாற்று நாடகம் இப்பிரதேசத்தின் வரலாறு, வீரம், அரசியல் என்பவற்றில் ஒரு குறிப்பிடத்தக் ஆய்வு என்றே கூறவேண்டும்.

மாற்றமடையும் அரசியற் சூழ்நிலைகள் வன்னி வரலாற்

## பேரினவாதத்தின் போர்க்குரல்

வீட்டிற்கு வந்த பிச்சைக்காரன் ஒருவனுக்கு மருமகள் "பிச்சை இல்லை" என்று கூறி அனுப்பினாளாம். ஆனால் அதை ஏற்றுக்கொள்ளாத மாமியார், பிச்சைக்காரனை திருப்பிக் கூப்பிட்டு, "பிச்சை இல்லை என்று கூற அவளுக்கு என்ன உரிமை இருக்கின்றது; இப்பொழுது நான் கூறுகின்றேன் பிச்சை இல்லைப் போ." என்று கூறி பிச்சைக்காரனைத் திருப்பி அனுப்பி வைத்தாளாம்.

மாமியார் மருமகள் மோதலை வெளிக்காட்டுவதற்கென 'பகிடியாக' கூறப்படும் இக்கதையைத் தற்பொழுது, இனப்பிரச்சினைத் தீர்விற்கென நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் கதை ஒத்துள்ளது. ஆனால் இதில் ஒரு வேறுபாடும் உண்டு. மாமியார் விவகாரத்தில், இருவரும் ஒரே முடிவைத் தனித் தனியாகக் கூறினார்கள். ஆனால் தெரிவுக்குழு விடயத்தில், சிங்கள பேரினவாதக் கட்சிகள் ஒவ்வொன்றும் முன்னர் தனித்தனியாகக் கூறியதைத் தற்போது ஒருமித்துக் கூறியுள்ளன.

சிங்களப் பேரினவாதத்தைப் பொறுத்து கிழக்கு மாகாணத்தை சுபஸீகரம் செய்வதும், தமிழர் தேசியத்தைச் சிதைத்து இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு காண்பது என்பதுமே அவர்களின் அடிப்படை நோக்கமாகும்.

www.tamilarangam.net

றில் முக்கியமான ஆய்வினை வேண்டி நிற்கின்றன என்பது உண்மையே. மாறிவரும் வன்னியின் பண்பாட்டு விழுமியங்கள் காலப்போக்கில் இம்மண்ணிலேயே எம்மை தனித்துவமான பண்பாடு அற்றோராக ஆக்கலாம். அவ்வாறாயின் மாவீரன் பண்டார வன்னியன் புகழ்பாட நாம் அருகதையற்றவர்கள். முதலில் பறிபோன நிலப்பரப்பில் மீண்டும் தமிழ்ப் பண்பாட்டினை உருவாக்க முயற்சிப்போம். அருகிச் செல்லும் பண்பாட்டு விழுமியங்களை மீண்டும் தனிப் பொலிவோடு இங்கே வளர்த்தெடுப்போம். அதற்காக முதலில் இச்சமுதாயத்தின் பல்வேறு மட்டங்களில் இருந்தும் முற்போக்குச் சிந்தனைகளை உருவாக்க வேண்டும். ■ ■



# இந்துமா கடலில் அலையும் பேய்க் கப்பல்கள்

உலகின் வல்லரசு நாடுகள் தமது நாடுகளில் தேங்கும் அணு உலைக் கழிவுகள், இரசாயன ஆலைக் கழிவுகள் போன்ற கொடிய நச்சுப் பொருள்களை, கழிவுகளை ஏதாவதொரு மூன்றாம் உலக நாட்டில், இரகசியமாகக் கொண்டுவந்து கொட்டுகினறன.

அதிர்ச்சியையும் பீதியையும் உண்டுபண்ணக்கூடிய இச்செய்தி மனித குலத்திற்கே ஆபத்தானதாகும். திடீரென புதுப் புது நோய்கள் பரவும்; நீர்நிலைகள் நஞ்சாகிப்போகும்; மீன்கள் செத்து மிதக்கும்; பயிர்கள் திடீரெனக் கருகிப் போகும்......! இப்பபாதிப்புகள், பேரழிவுகள் எங்கே? எப்போது....? நிகழும் என யாராலும் கண்டறிய முடியாது.

நச்சுக் கழிவுகளைச் சுத்திகரித்து, செயலிழக்கச் செய்வதை விட, அவற்றை இரகசியமாகக் கடலில் கொட்டுவது அல்லது மூன்றாம் உலக ஏழை நாடொன்றில் புதைத்து விடுவது, மிகவும் சிக்கனமானதாகும். இதனாலேயே வல்லரசுகள் நச்சக் கழிவு ஏற்றுமதியை விரும்புகின்றன.

ஒரு தொன் நச்சுக் கழிவுப் பொருள்களை செயலிழக்கச் செய்வதற்கு குறைந்தது பத்தாயிரம் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட வேண்டும். இதைவிட நச்சுக் கழிவுகளை கப்பலிலே ஏற்றி, நடுக்கடலில் கப்பலுடன் மூழ்கடிக்கச் செய்துவிடுவது செலவு குறைவானதாகும்.

போதைப்பொருள் வியாபாரம், சட்டவிரோத ஆயுத வியாபாரம் ஆகியவற்றை விட இத்தொழில்தான் இன்று முன்னணியில் திகழ்கிறது.

அமெரிக்காவின் பிலடெல்பியாவிலிருந்து நச்சுக் கழிவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு புறப்பட்ட கப்பலொன்று ஆண்டுக்கணக்கில் கடலிலேயே நாடோடியாக அலைந்து திரிந்தது. இறுதியில் இலங்கையிலிருந்தும் அக்கப்பல் விரட்டப்பட்டது; பின் அந்தக் கப்பலையே காண முடியவில்லை; வழமை போலவே இக்கப்பல் இந்துமா கடலில் மூழ்கடிக்கப்பட்டது....?! அண்மையில் அமெரிக்காவிலிருந்து புறப்பட்ட பல நச்சுக் கழிவுக் கப்பல்கள் நடுக்கடலில் மூழ்கடிக்கப் பட்டுள்ளன.

உலகச் சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்கான பசுமை, அமைதி இயக்கம் கருத்துத் தெரிவிக்கையில்:

"இந்துமா கடல் பிராந்தியத்தில்தான் நச்சுக் கழிவுக் கப்பல்கள் திரிகின்றன. நச்சுக் கழிவுகளைக் கொட்டுவதற்கென்றே சில ஏழை நாடுகளின் சிறிய தீவுகளைக் கூட இரகசியமாக வாங்கியுள்ளன சில வல்லரசு நாடுகள்."

என அறுதியிட்டுக் கூறியுள்ளது பசுமை, அமைதி இயக்கம். மனித குலத்துக்கே ஆபத்தான நச்சு இரசாயனக் கழிவுகளால் உலகிற்கு ஏற்படும் பேரபாயத்திலிருந்து உயிரினங்களைக் காப்பாற்ற நீதியான யுத்தமொன்றைத் தொடுக்க வேண்டியது அவசியமானதாகும். ■ ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






# அக்கரைப்பூக்கள்

**அன்புடன் ஆசிரியருக்கு!**

வைகாசி மாத இதழான எரிமலையில் அதிகமான பக்கங்களைக் கவிதைகள் இடம்பிடித்திருந்தது. கவிதைகளை பெரும்பாலானோர் விரும்பி வாசிப்பதில்லை. துணுக்குச் செய்திகளையும், குட்டிக் கதைகளையும் சேர்த்திருக்கலாம். அவை வாசிக்கத் தூண்டுவனவாக இருக்கும்.

எரிமலை சித்திரை மாத இதழ் அட்டைப்படம் கவரத்தக்கதாய் அமையவில்லை.

வைகாசி மாத அட்டைப்படமும் ஒரு அமைப்புக்குள் வராதிருந்தது. எரிமலை இதழ் தொடர்ந்தும் புதிய புதிய கருத்துக்களையும், செய்திகளையும் வடிவ மாற்றங்களையும் கொண்டு வலம் வர வேண்டும் என்பதே எனது அவா.

கிட்டண்ணாவைப்பற்றி முத்து எழுதிய கவிதை அருமை.

**"எரிமலை" வாசகன்.**
**ஜேர்மனி.**

**"எரிமலை" ஆசிரியருக்கு!**

புலம்பெயர்ந்த மக்களின் வாழ்வியல் யதார்த்தத்தையும் இலக்கிய பதிவாக்குங்கள்.

**நாகேஷ்**
**பாரிஸ்.**

**அன்புடன் "எரிமலை" ஆசிரியருக்கு!**

வைகாசி மாத இதழ் பரவாயில்லை. சிறுகதை ஒன்று தந்திருக்கலாமே.

**குகன்**
**பாரிஸ்.**

**ஆசிரியர் கவனத்திற்கு!**
**அன்புடையீர்,**

குறாப்போட்டோவை அட்டைப்படமாக போடுவதை தவிர்த்திருக்கலாம்.

**வேலு.**

**அன்புடையீர்,**

தளபதி கிட்டிற்கு எங்கள் நெஞ்சம் நெகிழ்ந்த வீரவணக்கங்கள். உங்கள் எரிமலையை, ஐயா பாவலேறு பெருஞ்சித்திரனார் அச்சகத்தில் காண நேர்ந்தது. அது எவ்வாறெனில், நான் தமிழுக்காக 47 நாட்கள் தமிழ் நாடெங்கும் நடைபயணம் சென்று இறுதியாக சென்றடைந்தபோது படிக்க வாய்ப்பு ஏற்பட்டது. முன்பு புலிகள் தமிழ்நாட்டில் இருந்தபோது வீரவேங்கை, உறுமல் போன்ற இயக்க இதழ்களை வாங்கி பயின்றுவந்தேன். தற்போது எரிமலை படிக்க நாங்கள் சிலர் ஆர்வமாக இருக்கிறோம். அனுப்பித்தாருங்கள், அல்லது அது பெறும் விதம் குறித்து எங்களுக்கு எழுதுங்கள். நீங்கள் ஆவன செய்வீர்களேயானால் இங்குள்ள மக்களுக்கு சிறிதேனும் இனமான உணர்வை ஊட்டலாம் என்றுதான் என் அவா.

**சோ. சுகுமாறன்**
**நாகர்கோயில்.**
**தமிழ்நாடு.**

**ஆசிரியர் குழுவிற்கு!**

எரிமலையின் வடிவமைப்பு மாற்றி அமைக்கப்பட்டால் நன்றாக இருக்கும்.

**சிறி.**

**என்று வரும் விடிவு என்று**
**ஏங்கிடும் உயிர்கள்**
**நாளும் நின்று**
**இனியும் எம்தேசம் ஏற்குமோ**
**உயிர்ச்சேதம்**
**எமக்கோர் தேசம் இனிதாய்**
**பிறக்கும்.**

**T.P. கரன்**
**சுவிஸ்.**

**அன்புடன் எரிமலை வாசகர்களுக்கு!**

**எரிமலை பற்றிய ஆக்கபூர்வமான உங்கள் கருத்துக்களை எவ்வித தயக்கமுமின்றி முன்வையுங்கள். வாசகர்களே! குட்டிக்கதைகள், சிறுகதைகள், ஓவியங்கள், காட்டூன் சித்திரங்கள், புகைப்படங்கள் கவிதை, கட்டுரை, தொழில் நுட்பம், சூழல் பாதுகாப்பு பற்றிய விடயங்கள், புதிய புதிய கண்டுபிடிப்புக்கள் பற்றி நீங்கள் அறிபவற்றை எமக்கு எழுதி அனுப்பி வையுங்கள். மேலும் உங்களிடமிருந்து கிடைத்த அக்கறைமிக்க கடிதங்களுக்கு எம் இதயபூர்வமான நன்றி.**

**- ஆசிரியர் குழு -**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# காலச் சுவடுகள்



**இங்கு வாழ்ந்த தமிழன் தன்னயரா உழைப்பாலும், தன்னூக்க முயற்சியாலும், தன்னுடல் பொருள் ஆவி அனைத்தையும் சாறாகப் பிழிந்து, காட்டை நாடாக்கி தானும் வாழ்ந்து ஏனையோரையும் வாழ்வித்து வந்தான். இது ஒரு காலச்சுவடு.**

**- அனு. வை. நாகராஜன் -**

இந்த மண்ணின் சுவடுகளுக்கு அப்பாலும், அப்பாற் பதிந்த சுவடுகள் ஆயிரம் ஆயிரம் உண்டு. அவை அனைத்தும், கால நீரோட்டத்தில் மறைக்கப்பட்டன; மறைந்தும் போயின. ஆயினும், அச்சுவடுகளின் தடங்கள் வரலாற்றின் பதிவுகளுக்கு எங்கோ ஒரு மூலையில் என்றோ ஒருநாளில் ஏதோ ஒரு விடியலுக்கு வித்தாகியே தீரும். இது வரலாறு தரும் பாடம். அது நியதியுங் கூட.

அந்த வகையில், தென்னிலங்கையில், தமிழும் தமிழனும் வாழ்ந்த வரலாறு, ஏன் வரலாற்றின் ஒரு சுவடாக அமையக்கூடாது.

அநுராதபுரம், சிங்கள பௌத்தத்தின் ஒரு கேந்திர பூமி. அது சிங்கள பௌத்த வரலாற்றின்படி தொண்ணூறு முடிமன்னர்களின் அரசாட்சியின் சின்னமாக அரசிருக்கையாக விளங்கியதாம்.

ஆயினும், இச்சிங்கள பௌத்த மேலாதிக்கத்தின் ஊடே தமிழும், தமிழனும் எதிர்நீச்சலடித்த ஒரு வரலாறும் அங்கு இழையோடியிருப்பதை யாரும் மூடிமறைக்க முடியாது. முன் சொன்ன சிங்கள பௌத்த வரலாற்றுக் காலம், விஜயன் என்ற ஆரியனின் வருகையோடு தொடங்குகிறது.

இவனது வருகைக்கு முன்னரும், இந்தப் பூமி திராவிடரின் சொந்த மண்ணாக இருந்திருக்கிறது. இதற்கான, தொல்லியற் சான்றுகள் மட்டுமன்றி, புவியியல் மண்ணியல் மானுடவியல் போன்ற இன்ன பிறவும் அறிவியல் சாரச் சான்றுகளாகவும் இருக்கின்றன. வயலும், குளமும் விருத்தியடைய, மக்கள் வளமுஞ் சிறுகச் சிறுக வளமும் வனப்பும் பெற்றது.

**அந்நாளில்**

வளமான ஆற்றுப்படுக்கையாக விளங்கியது மல்வத்து ஓயா என இன்று அழைக்கப்படும் கடம்ப நதி; அருவியாறு என்றும் அழைக்கப்பெற்ற தமிழாறு ஆகும். இதன் இருமருங்கும் பொன் விளையுங் கழனிகளும் நறுமணங்கமழும் சோலைகளும் தீங்கனி சொரியுந் தருக்களும் நெடிதோங்கி இருந்தன. இப்பகுதியே, அன்று இந்நாட்டின் வளமான மக்கள் வதியும் அழகாபுரியாக விளங்கியிருக்கிறது என்பதற்கு எதுவித ஐயமும் இல்லை. இத்திராவிடக்குடியிருப்பு, ஆரியராற் சூறையாடப்பட்டது. ஆரிய வழித் தோன்றல்கள் தம்மினம் பெருக்கியதோடு, இருந்த கலைகலாச்சாரப் பண்பாடுகளையுங் கபளீகரஞ் செய்து, தம்முடைமை என அவற்றை ஆக்கியுங் கொண்டனர்.

**இது ஒரு காலச்சுவடு.**

அவ்வாரியப் பரம்பலுக்கு, தமிழகம் (தென்னிந்தியா) அடிக்கடி அச்சுறுத்தல் தந்து, தன்னாட்சியை இங்கு விரித்தது. அதனால், அநுராதபுரத்துச் சிங்கள பௌத்த அரசுகள் காலத்துக்குக் காலம் புலப்பெயர்வு கொண்டு, தென்திசை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# தமிழ் பிராமி சாசனம் கந்தரோடையில் மீட்பு.

www.tamilarangam.net

தமிழர் வரலாற்று பாரம்பரியம் தொடர்பாக, மூலாதாரங்களை தேடும் பணி ஒன்றின்போது கந்தரோடையில் பிராமி வடிவம் பொறிக்கப்பட்ட கறுப்பு மட்பாண்டத்துண்டுகள் சிலவற்றை யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத் துறை பேராசிரியர் செ.கிருஷ்ணராசா கண்டெடுத்துள்ளார்.

கறுப்பு, சிவப்பு மட்பாண்ட வகையைச் சேர்ந்த தட்டையான சட்டி ஒன்றின் விளிம்பில் மிகத் தெளிவாகப் பொறிக்கப்பட்டிருந்த சாசன வாசகம் ஒன்று கந்தரோடையில் உள்ள மேட்டு நிலப்பகுதியில் பொது மக்களால் வெட்டப்பட்ட குழி ஒன்றினுள்ளிருந்து மீட்கப்பட்டது.

இதில் 'குணி' என்ற மிகவும் தெளிவாக பிராமி வரி வடிவம் காணப்பட்டது. இது 'பிக்குணி' என்ற தமிழ்பதத்தின் இறுதிப்பாகமாக, கிடைத்துள்ள இச்சாசனம் அமையக்கூடும் என இது தொடர்பாக ஆராய்ந்த பேராசிரியர் கிருஷ்ணராசா தெரிவித்தார்.

இப்பதத்திற்கு உரிய வரி வடிவம் கி.பி. 1ஆம், 2ஆம் நூற்றாண்டுக்குரிய தமிழ்நாட்டு வரிவடிவ முறையை தழுவியதாக உள்ளது எனக் கூறப்படுகின்றது. இது தொடர்பான ஆய்வு தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஏகின. கிறிஸ்துவுக்கு முன் ஆரம்பித்த இவ்வீடாட்டம் கி.பி. 15ம் நூற்றாண்டு வரை நீடித்தது. இதனையடுத்தும் கி.பி. 20ம் நூற்றாண்டின் முற்கூறுவரை மேற்குலக அந்நியரின் மேலாதிக்கம் இங்கு தொடர்ந்தது.

இவ்வந்நியர் காலத்தில், அநுராதபுரம் வளமெல்லாங் குன்றி காடு மண்டி நிர்மாநுஷ பிரதேசமாயிற்று. மலேரியாப் பிரதேசம் எனும் நாமமும் பூண்டு மக்கள் குடியிருப்புக்கு உகந்ததல்ல என்றும் ஒதுக்கப்பட்டது.

## இந்நிலையில்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைக் கூறில், தொல்லியல் அகழ்வாய்வு காரணமாகவும், தூர்ந்து போன குளங் குட்டைகளின் புனரமைப்பு காரணமாகவும் இங்கு மக்கள் குடியிருப்பு வளத்தைப் பெருக்க வேண்டிய தேவையேற்பட்டது. அதற்கான ஆயத்தங்கள் ஆரம்பிக்கப் பெற்றன. குறிப்பாக அநுராதபுர நகரின் தொல்லியல் அகழ்வாய்வுகள் முனைப்புடன் இங்கு செயற்பட, 'பெல்' எனும் ஆங்கிலத் துரைமகன் தீவிரமாக முனைந்தார். அவர் முயற்சியால், இப்பகுதியில் வடக்கு கிழக்கு மாகாணத்துத் தமிழ்க் குடிகள் பல இங்கு மீளக் குடியமர்த்தப் பெற்றன.

வயலும், குளமும் விருத்தியடைய, மக்கள் வளமுஞ் சிறுகச் சிறுக வளமும் வனப்புப் பெற்றது. இதே காலகட்டத்தில் வடபுலத்துக் கல்வி வளமும் தொழில் நுட்பமும், வணிகத் திறனும் மிக்க தமிழ்க் குடிகள், இங்கு நிரந்தரமாகக் குடியமர்ந்து, நகரின் செல்வத்தைப் பெருக்கினர். மேலும், இவர்கள் தமக்கெனத் தனித் தனித் தமிழ்க் குடியிருப்புக்களையும் நகரில் ஏற்படுத்தி வாழ்ந்தனர். அந்த வகையில், மாவடி, ஐந்தேக்கர், நாலேக்கர், பெரிய சேனை, எல்லைக்கட்டு, ஒட்டுப் பள்ளம், யாழ்ப்பாணச் சந்தி போன்ற சிறப்பான தமிழ்க் குடியிருப்புகள் செழித்தோங்கி விளங்கின. அந்நாளில், கச்சேரிச் செயலகமென்ன, நீதித் தலமென்ன, பள்ளித்தலமென்ன, பயிர் செய் நிலமென்ன, சினிமாப் படமாளிகை போன்ற கேளிக்கைத் தலமென்ன யாவும் 'தமிழர் மயமாக' உடமையாகவே இருந்தன.

அன்று, இங்கு வாழ்ந்த தமிழன் தன்னயரா உழைப்பாலும், தன்னூக்க முயற்சியாலும், தன்னுடல் பொருள் ஆவி அனைத்தையும் சாறாகப் பிழிந்து, காட்டை நாடாக்கி தானும் வாழ்ந்து, ஏனையோரையும் வாழ்வித்து வந்தான்.

இது ஒரு காலச்சுவடு!

இதனையடுத்து அரச இயந்திரம் கைமாறியது. சிங்கள பௌத்த அரசு மீண்டும் தலையெடுத்தது. அதனூடே, இன மத வாதமும், அரச பின்னணியில் மறைமுகமாகவும், நேரடியாகவுங் கிளர்ந்தது. அந்நிலையில் 'நகர்ப் புனரமைப்பு' என்ற போர்வையில் அநுராதபுரம் நகர், 'புனித நகர்' எனப் பிரகடனப்படுத்தப் பெற்றது. அதற்காக, அந்நகரின் புனர் நிர்மாணத் திட்டம் என்ற ஒன்று பாராளுமன்ற நிறைவேற்றுத் திட்டமாகவும் வெளிப் படுத்தப்பட்டது. இதன் பிதாமகனாக அப்போதைய உள்ளூராட்சி அமைச்சர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா முன்னின்று செயற்பட்டார். இத்திட்டத்துக்குப் பின்னணியாக அவரது இனவாதக் கொள்கையின் இனவொழிப்புத் திட்டங்களிலிருந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## செயற்பாடுகளும் பலன்களும்

www.tamilarangam.net





இதன் மூலம் 'தேசிய அரசு' என்ற முகமூடி தரித்திருந்த அன்றைய சிங்கள அரசு, அநுராதபுர நகரத்துத் தமிழரின் மேன்மையை அழித்தொழிக்க அப்பொழுதே திட்டமிட்டுக் கொண்டது. இதற்கோர் எடுத்துக் காட்டை மட்டும் இங்கு சுட்டலாம். அந்நாளில் (1950களில்) அநுராதபுர நகரின் ஊராட்சி மன்ற உறுப்பினர்களில், ஒருவரைத் தவிர, மன்றத் தலைவர் திரு. ஆர். விகந்தசாமி உட்பட பெரும்பான்மை உறுப்பினர்கள் அனைவரும் தமிழராகவே இருந்தனர். இத்தலைவருடைய காலத்தில்தான் மேற்குறித்த 'புதிய நகர்த்திட்டமும்' வந்தது. அப்பொழுது காரணமில்லாத ஒரு காரணத்தை வைத்து, இம்மன்றத்தைக் 'கலைத்து, தமது திட்டத்தை நிறைவேற்ற திரைமறைவில் அரசு செயற்பட்டமையையும் இங்கு நினைவு கூர்வது நல்லது.

* * *

எல்லாளன் முதல், தமிழ் வீர மறவர் பலர் வாழ்ந்த அப்பூமி, இன்று சிங்கள பௌத்த இனவாதிகளின் கைக்கு இடம் மாறிவிட்டது.

* * *

மேற்குறித்த திட்டங் காரணமாக இந்நகரில் வாழ்ந்த தமிழரின் பாரம்பரியக் காணிகளும், உடமைகளும் சுவீகரிக்கப்பட்டன. நகரைச் சூழவுள்ள தமிழரின் வயல்கள், தோட்டங்களுக்கு இடையே பொதுப்பாதைகளும், ஒழுங்கைகளும், அரசபௌத்த கட்டிடங்களும் அமைக்கப்பட்டன. இக்கைங்கரியத்தை இரவோடு இரவாகச் செய்த பெருமை ஒரு காலத்தில் சிறி.ல.சு. கட்சிக்குப் ஐபின் நின்றவரும், பிறிதொரு காலத்தில், ஐ.தே.க. அரசில் அமைச்சராக இருந்தவரும், தற்பொழுது, கண்டி தலதா மாளிகை 'தியாவன நிலமே'யாக இருப்பவருமான திரு. நிசங்க விஜய ரத்தினாவையே சாரும். (இவர் 50-60 களில் அநுராதபுரம் அரச அதிபராகவும் யாழ். சத்தியாக்கிரக காலத்தில் விசேட அரச அதிபராகவும் இருந்தவர்.) நகரையடுத்து வயல் நிலங்களாகவும் பொன் விளையும் பூமிகளாகவும் இருந்த பழம் பெரும் தமிழ்க் கிராமங்களான பொன்னாவரங்குளம், குமிச்சன்குளம், நுவரைக்குளம் போன்ற பிரதேசங்களைத் தமிழரிடமிருந்து சுவீகரித்து, அவற்றை உள்ளடக்கிய பிரதேசத்தில் அநுராதபுரம் புதியநகர் நிருமாணம் ஆரம்பிக்கப்பட்டது.

இத்திட்டங் காரணமாகப் பாதிக்கப்பட்ட தமிழர்கள் எதிர்ப்புகள் தெரிவித்து இடம் பெயராது இருந்தனர். இருந்தும், 1957 மார்கழியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாகவும் வற்புறுத்தி வெளியேற்றப்பட்டதன் காரணமாகவும் அம்மக்களிற் பலர் பழைய நகரில் இருந்து, பேரிழப்புக்குப் பின்னர் புதிய நகருக்கு இடம் பெயர்ந்தனர். இதனையடுத்து, 1958ல் ஏற்பட்ட முதலாவது இனக் கலவரங் காரணமாக நகரில் நீண்ட காலம் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்த தமிழர்கள், இறந்தவர் போக எஞ்சியோர் வலுக்கட்டாயமாக 'ஊத்தை லொறிகளில்' ஏற்றப்பட்டு வவுனியாவுக்கு அப்பால் இறக்கப்பட்டனர். இருந்தும், 1960க்குப் பின், மீண்டும் தமிழர் சிலர் அங்கு சென்று, இழந்தவை போக எஞ்சிய உடமைகளுடன் வாழத் தலைப்பட்டனர். புதிய நகரில் 'கஞ்சிக்குப் பயறு போட்டது' போல், சிங்களப் பெரும்பான்மைக் குடிகளுக்குள் பெற்ற கால், அரை ஏக்கர் காணிகளில் (அரச குத்தகை Lease- காணிகள்) புனர்வாழ்வு பெற அத்தமிழர் முயன்றனர்.

இது ஒரு காலச் சுவடு!

இதன் பின்னரும் (1956க்குப் பின்) அத்தமிழரின் வாழ்வு ஈடாட்டமுற்று, 1977ல் முற்றாக அழிக்கப்பட்டது. 1977ன் இனக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கலவரத்தின் போது, மீண்டும் தலையெடுக்க முனைந்த அநுராதபுரத் தமிழர் பலர், காயுங் கனியுமாய் மட்டுமன்றி, பூவும் பிஞ்சுமாய் படுகொலை செய்யப்பட்டனர். அவர் தம் வீடுகள், உடமைகள் தீயிடப் பட்டன. பொருள்களும் கொள்ளையடிக்கப்பட்டன. பாதுகாப்பு தருவதாக இராணுவ முகாமுக்குள் அழைத்துச் செல்லப்பட்ட ஆலயக் குருக்கள் தமிழ்ச் சட்டத்தரணிகள் போன்ற அப்பாவித் தமிழர்கள் பலர் சுட்டுத் தள்ளப் பட்டனர். இதன் பின்பும், தப்பியொட்டி அங்கு குடியிருந்த தமிழர் 1985ல் மீண்டும் படுகொலைக்கு ஆளாகி உயிரிழந்து போயினர்.

**இப்பொழுது**

இங்கு, தமிழ்ச் சிறாரின் கல்வி, கலை, கலாச்சாரப் பண்பாடுகளை வளர்த்த ஒரே யொரு நிறுவனமாக விளங்கிய, அநு/விவேகானந்த மகா வித்தியாலயம் முஸ்லீம்களின் உடமையாகிவிட்டது. இந்துக்களின் பேராலயமான கதிரேசன் ஆலயம் சிதைக்கப்பட்டுத் தொல்பொருட் சின்னமாக பற்றையும் புதரும் மூடிக்கிடக்கிறது. பண்டு தொட்டு ஆண்டு அநுபவித்த தமிழரின் வயல்கள், தோட்டங்கள், கடைகள், கட்டிடங்கள் சிங்களவரினதும் முஸ்லீம்களினதும் உடமைகளாகிவிட்டன.

எல்லாளன் முதல், தமிழ் வீரமறவர் பலர் வாழ்ந்த அப்பூமி, இன்று சிங்கள பௌத்த இனவாதிகளின் கைக்கு இடம் மாறிவிட்டது.

# வதிவிட வேளாண்மைப் போட்டி சில கருத்துக்கள்

"போட்டியில் பங்களித்தவர்களுக்கும், வெற்றியீட்டியவர்களுக்கும் இப்பரிசழிப்பு விழா ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறது. எரிபொருள் இல்லாத போதும் எமது வளங்களை உற்பத்தியாளர் பயன்படுத்தி எமது மக்களைப் பட்டினிச் சாவிலிருந்து விடுபடச் செய்தனர். இவர்கள் மாற்றீடுகளைக் கையாண்டு, பொருளாதாரத் தடைகளை உடைத்தெறிந்தனர்."

திரு. பாலகுமார்.

"எமது தேவைகளைப் புரிந்து விடுதலைப்போர் ஒரு பக்கமும், உற்பத்தியில் மறுபக்கமும் அமையுமாறு நாம் போராட வேண்டும். இயற்கை வளங்களை இனங்கண்டு, உரிய முறையில் பயன்படுத்தி உற்பத்தியில் ஈடுபடுவோம். அதனால் விரைவில் எமது உணவுத் தேவையை பூர்த்தி செய்வோம்."

திரு. குணரட்ணம்

"தமிழீழ ஆய்வு நிறுவனமானது பல உற்பத்தி முயற்சிகளில் ஈடுபட்டு முன்மாதிரியாகத் திகழ்கிறது. இதன் அபிலாசைகளுக்கு ஏற்ப மேலும் வளர்ச்சியடைய நான் அரச அதிபர் என்ற முறையில் உதவிகளைச் செய்யவும் இதன் முக்கியத்துவத்தை அனைத்து மக்களும் அறியும்படியான நடவடிக்கைகளையும் மேற்கொள்வேன். இப்போட்டி உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதால் இதனைத் தொடர்ந்து செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்."

திரு. மாணிக்கவாசகர்.

"தமிழ் மக்கள் மீதான அடக்குமுறையுள்ள இக்காலகட்டத்தில் நாம் பசுமைப் புரட்சியை மேற்கொள்வதன் அவசியத்தையும், மறந்துபோன எமது உற்பத்தி முறைகளுக்கு மாற்றீடாக புதிய முறைகளைக் கொண்டு எவ்வாறு உற்பத்திகளைப் பெருக்கலாம் எனச் சிந்திக்க வேண்டும். இவர்களை ஊக்குவிக்கும் இந்த போட்டி முக்கியமானது."

திரு. சண்முகநாதன்.

"தமிழர்களாகிய நாம் எம்மண்ணில் தன்னிறைவு காண வேண்டும் என்ற நோக்கோடு இப்போட்டி நடாத்தப்பட்டது. முன்பு நடந்தது போல் அல்லாமல், விலங்கு வேளாண்மையையும் சேர்த்து நடாத்தப்பட்ட இப்போட்டி போற்றத்தக்கதாகும்."

திரு. அரசரட்ணம்

"மற்றைய மாவட்டங்களை விட யாழ். மாவட்டம் விவசாயத்துறையில் தனி இடம் வகித்த போதும், அதிகளவு விவசாயிகள் தானியப் பயிர் செய்கையை விட்டுப் பணப் பயிர் செய்கையில் ஈடுபடுவது கவலைக்குரிய விடயமாகும். நெற்செய்கை கூட மழையை நம்பி இருப்பதால், பருவ மழை பொய்க்காவிடின் யாழ். மாவட்டம் வளங்கொழிக்கும் ஒரு பூமியாகும். விவசாயப் பயிற்சி வழங்குவதில் ஆர்வங் காட்டும் எம் திணைக்களம், நீர்ப்பாசனம் சம்பந்தமாகவும் பல பயிற்சிகளை நடாத்தி வருகின்றது. இன்றைய காலகட்டத்தில் பூரண சந்தைப்படுத்தல் இல்லாமையால், விவசாயிகள் பல இடர்களை எதிர்நோக்குகின்றனர். இதற்கான ஒரு திட்டம் வகுக்கப் பட வேண்டும்."

திரு. குணரத்தினம்.

■■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விடுதலை மாலை

உணர்வும் உயிர்ப்புமாய்
எம் மண்ணின் யதார்த்தம் தோய்ந்த நிகழ்வுகளின்

## கலை வடிப்புக்கள்

**எங்கட கடல்** (சமுக நாடகம்)
பிரதியாக்கம்: கிருஷ்ணா (தமிழீழம்)

**இரவு விடியும்** (ஒரு நிகழ்வு)

**அவலங்கள்** (தாளலய நாடகம்)
பிரதியாக்கம்: புதுவை அன்பன் (தமிழீழம்)

**வேடனை உச்சிய வெண்புறாக்கள்** (சிறுவர் நாடகம்)
பிரதியாக்கம்: சி.மௌனகுரு (தமிழீழம்)

**மண்ணின் பாடல்களில் மலரும் நாட்டியங்கள்**

**மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகள்**

காலம்: 27.06.1993 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: பிற்பகல் 5.30 மணி
இடம்: 80, Bd. Rochechouart, 75018 Paris.
Metro: Anvers.

விடுதலைப் புலிகள்
கலை பண்பாட்டுக் கழகம்
பிரெஞ்சுக் கிளை.
Tel: 43 58 11 42

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்